# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 215 | ஆனி 15ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 29 ஜூன் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## தொலைக்காட்சியில் மூழ்க பறந்தது 40 ஆயிரம் ரூபா

*கொள்ளையர் கைவரிசை*

யாழ்ப்பாணம், ஜூன் 29
வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த குடும்பப் பெண்ணின் வாய்க்குள் துணியை அடைத்து, கட்டி வைத்த கொள்ளையர், வீட்டில் >> 06

## சிறுமிக்கு நீதி கோரி இன்று கடையடைப்புக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
சுழிபுரம் காட்டுப்புலம் சிறுமியின் கொலையைக் கண்டித்தும், உரிய நீதிவேண்டியும் இன்று கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. காட்டுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், கிராம வாழ் மக்கள், தனியார் அமைப்புகள் மற்றும் மக்கள் சக்தி அமைப்பு என்பவற்றின் ஆதரவுடன் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு >> 23

## மானிப்பாயில் வாள்வெட்டு 4 பேர் மருத்துவமனையில்

### வீடு மீது மீண்டும் தீ வைப்பு பொருள்கள், சிசிரிவி சிதறின

யாழ்ப்பாணம், ஜூன் 29
மானிப்பாயில் நேற்று அதிகாலை வீடுபுகுந்து பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தி, பொருள்களை நாசமாக்கி, வாள்வெட்டும் நடத்தியுள்ளது 10 பேர் >> 06



## சிறுமி கொலைக்கு நீதி வேண்டி சுழிபுரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
சுழிபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட றெஜினாவுக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும் என்று கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அதனால் அங்கு இயல்பு நிலை பாதித்தது. காலை 7மணியிலிருந்து பல மணித்தியாலங் >> 23

## 8 மணித்தியாலங்களாக சுழிபுரம் பாதை முடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
சிறுமியான மாணவிக்கு நீதி கோரிய பெரும் ஆர்ப்பாட்டத்தால் சுழிபுரத்தில் இருந்து காரைநகருக்குச் செல்லும் பாதை முற்றாக முடங்கியது.
காலை 7மணியளவில் ஆரம்பித்த போராட்டத்தின் போது போராட்டக் >> 06

## எம்.பிக்கள் வரும்வரை அதிகாரிகள் வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 29
ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி இரண்டு மணிநேரங்களாக பிரதேச அதிகாரிகள் எவரும் சம்பவ இடத்துக்கு வரவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வருகை தந்ததன் >> 23

## மாகாண அமைச்சர்கள் மீது பிரதேச மக்கள் கடுஞ் சீற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
றெஜினாவின் படுகொலையைக் கண்டித்து, அவருக்கு நீதி கோரிய ஆர்ப்பாட்டத்துக்கு வடக்கு மாகாண அமைச்சர்கள் வருகை தராததால் பிரதேச மக்கள் கடும் விசனம் தெரிவித் >> 24

## த.தே.கூ. தவிசாளர் ஆளுமையற்றவராம் முன்னணியின் தவிசாளரே வேண்டும்

சு.கவின் இராமநாதன் சபையில் காரசாரம் >> 06

# சட்டமோ, அரசியல் திருத்தமோ வடக்கு மனங்களை வெல்லாது

## இரக்கம், பரிவுதான் வேண்டுமென்று கூறுகிறார் வடக்கு மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடக்கு மக்களுக்கு கருணை, இரக்கம், பரிவு என்பனவே தேவை. இதனைவிடுத்து சட்டத்தின் மூலமோ, அரசியல் திருத்தங்கள் மூலமோ அவர்களின் மனங்களை வென்றுவிட முடியாது. இதனை நாடு முழுவதும் தெளிவுபடுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.
பௌர்ணமி தினத்தை முன்னிட்டு பாதிக்கப்பட்டவர்களில் குறிப்பிட்ட தொகையினருக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலக முன்றிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரை யாற்றுகையில் ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது: >> 06

## கத்தியால் குத்தி மூதாட்டி கொலை பிச்சை கேட்டுச் சென்றவர் கைது

*மானிப்பாயில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூன் 29
வீட்டில் இருந்த மூதாட்டி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். பிச்சை எடுக்கச் சென்றார் என்று கூறப்படும் நபரே கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் >> 06

ஒட்டுசுட்டான் கிளைமோர் விவகாரம்:

## புலனாய்வு அதிகாரிக்கு அரசு பெரும் துரோகம்

*சீறுகிறார் சரத் வீரசேகர*

கொழும்பு, ஜூன் 29
விடுதலைப் புலிகளின் புலனாய்வு அமைப்புக்குள்ளும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் பணிபுரிந்தனர். இன்னமும் அப்படியானவர்கள் இருக்கின்றனர். அப்படிப்பட்ட >> 06


## ஒட்டுசுட்டான் ஆயுதங்கள் மீட்பை தவறாக அர்த்தப்படுத்தக் கூடாது

ஆளுநர் குரே >> 06

## வடக்கில் நடக்கும் குற்றங்களுக்கு போதைப் பொருள்களே காரணம்

*மாணவிக்கு நீதிகோரிய கவனவீர்ப்பில் யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடக்கு மாகாணத்தில் அநேகமான குற்றச் செயல்களுக்குக் காரணம் போதைப்பொருள் பாவனையே என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.
சுழிபுரம் சிறுமி றெஜினா பாலியல் வன்கொடுமைக்குப் பின்னர் கொல்லப்பட்டமையைக் கண்டித்தும் அதற்கு நீதி வேண்டியும் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக >> 06







ஒவ்வொரு முறையும் Card மூலம் செலவு செய்யும் தொகையின் 1% உங்களுடைய DFCC வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும்.

DFCC கடனட்டை

உங்கள் சேமிப்பை வளரச் செய்ய உங்களுக்கு உதவும் கார்ட்டைப் பெற்றுக் கொள்ள இன்றே எம்மை அழையுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம் 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களில் மாற்றம் வேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



நுவரெலியா,ஜூன் 29

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகப் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் அதிக கவனம் செலுத்துவதுடன் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களில் இலங்கையின் சட்டத்துறை வல்லுநர்கள் சிந்தித்து கடுமையான மாற்றம் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கொழும்பு கல்வி அமைச்சின் காரியாலய அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பெற்றோர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த சில நாள்களாக பல துர்ப்பாக்கியமான சம்பவங்கள் பாடசாலை மாணவர்களுக்கு நடைபெற்றுள்ளமை மிகவும் கவலைக்குறியதும் கண்டிக்கத்தக்கதுமான விடயமாகும்.

இந்தச் சம்பவத்தில் தங்களுடைய குழந்தைகளை இழந்துள்ள அந்த குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்ற அதே வேளை இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எனது கண்டனத்தையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாணவி வித்தியாவின் சம்பவம் எமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்தாலும் அதன் பின் மீண்டும் இவ்வாறான ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம் நடைபெற்றுள்ளமையானது இன்னும் எங்களுடைய சட்டத்துறையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சட்டங்கள் இறுக்கமாக இருக்கவேண்டும் என்ற சிந்தனையை எம்மில் சிந்திக்கத் தோன்றுகின்றது. பாடசாலை மாணவர்களிடையே எற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி ஒரு பாடசாலை மாணவன் உயிரிழந்த சம்பவம் மிகவும் வேதனைக்குறிய ஒரு செயற்பாடாகும்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக் செயற்படுகின்ற அரச திணைக்களங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன இது தொடர்பாக இன்னும் அதிக கவனஞ் செலுத்தவேண்டும்.

அதற்கான முழுமையான ஒத்தழைப்பையும் வழங்க கல்வி அமைச்சு தயாராக இருக்கின்றது.

அதே நேரத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சிறப்பு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி எந்தளவுக்குளங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்திருக்கின்றது என்று சிந்தித்துப் பார்த்தால் அது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

எனவே சிறுவர் தொடர்பான சட்டங்கள் இன்னும் இறுக்கமாகவும் மிக விரைவாகவும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையிலும் அவை அமைய வேண்டும் - என்றார். (ற,ரி4)



# நிதி ஒதுக்கீடுகள் இன்மையால் தாமதமாகும் அகழ்வுப் பணிகள்

மன்னார், ஜீன் 29

மன்னார் சதொச வளாகத்தில் நேற்று 23ஆவது நாளாகவும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன்னிலையில், சிறப்பு சட்ட மருத்துவ நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ. எஸ்.ராஜபக்ச தலைமையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. களனிப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ராஜ்சோம தேவா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அகழ்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் மனித வளப் பற்றாக்குறை காணப்பட்டதை அடுத்து நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள், பயிற்சிநிலைப் பேராசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் எனப் பலர் இந்த அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் சதொச வளாகத்தில் இருந்து இதுவரை 30 மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன. பல எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதையடுத்து வளாகம் முழுவதும் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதிப் பங்களிப்பை சதொச நிறுவனத்திடம் கோரிய போதும் அது தொடர்பில் சாதகமான பதிலை அந்த நிறுவம் இதுவரை வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த நிறுவனம் நிதிப் பங்களிப்பு வழங்காத பட்சத்தில் அரசின் நிதி ஒதுக்கீட்டு கிடைக்கும் வரையில் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்று அறிய முடிகின்றது.

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த லங்கா சதொச கட்டடம் உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்றன. அந்தக் காணியில் அகழப்படும் மண் விற்பனை செய்யப்படுகின்றது. அங்கு கொள்வனவு செய்யப்பட்டு மன்னார்.

எமில்நகரில் வீடொன்றில் கொட்டப்பட்ட மண்ணில் மனித எலும்பு எச்சங்கள் காணப்படுகின்றன என்று வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அங்கு சென்று மண்ணை ஆராய்ந்ததுடன், மன்னார் நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தனர்.

மார்ச் 27 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 3 நாள்கள் மன்னார் நீதிவான் ஏ. ஜீ.அலெக்ஸ்ராஜா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் முன்னிலையில் மண் குவியலில் இருந்தும், வீட்டுவளாகத்துக்குள் பரப்பப்பட்ட மண்ணிலிருந்தும் சந்தேகத்துக்கிடமான எலும்புத்துண்டுகள் மீட்கப்பட்டன. அதையடுத்து லங்கா சதொச கட்டட கட்டுமானம் இடைநிறுத்தப்பட்டது. (ற-56)



# குடிதண்ணீர் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜீன் 29

மட்டக்களப்பு பெரிய புல்லுமலையில் அமைக்கப்பட்டுவரும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் தயாரிக்கும் தொழிற்சாலையை உடனடியாகத் தடைசெய்யக் கோரி செங்கலடியில் ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று நடைபெற்றது.

செங்கலடி வர்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்பாட்டப் பேரணியில் கட்சி பேதமின்றி அரசியல் பிரதிநிதிகள் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை முன்றிலில் ஒன்று திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவண்ணம் பிரதேசசபையின் நுழைவாயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் தயாரிக்கும் தொழிற்சாலைக் கட்டடம் அமைக்கும் பணிகளை நிறுத்துமாறு கோரி பிரதேச சபை உப தவிசாளர் கா. இராமச்சந்திரனிடம் மனு கையளிக்கப்பட்டது.

இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பதுளை வீதியூடாகப் பேரணியாக பிரதேச செயலகம் வரை சென்று அங்கு பிரதேச செயலாளர் ந. வில்வரெட்னத்திடம் கோரிக்கைகள் அடங்கிய மனுவைக்கையளித்தனர். (ற,ரி4)

# நீரில் மூழ்கி இருவர் சாவு

கொழும்பு,ஜீன் 29

இரு வேறு இடங்களில் குளத்தில் குளிக்கச்சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கரல்ல இப்பாகமுவ குளத்தில் குழு ஒன்றுடன் குளிக்கச் சென்ற நபரே நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

இங்குருவத்தையைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். இதேவேளை மஹியங்கனை தம்பராவ வாவியில் தாமரை மலர்களைப் பறிக்க சென்ற நபரொருவர் உயிரிழந்தார்.

ரம்புக்யாய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

# கட்டுப்பாடு இழந்த பிக்கப் மின் கம்பத்துடன் விபத்து

தென்மராட்சி, ஜீன் 29

வேகக்கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் ரக வாகனம் வீதியோர மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் வாகனமும், மின்கம்பமும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கன்கம்புளியடி புத்தூர் வீதியில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் நடநதுள்ளது.

விபத்தில் வீதியோரம் இருந்த உயர் அழுத்த மின் கம்பத்துடனே வாகனம் மோதியது. அதில் கம்பம் முறிந்து சாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)



# போதைப் பொருள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி,ஜீன் 29

தென்மராட்சியில் போதைப் பொருள்கள் எதிர்ப்பு தினத்தையொட்டி மாணவர்களுக்கான விழிப்பணர்வுக் கருத்தரங்குகள் நேற்று நடைபெற்றன.

இந்தக் கருத்தரங்கு போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைப்பினரால் நடத்தப்பட்டது.

இதில் போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் விழிப்புணர்வு நிகழ்வுகளும் பரிசில் வழங்கல்களும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற,ரி4,9)



## நிறைவு தினத்தை முன்னிட்டு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

மட்டக்களப்பு,ஜீன்29
மட்டக்களப்புநகரரைத்தூய்மைப்படுத்தும்வேலைத் திட்டம்மட்டக்களப்புமெதடிஸ்தமத்தியகல்லூரிமாண வர்களால் முன்னெடுக்கப்பட்டது.
மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 204 ஆம் ஆண்டுநிறைவு தினம் எதிர்வரும் 29 ஆம் திகதி கொண்டாடுவதை முன்னிட்டு, குறித்த வேலைத்திட் டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.
மட்டக்களப்பு வாவிக்கரை மற்றும் காந்திபூங்கா, தனி யார்சிறுவர்பூங்கா, இலங்கைபோக்குவரத்துச்சபை பேருந்து நிலையப் பகுதிகள் ஆகியவை மாணவர்க ளால் தூய்மைப்படுத்தப்பட்டன.
குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் மெதடிஸ்த மத்திய கல்லூரியின் சாரணர் இயக்கம், சென் ஜோன்ஸ் அம் புலன்ஸ் பிரிவு, கடற் படை, சுகாதாரக் கழகத்தினர் ஆகியோர் இணைந்து மட்டக்களப்பு நகரைத் தூய் மைப்படுத்தும் பணியை முன்னெடுத்தனர். (ற,ரி2)

### தேசிய சிறுநீரக மருத்துவமனை

## கட்டுமானப் பணிகளை பார்வையிட்ட மைத்திரி

கொழும்பு,ஜீன்29
அரசதலைவரால்சீனஅரசிடம்முன்வைக்கப்பட்டவேண் டுகோளுக்கிணங்கசீனஅரசின்நன்கொடையில்அமைக் கப்பட்ட பொலன்னறுவை தேசிய சிறுநீரக மருத்துவம னையின் கட்டுமானப் பணிகளை அரச தலைவர் மைத் திரிபால சிறிசேன நேற்றுப் பார்வையிட்டார்.
இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
தேசியசிறுநீரகமருத்துவமனைத்தளத்துக்குப் பயணம் மேற்கொண்டஅரசதலைவர்அதன்கட்டுமானப்பணிகள் தொடர்பில் கேட்டறிந்தார்.
சிறுநீரக நோயால் அல்லலுறும் மக்களுக்காக நிறை வேற்ற வேண்டுமென அரச தலைவரின் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யும்வகையில், ரூபா12 ஆயிரம்மில்லியன் செலவில் தெற்காசியாவில் விசாலமான சிறுநீரக மருத்து வமனையாக இது அமைக்கப்படுகின்றது.
24மாதகாலத்துக்குள்நிறைவுசெய்யத்திட்டமிடப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் கட்டுமானப் பணிகளை 2020 ஜீலை மாதத்தில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.
மருத்துவமனை கட்டுமானப்பணிகளைத்துரிதப்படுத்தி, அதன் அனுகூலங்களை சிறுநீரக நோயாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அரச தலைவர இதன்போது அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டி னார்.
பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வரலாற்று புகழ்மிக்கபொலன்னறுவைபுண்ணிய பூமிக்குவருகை தந்திருந்த மக்களுடன் சுமுககலந்துரையாடலில் ஈடுபட்ட அரசதலைவரிடம் அந்த மக்கள் தமதுபிரச்சினைகளைத் தெரிவித்தனர் - என்றுள்ளது. (ற,ரி2)

# மாகாணசபைத்தேர்தலைநடத்த நாடாளுமன்றம் ஒத்துழைக்கும்

### மகிந்த தேசப்பிரியவிடம் கரு ஜயசூரிய உறுதியளிப்பு

கொழும்பு, ஜீன் 29
மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்ததேசப்பிரியவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நேற்று இடம்பெற்றது. மாகாண சபைத்தேர்தலைதாமதிக்காமல் உடன் நடத்தநடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாடாளுமன்றம் ஒத்துழைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைகுழுவின் தலைவர் மகிந்த தேசப் பிரிய வலியுறுத்தியதனையடுத்து தேர்தலை உடன் நடத்துவதற்கு நாடாளுமன்றம் முழு ஒத்துழைப் புகளை வழங்கும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய பதிலளித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எதிர்வரும் 5ஆம் திகதி சபை ஒத்தி வைப்பு வேளை விவாதம் நடத்தவுள்ள தாக இங்கு தீர்மானிக்கப்பட்டது. உடன டியாகத் தேர்தலை நடத்துவது குறித்து தலைமை அமைச்சருடனும் கட்சித் தலைவர்களுடனும் முக்கிய சந்திப் பொன்றைநடத்தவும்தீர்மானிக்கப்பட்டது.
நாடாளுமன்றத்தின் கட்டடத்தொகுதி யில் சபாநாயகர் கரு ஜயசூரிய, தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோருக்கு இடை யில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற் றது. எல்லை நிர்ணய ஆணைக்குழு வின் தலைவர் தவலிங்கமும் உறுப்பி னரானஹிஸ்புல்லாவும்கலந்துகொண் டனர்.
மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பில்நீண்டநேரம் கலந்துரையா டப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது. தேர் தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மாகாண சபை தேர் தலை உடன் நடத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியுள்ளார்.
'எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை உடன் விவாதத்துக்கு எடுக்க வேண் டும். பழையமுறைமையில்நடத்துவதா யினும் அதன் அதிகாரமும் நாடாளுமன் றத்திடமே உள்ளது. நாடாளுமன்றம் தேர்தலை நடத்த ஒத்துழைக்க வேண் டும்' என்று தேர்தல்கள் ஆணைக்குழு வின்தலைவர்மகிந்ததேசப்பிரியசுட்டிக் காட்டியுள்ளார்.
சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜனநாயகத் தின்மீதுமக்கள்வைத்துள்ளநம்பிக்கை யைப் பாதுகாப்பதற்கு நாடாளுமன்றம் தயாராக உள்ளது. அதற்கு அமைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவ தற்கு நாடாளுமன்றத்தினால் ஒத்து ழைப்பு வழங்கப்படும். மாகாண சபை தேர்தல் முறைமை மற்றும் எப்போது தேர்தல் நடத்த வேண்டும் என்பது தொடர்பாகஐந்தாம்திகதிவிவாதம்நடத் தவுள்ளோம். இதன்போது எல்லை நிர் ணயம் தொடர்பாக கட்சிகளினால் முன் வைக்கப்படும் கருத்துகளுக்கு எல்லை நிர்ணய குழு செவிசாய்க்க வேண்டும். கட்சிகளின் யோசனைகள் குறித்து அவ தானம் செலுத்த வேண்டும் என்றார்.
இந்தக் கூட்டத்தின் போது கடுமையான வாக்குவாதங்களும் இடம்பெற்றுள்ள தாக தெரியவருகின்றது. (5,61)

## பிரவெனாமண்டபம் திறந்து வைப்பு

கொழும்பு,ஜீன்29
வரலாற்றுமுக்கியத்துவமிக்கதிம்புலாகலைஆரண்ய சேனாசனவில்புதிதாகஅமைக்கப்பட்டுள்ளபிரவெனா மண்டபம், மகா சங்கத்தினருக்கான தங்குமிட விடுதி மற்றும் புதிய நுழைவாயில் ஆகியவற்றை அரசதலை வர் மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்தார்.
அரசதலைவர்ஊடகப்பிரிவுஅனுப்பிவைத்துள்ளஅறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
திம்புலாகலை ஆரண்ய சேனாசனவுக்குப் பயணம் செய்த அரசதலைவர், நினைவுப்பலகையைதிரைநீக் கம்செய்து மகாசங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் பிரிவெனா கட்டடத் தொகுதி மற்றும் மகா சங் கத்தினருக்கானதங்குமிடவிடுதியையும்திறந்துவைத் தார்.
மன்னர்காலம்முதல்நாட்டின்முக்கிய ஆரண்யசேனா சனவாக விளங்கும்திம்புலாகலைஆரன்யசேனாசன வில் உள்ள பிக்குகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கி உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்கள் தரிசிப்பதற் கான புண்ணிய பூமியாக இதனை அபிவிருத்திசெய் யும்நடவடிக்கைகள்தொடர்ச்சியாகமுன்னெடுக்கப்படும் என்று அரசதலைவர் இதன்போது தெரிவித்தார்.
'எழுச்சிபெறும் பொலனறுவை' மாவட்ட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத் தொகுதிகளுக்காக400லட்சம்ரூபாசெலவிடப்பட்டுள்ளது.
திம்புலாகலை ஆரண்ய சேனாசனவின் தலைவர் சங் கைக்குரிய மில்லானே சிரியாலங்கார நாயக்க தேர ருக்கு விகாரையின் ஓவியமொன்றை அரசதலைவர் வழங்கினார். (ற,ரி2)

## மருத்துவர் என்ற போர்வையில் மோசடி செய்தவர் கைது

கொழும்பு,ஜீன்29
மருத்துவர் என்ற போர்வையில், நிதி மோசடி செய்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சுமார் 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நிதி மோசடி செய்த சந்தேகநபர் நீர்கொழும்பு குற்றவிசாரணை பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
பெண்களைத்திருமணம்செய்துகொள்வதாகஏமாற்றி மோசடி செய்துள்ளதாகச் சந்தேகநபருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பமுனுகம, கந் தானை, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய பிரசேங்களில் சந்தேகநபர் மோசடி செய்துள்ளதுடன், பலநபர்களிடம் நிதி மோசடி செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.
கொழும்பு, புறக்கோட்டைப் பகுதி விடுதி ஒன்றில் தங்கி யிருக்கும் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.
பமுனுகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஒரு வரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து மருத்துவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ற,ரி2)


## கல்விகாரையில் சின்னங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு

கொழும்பு,ஜீன்29
பொலன்னறுவை வரலாற்று முக்கியத்துமிக்க கல்விகாரை யில் இடம்பெறும் புனித சின் னங்களைக் காட்சிப்படுத்தல் மற்றும் பொதுமக்கள் தரிசிப்ப தற்காக அரச தலைவர் மைத்தி ரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது.
கண்டி நெல்லிகல பன்னாட்டு பௌத்தமத்தியநிலையத்திலிரு ந்து இந்தப் புனித சின்னங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.
இவ்வாறு அரச தலைவர் ஊட கப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,
மக்கள் தரிசிப்பதற்காக புனித சின்னங்கள்வைக்கப்பட்டுள்ள விசேட பேழையை நிறுவிய அரச தலைவர், முதலாவது மலர்பூஜையை செய்தார்.
சங்கைக்குரிய கந்தகெடியே அத்ததஸ்ஸி தேரரால் சிறப்பு சமய கிரியைகளும் நடத்தப் பட்டன.
இராணுவத் தளபதி லெப்டினல் மகேஸ்சேனாநாயக்க,பொலன் ன்றுவை நகர பிதா சானக்க சித்த் ரணசிங்க, பொலன்ன றுவை மாவட்டச் செயலர் ரஞ் சித் ஆரியத்ன ஆகியோர் நிகழ் வில் கலந்து கொண்டனர். (ற,ரி2)

## எரிபொருள் பவுசர் உரிமையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜீன் 29
எரிபொருள்விநியோகத்தில்ஈடு படும்தாங்கிஉரிமையாளர்கள் (பவுசர்) இன்று வெள்ளிக்கி ழமைநள்ளிரவுமுதல்இரண்டு நாள்கள் சேவைப் புறக்க ணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.
இரண்டு தினங்களுக்கு பெற் றோல், டீசல் விநியோகப் பணி கள்தாமதமடையும்என்றுதெரி விக்கப்பட்டுள்ளது. (5)





யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரியின் ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் ஏற்பாட் டில் குருதிக் கொடை முகாம் அண்மையில் கல்லூரியில் இடம் பெற்றது. இதன்போது ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் குருதிக்கொடை வழங்கினர்.

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவருக்கு 20,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 29

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றனர் என்ற குற்றத்துக்காக இருவருக்கு சாவகச்சேரிநீதிமன்றுதலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

சாவகச்சேரி பொலிஸார் மட்டுவில் தெற்கு மற்றும் மட்டுவில் சந்திரபுரம் பகுதிகளில்நடத்தியதிடீர்பரிசோதனையின் போது இருவரும்கைதுசெய்யப்பட்டனர். இருவர் மீதும் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் மன்றில் விசாரணைக்குஎடுக்கப்பட்டபோது விசாரித்தநீதிவான் இருவருக்கும்தலா10ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். (9)

## மாணவியான சிறுமியின் கொலைக்கு வடக்கு அதிபர்கள் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

காட்டுப்புலம் அ.த.க.பாடசாலை மாணவி சிவனேஸ்வரன் றெஜினாவின் கொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான கொலைகள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடைபெறுவது கண்டனத்திற்குரியதே.

இவ்வாறு வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கம் நேற்று அனுப்பிய கண்டனக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டதாவது,

நீதித்துறை இவ்வாறான கொலைகளுடன் தொடர்புடையவர்களைத் தண்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் நடைபெறாமல் தடுக்கலாம் என்பது எமது நம்பிக்கை.

போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில்அதிகரித்துவரும் போதைப் பொருள்கள் பாவனைஇளைஞர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்வதையாவரும்மறுக்க முடியாது. எமது சிறார்கள் அச்சமின்றிப் பாடசாலை சென்று கற்கக் கூடிய சூழல் உருவாக்கப்படல் வேண்டும். இவ்வாறான செயல்களால்எமது கல்விசிதைக்கப்படுகிறது. எமது இனம் அழிவுப் பாதையில் செல்கிறதா? இல்லை திட்டமிட்டு அழிக்கப்படுகிறதா? என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த விடயத்தில் நீதித்துறையின் செயற்பாடுகாத்திரமானதாக அமையவேண்டும். இனியும்இவ்வாறானசெயல்கள் எமது பிரதேசத்தில்நடைபெறுவதை நாம் அனுமதிக்க முடியாதுஎன்று உறுதிஎடுத்துக்கொள்வோம்.

ஆகவேநீதித்துறைவிரைந்து செயற்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படல்வேண்டும் என்றுசங்கம்கேட்டுக்கொள்கிறது. பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (4.9)

## பாடசாலைகளின் பரிசளிப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்உயர்தரபாடசாலையின் நிறுவுனர்தினமும்பரிசளிப்பு விழாவும்இன்றுவெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தம்பையாமண்டபத்தில்பாடசாலையின்அதிபர்வே.சண்முகரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்துகொள்ளவுள்ளார் என்று பாடசாலையின் அதிபர்தெரிவித்துள்ளார். (4,8)

*** ***

யாழ்ப்பாணம் கொக்குவில் சிறி இராமகிருஷ்ண வித்தியாசாலையின் பரிசறிப்பு இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9மணிக்கு பாடசாலையின் கந்தையாஞாபகார்த்தமண்டபத்தில் பாடசாலையின் முதல்வர் கு.திலீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (8)

*** ***

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் பு.பஞ்சாட்சரம் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்தநிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம்கல்விவலயபணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (4.8)

நகர சபை உறுப்பினர்கள்

# வீதி திருத்துவதை நிறுத்தியதால் இழப்பீடு கேட்கிறார் ஒப்பந்தகாரர்

## ஆணையாளருடன் ஆலோசிக்கிறார் தவிசாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சபையுடன்செய்துகொண்டஒப்பந்தப்பிரகாரம்மேற்கொண்டவேலைகளை நகர சபை உறுப்பினர்கள் இடைநிறுத்தியதால் ஏற்பட்ட பாதிப்புக்குஇழப்பீடுவழங்குமாறுகோரிவேலைகளைமேற்கொள்வதற்கு ஒப்பந்தம் செய்த ஒப்பந்தகாரர் சபையிடம் கோரியுள்ளார்.

இச்சம்பவம்சாவகச்சேரிநகர சபைக்குஉட்பட்டவீதிசீரமைப்பின்போது ஏற்பட்டுள்ளது.

வேலையை மேற்கொள்ளுமாறு சபையினால் அறிவிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள்அதிகம்நடமாடாதஞாயிற்றுக்கிழமை காலை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏற்கனவே ஒப்பந்தப் பிரகாரம் பறிக்கப்பட்டு அளவு கட்டப்பட்டிருந்த கற்களை ஏற்றிப் பறிப்பதற்கும், ஏனைய வேலைகளைமேற்கொள்வதற்கும், 5 வாகனங்கள், அதற்கான சாரதிகள், கற்கள்பரவுதல்மற்றும் தார் ஊற்றுதல் போன்ற வேலைகளுக்கென15தொழிலாளர்களுடன்வேலைஆரம்பிக்கப்பட்டு தார் கொதிக்க வைக்கப்பட்டது.

அதன் பின்னர் அங்கு வந்த சபை உறுப்பினர் சபையின் தொழில் நுட்ப அலுவலர் வராதநிலையில்வேலைகள் மேற்கொள்ள வேண்டாம் என்றுதடுத்துள்ளார்.

தொழிலாளர்களால் கற்கள் அனைத்தும் வாகனங்களில் ஏற்றிப் பறிக்கப்பட்டு அடுக்கப்பட்ட நிலையில் வேலைகள் நிறுத்தப்பட்ட தால் தனக்கு தொழிலாளர்களின்கூலிவாகனங்களின் வாடகை உட்பட பெருமளவு நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது. வேலைகள் தொடர்பாகசபையின்தவிசாளருடன் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் உறுப்பினர்கள் தடுத்ததால்தனக்குநட்டம்ஏற்பட்டுள்ளது. ஏற்பட்ட நட்டத்தைச் சபைவழங்காவிடின்சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்றும் ஒப்பந்ததாரர் சபையின் தவிசாளருக்கு அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"சபை தெரிவுசெய்யப்படுவதற்குமுன்னர்வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்பட்ட போதிலும் சபை வந்த பின்னரே ஒப்பந்தம் செய்யப்பட்டது. சபையால்வழங்கப்பட்ட வேலைகளை ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளும்போது அவற்றைமேற்பார்வைசெய்வது தொழில்நுட்ப அலுவலரின் கடமை. ஒன்றுக்கு மேற்பட்டவேலைகள்நடைபெறும் போது அவற்றைப் பார்க்க வேண்டியதும் அவரது பொறுப்பு.

அந்த வகையில் கடந்த 24 ஆம்திகதிமேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் தொழில் நுட்ப அலுவலர் பார்க்கச் சென்ற வேளையில் சபையின் உறுப்பினர்கள் வந்து தொழில்நுட்ப அலுவலர் இல்லாததைக் காரணம் காட்டி வேலையை இடைநிறுத்தியுள்ளனர்.

சிறிதுநேரத்தில்தொழில்நுட்ப அலுவலர் அங்கு சென்றுள்ளார். காலையில்ஆரம்பிக்கப்பட்ட வேலைகளை இடைநிறுத்தியதால் தனக்கு ஏற்பட்ட இழப்பீட்டை வழங்குமாறு ஒப்பந்ததாரர் கேட்டுள்ளார். இதுதொடர்பாகமாகாணஉள்ளூராட்சிஆணையாளருடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன்" என்று சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதிசிவமங்கைஇராமநாதன்தெரிவித்தார். (4)

## மாணவர் ஒன்றுகூடல்

சாவகச்சேரி, ஜூன் 29

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடல் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மன்றத் தலைவர் சி.பிரதீப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றியக் கனடாக் கிளையைச் சேர்ந்த நெல்சன் குணரத்தினம் மற்றும் அதிசயம் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதனும் கலந்து கொண்டனர். (எ-9)





யாழ்ப்பாணம் எழுவைதீவு மக்களுக்கான மருத்துவ முகாம் தீவில் உள்ள சென் தோமஸ்ரோமன்கத்தோலிக்கதேவாலயத்தில் வடக்குகடற்படையினரால்கடந்த 24ஆம்திகதிநடத்தப்பட்டது. இதில்பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகள் ஆலோசனைகள். மருந்துகள் வழங்கப்பட்டன. (7)

## வெட்டு, தாக்குதல்களால் 5பேர்மருத்துவமனையில்

தென்மராட்சி, ஜூன் 29

வெட்டுக்காயம் மற்றும் தாக்குதல்களால் காயங்கள் ஏற்பட்ட ஐவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவங்கள்கடந்தஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன. மறவன்புலவைச் சேர்ந்த 22 வயது இளைஞன் கையில் வெட்டுக்காயமடைந்தார்.

தாக்குதல் சம்பவங்களில் மட்டுவில் சந்திரபுரம், மந்துவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 வயது இளைஞன், 32 வயதுக் குடும்பத் தலைவர்கள் மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.9)

## நோயாளர் காவு வண்டி சேவைக்கு அதிக அழைப்புகள் யாழிலேயே

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு மாகாணத்தில் அவசர நோயாளர் காவு வண்டிச் சேவைக்குயாழ்ப்பாணமாவட்டத்திலேயே அதிகமானதொலைபேசி அழைப்புக்கள் கிடைத்துள்ளதாகமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் அவரச நோயாளர் காவு வண்டி சேவை 24 மணித்தியாலமும் இடம்பெறுகின்றது. இதற்கான அழைப்புகள் கடந்தவருடங்களுடன்ஒப்பிடுகையில் அதிகரித்துச்செல்கின்றன.

2016ஆம்ஆண்டுஆயிரத்து503 அழைப்புக்களும், 2017ஆம் ஆண்டு 2ஆயிரத்து 291அழைப்புகளும் சேவை நிலையத்துக்கு கிடைத்துள்ளன. இந்தஅழைப்புகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2016ஆம்ஆண்டு901அழைப்புக்களும் 2017ஆம் ஆண்டு ஆயிரத்து22அழைப்புக்களும்கிடைத்துள்ளன.

ஏனைய மாவட்டங்களில் 200 தொடக்கம் 500 வரையான அழைப்புகள்கிடைத்துள்ளன. வீதி விபத்து, விஷம் அருந்தல், பிரசவம், நெஞ்சு வலி, பாம்பு தீண்டுதல்; காய்ச்சல், போன்றவற்றுக்காக நோயாளர் காவு வண்டி சேவை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



## விளையாட்டு மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு

கரணவாய், ஜூன் 29

யாழ்ப்பாணம், தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலத்தின் விளையாட்டு மற்றும்கற்றல்செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கமாக சிவன் பவுண்டேசன்நிறுவனத்தினால் ஒரு தொகை பணம்வழங்கப்பட்டது. வித்தியாலய அதிபர் இரா.ஸ்ரீநடராசா கேட்டுக்கொண்டதற்கிணங்க பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸினால் அதற்கான காசோலை வழங்கப்பட்டது. (108)

## நூல் அறிமுகமும், ஆவணப்பட திரையிடலும்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதன் 37 ஆவதுஆண்டுநினைவாக'எரிந்ததுநூலகமா? இல்லை - தாயகம்?' எனும் நூல் அறிமுகமும், ஆவணப்பட திரையிடலும் யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில்நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்தநிகழ்வில்அனைவரையும்கலந்துகொள்ளுமாறும் அனைத்துலக மனித உரிமைகள் சங்கம் அறிவித்துள்ளது. (105)

## சிறுவர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜூன் 29
யாழ்ப்பாணம் சாவகச்சேரி சமுர்த்தி வலயத்தினர் வலயஎல்லைக்குட்பட்டபகுதிகளில் உள்ள சிறுவர்கழகங்களுக்கிடையிலானவிளையாட்டுப்போட்டிகளை நுணாவில்அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடத்தவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் வெள்ளிவிழா

அளவெட்டி,ஜூன் 29
வலிகாமம்பனைதென்னைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்களின்கொத்தணியின் ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் வெள்ளிவிழா நாளை சனிக்கிழமைகாலை10.30 தலைவர் மா.தவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராககொத்தணித் தலைவர் செ.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். (63)

## மணவாளக்கோல உற்சவம்

மண்டைதீவு,ஜூன் 29
மண்டைதீவு வேப்பம்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல சங்காபிஷேக உற்சவம் நாளைசனிக்கிழமைநடைபெறவுள்ளது.
காலை 9 மணி தொடக்கம் ஆரம்பமாகும் உற்சவநிகழ்வில்சிறப்புபூசைகள்இடம்பெற்று. நண்பகல் மகேஸ்வரப் பூசை இடம்பெறும். மாலைஅம்பாள்பூந்தண்டிகையில்வெளிவீதி உலாவரும் காட்சி நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

## பொங்கல் உற்சவம்

வடமராட்சி, ஜூன் 29
வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று, வடமராட்சிதெற்குகன்னிஅம்மன்ஆலயவருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவுஆரம்பமாகிநாளைசனிக்கிழமைகாலை 6 மணிக்கு இடம்பெறும் சிறப்பு பூசையுடன் நிறைவுறும். (173)

◆◆◆◆

யாழ்ப்பாணம்,ஜூன் 29
யாழ்ப்பாணம்நீர்வேலிதெற்குமனோன்மணி அம்மன்ஆலயத்தின்வருடாந்தஆனிப்பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். காலை10 மணிக்கு சிறப்பு அபிஷேகப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று மாலை 4 மணிக்கு பொங்கல், சிறப்பு வழிபாடுகள் என்பன இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை கும்பாபிசேக தின நிகழ்வு நடைபெறும். அன்று காலை10 மணிக்கு அபிஷேகம், தீபவழிபாடு, பூசைகள் இடம்பெற்று நண்பகல் மகேசுவரர் பூசைநடைபெறும். (17)


◆◆◆◆

சாவகச்சேரி ஜூன் 29
சாவகச்சேரிநகர்வீரமாகாளிஅம்பாள்கோவில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும். காலை சிறப்பு அபிசேகம் நடைபெற்று மாலை பொங்கல் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (9)

ஊர்காவற்றுறையில் கவனிப்பாரற்று விடப்பட்டிருக்கும்

# காணிகளைத் துப்புரவு செய்ய நடவடிக்கைஎடுக்கவும்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
ஊர்காவற்று'யில் கவனிப்பாரற்று விடப்பட்டிருக்கும் காணிகளில் சமூக சீர்கேடுகள் இடம்பெறுவதாகதெரிவிக்கும் பகுதி மக்கள் அவற்றை துப்புரவு செய்வதற்குபிரதேசசபையினர்நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கைவிடுக்கின்றனர். யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பல காணிகள் கவனிப்பாரற்ற நிலையில் பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றன. இந்த காணிகளின் உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளிலும் நாட்டின் தென் பகுதியிலும் வசித்து வரும் நிலையில் இடையிடையே வந்து காணிகளை பார்வையிட்டு செல்கின்றனர். ஆனால்அவர்கள்காணிகளை துப்புரவு செய்வதில்லை. இதனால் இந்தக்காணிகளில்இளைஞர்கள்கூட்டமாக வந்து மதுபானம் அருந்துவதுடன் புகைத்தலிலும் ஈடுபடுகின்றனர். எனவேபிரதேசசபைஇந்தவிடயத்தில் கவனம்செலுத்திகாணிகளைதுப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனமக்கள்கோருகின்றனர். (எ-154)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட மலசலகூடம்நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. கனடாவில்வதியும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கல்லூரி யின் பழைய மாணவர்களான தினகரன் தம்பதியினர் இதற்கான நிதியை வழங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
யாழ்ப்பாணம் இணுவில் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும் நாளை சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு கல்லூரியின் சைவ மகாஜன மண்டபம் சரஸ்வதி கலையரங்கத்தில் அதிபர் இ. துரைசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாம வலய திட்டமிடல்பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் கா.வைத்தீஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக உடுவில் கோட்டக்கல்விஅதிகாரித.மாதவன், யாழ்ப்பாணம்இணுவில் மத்திய கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் றோ.பத்மநாதன்ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளதாக கல்லூரிச் சமூகம் தெரிவித்துள்ளது.

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்நீர்வேலிறோ.க.த.க. பாடசாலையின்பரிசளிப்புநிகழ்வுபாடசாலைமண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் தர்மரத்தினம் தலைமையில்இடம்பெறும். இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராகயாழ்ப்பாணமாவட்டம்நாடாளுமன்றஉறுப்பினர்மாவை. சோ. சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்குபிரதேசசபைஉறுப்பினர் இ.செல்வராசா, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், பருத்தித்துறை மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர் சி.சஜீவன்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நூல்கள் அறிமுகமும் கருத்தாடலும்

இணுவில்கலைஇலக்கியவட்டத்தின்ஆதரவில் புலம்பெயர் எழுத்தாளர் வி.ஜீவகுமாரனின் நூல்கள் அறிமுகமும் கருத்தாடலும் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யூரோவில்மண்டபத்தில்(பருத்தித்துறைவீதி நல்லூர்) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சிப்பு விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன்தலைமையில்இடம்பெறும். இந்தநிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்தமிழ்த்துறைதலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



## தீர்த்தக் கேணி திறப்பு

சாவகச்சேரி, ஜூன் 29
யாழ்ப்பாணம்சாவகச்சேரிநுணாவில்மேற்கு விளைவேலி ஆதீன மருதடி விநாயகர் கோவிலுக்குப் புதிய தீர்த்தக் கேணி அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
நுணாவில் பகுதியைச் சேர்ந்த கா.வேதநாயகன் மற்றும் நாகலிங்கம் நினைவாக இவர்களது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட தீர்த்தக் கேணியை ஆதீன முதல்வர் சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்களினால் திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் கேணியை வடிவமைத்த கட்டடக் கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

'போதையின் பாதையில் இருந்து விழித்திரு'

## போதைப் பொருள் ஒழிப்பு தினம்





வடமராட்சி, ஜூன் 29
போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன் வருவோம் என்னும் தொனிப் பொருளில் வடமராட்சி நல்லொழுக்கநிறுவனம் நேற்றுமுன்தினம் பன்னாட்டு போதைப்பொருள் ஒழிப்புத் தினத்தை கடைப்பிடித்தது.
நகமாநிவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் ஒன்றிணைந்த போதைப்பொருள்பாவனைதடுப்புசெயலணியினர்ஒன்றிணைந்துநெல்லியடிமத்தியமகாவித்தியாலய தேசியப் பாடசாலை முன்பாக மகாவித்தியாலய வீதியில்பயணித்தோருக்கு போதைப்பொருள்பாவனையால்வரும்தீங்குகேடுகளை தெளிவுபடுத்தும்துண்டுப்பிரசுரங்களை விநியோகத்தினர். 'போதையின்பாதையில் இருந்து விழித்திரு, தனித்திரு' என்ற வாசகத்துடன் பதாதைகள் மதில் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருந்தன. (எ-173)

## பிரதி அதிபருக்கு மணிவிழா

வயாவிளான், ஜூன் 29
யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரியில்29 ஆண்டுகளாக சேவையாற்றிய ஓய்வு பெறவுள்ள பிரதி அதிபர் வே. புவனேந்திரனின் மணிவிழா இன்றுவெள்ளிக்கிழமைகாலை10 மணிக்குகல்லூரியின்ஆ.சி.நடராஜாஅரங்கில் அதிபர் வே.த ஜயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.
ஆசிரியர் நலன்புரிக்கழகமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடுசெய்துள்ளது.

## வடக்கிற்கான ஒரு தொகுதி தபால் பொதிகள் வந்தடைந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 29
தபால் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் கொழும்பில் தேங்கிய வடக்கிற்கான ஒரு தொகுதி தபால் பொதிகள் நேற்று தபால் ரயில் மூலம் எடுத்துவரப்பட்டன.
தபால் பணியாளர்களின் போராட்டம் காரணமாக உள்ளூர் வெளியூர் தபால் சேவைகள் யாவும் முற்றாகப் பாதிக்கப்பட்டன.
தபால்பணியாளர்களின்போராட்டம்வழமைக்குதிரும்பினதையடுத்து. நேற்றுக் காலைவடக்கேவந்ததபால்ரயில்மூலம்தேங்கியதபால்பொதிகளின்ஒருதொகுதி எடுத்து வரப்பட்டதாக யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் தெரிவித்தது. உள்ளூர் வெளியூர் தபால்கள் யாவும் நேற்றுக்காலை தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன. (17)

## சட்டமோ...

தமிழ் மக்களுடன் நான் இங்கே வாழ்ந்து வருகின்றேன். அவர்களின் கலாசாரம் மனித நேயம், மனிதத் தன்மை அவர்களின் துன்பங்கள் அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றேன்.

போரில் இரண்டு தரப்புக்கள் சண்டையிட்டன. போர் நிறைவடைந்து சமாதானம் ஏற்பட்ட பின்னர் கையில் இருக்க வேண்டியது துவக்கு அல்ல சமாதான ஒளி விளக்கு. அதனை எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தப் பகுதியில் கட்டட ஒப்பந்தகாரர்கள் இடைநடுவில் விட்டுச் செல்லும் கட்டடங்களை உரிய காலப்பகுதியில் இராணுவத்தினர் கட்டி முடிக்கின்றனர். வீதிகளைச் சீரமைக்கின்றனர். எதிர்கால சந்ததியினருக்காக ஆயிரக்கணக்கான மரங்களை நட்டுள்ளனர். கட்டி முழுமைப்படுத்தப்படாமல் காணப்படும் வறிய மக்களின் வீடுகளை இராணுவத்தினர் கட்டிக் கொடுக்கின்றனர். குருதி கொடுக்கின்றனர். இவை போன்ற சேவைகளை இன்னமும் விரிவுபடச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

போராலும் சுனாமியாலும் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு தென்னிலங்கையிலிருந்து வந்த பௌத்த துறவிகள் உதவி செய்கின்றமை மிகுந்த மனமகிழ்ச்சியை தருகின்றது. இந்த நல்ல செயற்பாடு தொடர வேண்டும் - என்றார்.

நிகழ்வில், போதிராஜா பதனமே தொண்டு நிறுவனத்தின் தலைவர் ஓமலே சோபிததேரர் அவர்களால் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசிய நாட்டவர்களின் பங்களிப்புடன் முல்லைத்தீவில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சில்லு வண்டிகள் 50, மாமரக் கன்றுகள் - 1,000, பசுக் கன்றுகள் - 100 மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த இராஜகுருவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலர் ஏ.எக்ஸ். செல்வநாயகம் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர் என்று ஆளுநரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,8)

## கத்தியால்...

தனர். சம்பவம் யாழ்ப்பாணம் மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா லீலாதேவி (வயது - 69) என்பவர உயிரிழந்தார்.

அவர் வீட்டில் தனியாக வசித்து வருகின்றார். அவருக்குச் சமையல் வேலை பார்ப்பதற்காக வயோதிப பெண் ஒருவரும் அந்த மூதாட்டியுடன் இருக்கின்றார். நேற்றுக் காலை சுமார் 8 மணியளவில் பிச்சைகேட்டு ஒருவர் வீட்டுக்குச் சென்று பிச்சை கேட்டுள்ளார். 100 ரூபா காசு கொடுக்கப்பட்டது. பணத்தைப் பெற்ற பிச்சைகேட்டுச் சென்ற நபர், அந்த 30 நிமிடங்களின் பின்னர் மீண்டும் அந்த வீட்டுக்குச் சென்று மூதாட்டியைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார் என்று ஆரம்பவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அந்த நேரம் சமையல் வேலைக்காகச் சென்றிருந்த மூதாட்டி அந்த இடத்தில் நிற்கவில்லை. அவர் அந்த வீட்டுக்குச் சென்ற போது வீட்டுக்காரப் பெண் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில், இரத்த வெள்ளத்தில் காணப்பட்டார் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர். மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்தில் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்ப உத்தரவிட்டார்.

பொலிஸாரின் ஆரம்ப விசாரணையிலிருந்து யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுமார் 35 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர்என்றுகுற்றஞ்சாட்டப்படுகிறது. கொலை இடம்பெற்ற வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டில் சி.சி.ரி.வி பொருத்தப்பட்டுள்ளது. அதன் காணொளியின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கழுத்தறுத்துக் கொன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் கொலை செய்ய வாய்ப்பில்லை. அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர். பொலிஸார் சரியான அடையாளப்படுத்தல் இன்றி அவரைக் கைது செய்துள்ளனர் என்று கைது செய்யப்பட்டவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கண்காணிப்புக்கமராவின் பதிவைவைத்தே பொலிஸார் சந்தேகநபர் என்றுகூறி எமது குடும்ப உறுப்பினரைக் கைது செய்துள்ளனர். ஆனால் பொலிஸார் கைதுசெய்யப்பட்டவருக்கும் கொலைக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. அவர் ஏற்கனவே மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றுகூறி மருத்துவ அறிக்கையும் குடும்பத்தினர் காண்பிக்கின்றனர். அவர் தற்போதும் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (4,8,106)

## புலனாய்வு...

ஒருவரையே ஒட்டுசுட்டானில் அரசு கைது செய்துள்ளது. ஒரு புலனாய்வு அதிகாரிக்கு துரோகம் இழைத்துள்ளது. இவ்வாறு மகிந்த அணியைச் சேர்ந்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தில் அரசியல் தலையீடு இருந்ததால் ஒரு பெரிய துரோகம் இழைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானின் டொசி உளவுப் பிரிவில் பணியாற்றியவர்.

இராணுவத்தின் ஊடாக சம்பளம் வழங்கப்பட்டு விடுதலைப் புலிகளின் திட்டங்களை அறிந்து கொள்வதற்கான உளவாளிகள் அந்த இயக்கத்திற்கு உள்ளே இன்னும் இருக்கின்றது. இந்த நடவடிக்கையால் அது போன்ற ஒரு உளவாளிக்கு துரோகம் இழைத்துள்ளதாகவும், அவர் விளக்கமறியலில் இருந்து வெளியே வந்ததும் கொலை செய்யப்படலாம் - என்றார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கிளைமோர், புலிக்கொடி, வரிச்சீருடை உள்ளிட்டவை மீட்கப்பட்டிருந்தன. வீதியில் சென்ற முச்சக்கரவண்டியை மறித்து பொலிஸார் சோதனையிட்டபோதே இவை சிக்கின. இந்தச்ச சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் போராளி அன்று மாலையே கைது செய்யப்பட்டார். அவருக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு இருப்பதாகவும், இராணுவத்தினரால் மாதாந்தம் சம்பளம் வழங்கப்படுவதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## தவிசாளர்...

யாழ்ப்பாணம், ஜூன் 29

கரவட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆளுமையற்றவர் என்று குற்றஞ்சாட்டி, அவர் பதவி விலகவேண்டும். அந்த இடத்துக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் இளங்கோவை நியமிக்க நாம் தயார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் இராமநாதன் தெரிவித்தார்.

கரவட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை அமர்வு பிரதேச சபை தவிசாளர் த .ஐங்கரன் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பிரதேச சபையில் நேற்று இடம் பெற்றது. குறித்த அமர்வில்பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இதன்பொழுது கரவட்டி பிரதேச செயலகம் கரவட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து செயல்படுவதில்லை என்றும், வீட்டுத் திட்டம் தொடர்பாக தன்னிச்சையாக செயற்படுவதாகவும் இது தொடர்பாக இரு பகுதியும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் நிலாங்கதன் கேட்டு கொண்டார்.

இதன் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் சிவராசாவினால் இன அழிப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை சபை ஏகமனதாக ஏற்று கொண்டு நிறைவேற்றபட்டது.

நெல்லியடி மீன் சந்தை தொடர்பான அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.எனினும் சபை தொடங்கியது முதல் முடியும் வரை தவிசாளருக்கும் ராமநாதனுக்கும் கருத்து மோதல் இடம்பெற்றது.

ஒரு கட்டத்தில் இராமநாதன், தவிசாளரை பார்த்து உங்களுடைய தலைவர்கள் அங்கே சிங்கள கட்சியிடம் வால் பிடிக்கின்றனர். நீங்கள் இங்கு வீரம் பேசுகிறீர்கள் எனக்கூறினார். இதற்கு அதனைப் பற்றிப் பேச உமக்கு அருகதையில்லை என தவிசாளர் பதிலளித்தார். இதன்போது இராமநாதன் சபையிலிருந்து வெளியேறினார். எனினும் பின்னர் வந்து அமர்ந்தார். ஆளுமையற்ற தவிசாளர் பதவி விலகவேண்டும். அந்த இடத்துக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் இளங்கோவை நியமிக்க நாம் தயார் என சுதந்திரக் கட்சி உறுப்பினர் இராமநாதன் தவிசாளரைப் பார்த்துக் கூறினார்.

ஆளுமையில்லை பதவியிலிருந்து விலகுமாறு கேட்க நீர் யார்? என்னிடம் ஆளுமையில்லையாயின் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க எனது கட்சித் தலைமை இருக்கிறது எனத் தவிசாளர் த.ஐங்கரன் தெரிவித்தார். (4,8 ,26)

## மானிப்பாயில்...

கொண்ட கும்பல். அதனால் 4 பேர் காயமடைந்தனர். சிசிரிவி கமரா நொறுக்கப்பட்டு மோட்டார் சைக்கிள் கொளுத்தப்பட்டது.

மானிப்பாய் லோட்டன் வீதியிலுள்ள வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டது. வாள்வெட்டுக் கும்பலால் அந்த வீட்டின் மீது நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் இது என்று தெரிவிக்கப்பட்டது.

"10 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியது. அதனால் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்தது.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களை அடித்து நொறுக்கியது. கதவைக் கொத்திச் சேதப்படுத்தி வீட்டின் தளபாடங்களையும் நொறுக்கியது. வீட்டின் குடும்பத்தலைவரை வாளால் வெட்டியதில் அவரது வயிற்றில் காயம் ஏற்பட்டது. பின்னர் அந்தக் கும்பல் அங்கிருந்து சென்று விட்டது.

இதில் பத்மராஜன், அவரது மகன் தனுசன் ஆகியோர் காயமடைந்தனர்.

பல நாள்களுக்கு முன்னரும் இந்த வீட்டுக்குள் புகுந்த கும்பல், பாடசாலைப் புத்தகங்களைத் தீயிட்டு அட்டூழியம் செய்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

வாள்வெட்டுக் கும்பலின் மற்றொரு தாக்குதலில் இளைஞரும் அவரது சகோதரியும் கையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெட்டியவர்கள் ஆவா குறுப்பைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (4,37,103)

## ஒட்டுசுட்டான்...

கொழும்பு, ஜூன் 29

வடக்கில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பது சம்பந்தமாக தவறான அர்த்தங்களை கற்பிக்க கூடாது என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். முல்லைத்தீவில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடபகுதியில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படுவது தென் பகுதியில் உள்ளவர்களுக்கு புதிதான விடயமாக இருக்கலாம். ஆனால் வடபகுதி மக்களுக்கு அது புதிய விடயமல்ல.

ஒட்டுசுட்டானில் அண்மையில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. பெரிய மழை பெய்த பின்னர் உடனடியாக தண்ணீர்வற்றி விடுவதில்லை. அது போலவே போர் முடிந்த போதிலும் அன்று பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்யும். இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து தவறான அர்த்தங்களை கற்பிக்கக் கூடாது. நாட்டுக்குள் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்றாலும் தென் பகுதியின் நட்புறவை வடக்குக்குக் கொண்டு செல்ல வேண்டும் - என்றார். (5)

## வடக்கில்...

வும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர். அதில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பல்கலைக்கழக முதன்மை வாயிலில் கவனவீர்ப்பில் ஈடுபட்ட மாணவர்கள் பின்னர் கவனவீர்ப்புப் பேரணியாக பரமேஸ்வராச் சந்திவரை சென்று சந்தியிலும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பல்வேறு கோசங்களை எழுப்பி மாணவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்."காவல் துறையே நித்திரையா, காவல் துறையும் கயவர்களுடனா, வளரும் பயிரை முளையில் கிள்ளாதே, இலஞ்சம் வாங்குவதில் இருக்கும் ஆர்வம் குற்றங்களைத் தடுப்பதில் இல்லை" உட்பட்பல வாசங்கங்களுடன் அவர்கள் கோசங்களைஎழுப்பியும்கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். போராட்ட முடிவில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மாணவர் ஒன்றியத்தினர் மேலும் தெரிவித்ததாவது,

சிறுமி காட்டுமிராண்டிகளால் கொல்லை செய்யப்பட்டுள்ளார். அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

**போரை முடித்த அரசுக்கு போதையை ஒழிக்கத் தெரியாதா?**

எமது மண்ணில் நடைபெறும் அநேகமான குற்றச் செயல்களுக்குக் காரணம் கஞ்சா போதைப் பொருள் பாவனையே. 30 வருடகால பயங்கரவாதப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டோம் என்றுசொல்லும் அரசு ஏன் இந்தப் போதைப்பொருள்களை ஒழிக்க முடியாமல் இருக்கிறது என்று நாம் கேட்கிறோம்.

வடக்கில் போதைப்பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இதனை ஒழிக்க அரசு முன்வர வேண்டும். பொலிஸார் அசமந்தப் போக்காக இருக்காமல் தங்களது கடமைகளைச் செய்ய வேண்டும். இங்கே நடக்கும் குற்றச் செயல்களுக்குப் பின்னணியாகப் பொலிஸார் இருக்கின்றார்களா என்ற சந்தேகமும் எழுகின்றது.

கடல் வழியாக அல்லது வேறு வழியில் வரும் கேரளக் கஞ்சாவை ஏன் நிறுத்த முடியவில்லை? இவ்வாறு போதைவஸ்துக்கள் இங்கே கொண்டு வரப்படுவது தமிழ் மக்களை அழிக்கும் திட்டமிட்ட சதியா? கொலை செய்யப்பட்ட சிறுமியின் கிராமத்தில்கூட கசிப்புக் காய்ச்சப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸார்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுமியின் கொலை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அரசியல் வாதிகள் தலையிட்டு செய்ய வேண்டியவற்றை செய்து கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (4,7)

## தொலைக்காட்சியில்...

இருந்த 40 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கு அன்னங்கைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. குடும்பப்பெண் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்துள்ளார். தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த வேளை வீட்டின் பின்கதவால் வீட்டுக்குள் உள்நுழைந்த திருடர்கள் குடும்பப் பெண்ணின் வாய்க்குள் துணியை வைத்து அடைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,8)

## 8 மணித்தியாலங்களாக...

காரர்களால் மறிக்கப்பட்ட வீதி சுமார் 8 மணித்தியாலங்கள் முடக்கப்பட்டிருந்தது. எந்தவொரு வாகனங்களும் செல்லமுடியாதவாறு போராட்டக்காரர்களால் வீதி முடக்கப்பட்டது. காலையில் அலுவலகங்கள், வேலைகளுக்குச் செல்வோர், அயற் பாடசாலை மாணவர்கள் என பலரும் வீதி மறியலால் சிரமப்பட்டனர். அரச, தனியார் பேருந்துகள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தியே பயணத்தில் ஈடுபட்டன. போராட்டக்காரர்களை அரசியல்வாதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதன் பிற்பாடு பாதை ஓரளவு பழைய நிலமைக்குத் திரும்பியது. (4,114)

# வடக்கு – கிழக்கு இணைப்புக்கு தயக்கமின்றி ஆதரவு வழங்குவோம்

## அலிசாகிர் மௌலானா தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 29**


**தமிழ் - முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வும் ஒருமைப்பாடும் சகோதரத்துவமும் ஏற்படும்போது வடக்கு - கிழக்கு இணைப்புக்கு தயக்கமின்றி ஆதரவு வழங்குவோம் என்று பிரதியமைச்சர் அலிசாகிர் மௌலானா தெரிவித்தார்.**

புதிய அரசமைப்பு தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்களை அறிவுறுத்தும் நிகழ்வு மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தம் ஊடாகக் கிடைக்கப்பெற்ற விடயமே மாகாண சபையாகும். வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தது. இந்திய அமைதிப்படையின் கண்காணிப்பில் தான் அன்றைய மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது.

இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. தமிழ் பேசும் மக்களுக்குள் நல்ல அபிப்பிராயங்கள் ஏற்படுமானால் வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இங்குள்ள மூவின மக்களையும் இணைத்து சகோதரத்துவத்துடன் வாழமுடியும் என்ற மனநிலையினை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (5)



# போர்க் காலத்தைவிடவும் பயங்கர நிலையில் நாடு

## *ஒரு வாரத்தில் 15கொலைச் சம்பவங்கள்*

கொழும்பு, ஜூன் 29

நாட்டில் கடந்த ஒரு வார காலத்தில் 15 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் இயக்கம் செயற்பட்ட காலத்தை விட பயங்கர நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடு நாட்டில் தற்போது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சகல மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவது அரசின் பொறுப்பாகும். அரசு அதிலிருந்து விலகியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் போர் நடைபெற்ற காலப்பகுதியை விட தற்போது மக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்ற நிலையை அடைந்துள்ளதாக மக்கள் கருதுகின்றனர். பாதாள உலகக் குழுக்கள் தொடர்பில் அரசு மிகவும் உதாசீனமான முறையில் செயற்பட்டு வருகிறது. அது தொடர்பில் பொலிஸார் சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் அரசியல்வாதிகள் சந்தர்ப்பம் வழங்குவதில்லை. பொலிஸாருக்கு அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

ஜீன் மாதம் 19ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியில் மாத்திரம் நாட்டில் 15 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறையில் கொள்ளைச் சம்பவத்தின்போது பாதாள உலகக் குழுவினர் அமைச்சரவைப் பாதுகாப்பு பணிக்கு பயன்படுத்தும் துப்பாக்கியினால் சூடு நடத்தியுள்ளதாக ஊடகங்களில் அறிய முடிந்தது. அந்தத் துப்பாக்கி எவ்வாறு பாதாள உலகக் குழுக்களின் கைகளுக்குச் சென்றது. இது தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீர குழப்படைந்தார். அரசு விசாரணை நடத்தி உண்மையை வெளியிடவேண்டும். அரசு இந்தச் சம்பவத்தை மறைக்க முற்படுகின்றது.

அரசு பாதுகாப்புத் தரப்பினரின் வகிபாகம் பற்றியும் அவர்களுக்கான கண்ணியம் குறித்தும் பேசுகிறது. எனினும் பிரதியமைச்சர் பாலித தெவரப் பெரும சிறப்பு அதிரடிப்படையுடன் நடந்துகொண்ட விதத்தை ஊடகங்களில் கண்டு கொள்ள முடிந்தது. சிறப்பு அதிரடிப்படையினர் தமது கடமைகளை முன்னெடுப்பதற்கு பிரதியமைச்சர் இடையூறு விளைவித்துள்ளார் - என்றார். (5,61)

*மாணவர் கடத்தல் விவகாரம்:*

# ஒத்துழைப்பு வழங்காத கடற்படை தளபதிக்கு எதிராக உத்தரவுபெறவும்

## குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நீதிவான் ஆலோசனை

கொழும்பு, ஜீன் 29

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடத்தல்களுக்கு பயன்படுத்தப்பட்ட கடற்படைப் புலனாய்வுப் பிரிவு பயன்படுத்திய வெள்ளை வான் தொடர்பில், ஆவணங்கள் உள்ளிட்ட விவரங்களை இதுவரை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கடற்படை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வதாக கோட்டை நீதிமன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணியான அச்சலா செனவிரத்ன மன்றில் எழுப்பிய கேள்வியை அடுத்து இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தகவல்களை கடற்படை வழங்க மறுக்குமானால், அல்லது இதுவரை வழங்காமல் இருக்குமானால் உடனடியாக மன்றுக்கு சிறப்பு அறிக்கை ஊடாக அதனைத் தெரியப்படுத்துமாறும், பின்னர் அது தொடர்பில் கடற்படைத் தளபதிக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 124 ஆம் அத்தியாயத்துக்கு அமைய கடும் உத்தரவைப் பிறப்பிப்பதாகவும் நீதிவான் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு ஆலோசனை வழங்கினார். (5,71)

# சீனக் காதலர்கள் இந்துமுறைப்படி திருமணம்

இந்துக் கலாசார முறைப்படி சீனாவைச் சேர்ந்த காதலர்கள், திருமணம் செய்து கொண்டுள்ளனர். சீனாவின் பெய்ஜிங் மாகாணத்தைச் சேர்ந்த, மருத்துவரான யான் மற்றும் சாங்காய் மாகாணத்தைச் சேர்ந்த, அழகுக்கலை நிபுணரான ரூபிங் ஆகியோர் காதலித்து வந்த நிலையில் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இருவரும் திரு மணத்துக்காக நாகை மாவட்டம், சீர்காழி அடுத்த காரைமேடு சித்தர்புரத்துக்கு வந்திருந்தனர். சித்தர்களை வழிபட்டு, கோ பூசை, முதியவர்களுக்கு பாதபூசை செய்தனர். வேத மந்திரங்கள் முழங்க, மங்களவாத்தியம் இசைக்க, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, மாங்கல்ய தாரணம் செய்து கொண்டனர். (5)

# கோத்தாவுக்கும் ஹிட்லருக்கும் இடையில் ஒற்றுமையுள்ளது

## அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 29

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கும் ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லருக்கும் இடையில் ஒற்றுமைகள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முதலாவது ஒற்றுமை இருவரும் சைவ உணவை மாத்திரம் சாப்பிடுபவர்கள். ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைக் கொண்டிருக்கவில்லை. கோத்தபாயவுக்கு இலங்கைக் குடியுரிமை கிடையாது.

ஹிட்லர் ஆஸ்திரேலியக் குடியுரிமையைக் கொண்டிருந்தார். அவர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெறுவதற்கு பல முயற்சிகளில் ஈடுபட்டார். ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளாமல் ஜேர்மனியின் அரச தலைவராக முடியாது என்பதாலேயே ஹிட்லர் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

கோத்தபாயவிடமும் இலங்கைக் குடியுரிமை இல்லை. அவர் அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டுள்ளார். இதன் காரணமாக அவருக்கும் ஹிட்லருக்கும் ஒற்றுமையுள்ளது - என்றார். (5)

# கோத்தபாயவை களமிறக்குவது குறித்து கூட்டு எதிரணி இதுவரை ஆராயவில்லை

## கூறுகிறார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, ஜீன் 29

முன்னாள் பாதுகாப்புசெயலர் கோத்தபாய ராஜபக்சவை எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் இதுவரை கூட்டு எதிரணியினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கலந்துரையாடவில்லை. நாம் தற்போது மாகாண சபைத் தேர்தல் குறித்தே ஆராய்ந்து வருகின்றோம் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் தினேஸ்குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தற்போது அவசரப்பட வேண்டிய அவசியமில்லை. இன்னும் காலம் இருக்கின்றது. அரச தலைவர் தேர்தல் நெருங்கிவரும் போது நாம் எமது வேட்பாளரைக் களமிறக்குவோம். இது தொடர்பில் அவசரப்பட வேண்டியதில்லை.

கோத்தபாய ராஜபக்ச களமிறக்கப்படவுள்ளதாக தகவல்கள் வருகின்றன. கோத்தபாயவை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதுவரை ஆராயவில்லை. தீர்மானம் எடுக்கவும் இல்லை.

நாடாளுமன்றக் குழுக் கூட்டம் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அடிக்கடி நடைபெறும். இதன்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலேயே ஆராயப்பட்டது.

எப்படியாவது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று நாம் எமது கூட்டத்தில் தீர்மானம் எடுத்தோம். மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்து தாமதப்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றது. ஆனால் அதனைப் பொருட்படுத்தாது எதிர்க்கட்சித் தலைவர் செயற்பட்டுக் கொண்டுள்ளமை ஆச்சரியமளிக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் தன்னை அரசின் அமைச்சர் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாரோ தெரியவில்லை. உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமக்கே சொந்தமானது. ஆனால் சபாநாயகர் பெற்றுத் தராமல் இருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் பதவி அரசுக்குச் சொந்தமானது என்று சபாநாயகரும் நினைத்துவிட்டார் போன்று தெரிகின்றது - என்றார். (5,61)

# வேட்பாளர்களின் தேர்தல் பரப்புரை செலவுகளை கட்டுப்படுத்த சட்டவரைவு

**கொழும்பு, ஜீன் 29**

**தேர்தல் பரப்புரையின் போது ஏற்படுகின்ற செலவுகளைக் குறைத்துக் கொள்வது தொடர்பிலான சட்டவரைவைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்டவல்லுநர் தீபானி குமாரஜீவ தெரிவித்துள்ளார்.**

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஊடாக இதற்கான ஆரம்பக்கட்ட சட்டவரைவுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டவரைவைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அரசியல் கட்சிகள் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும், சிவில் அமைப்புகளின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தல் செயற்பாடுகளுக்கான செலவினங்களை வரையறுப்பதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது.

புதிய சட்டவரைவுக்கு அமைய தேர்தல்கள் செயற்பாடுகளுக்கான அனைத்து செலவினங்களையும் வேட்பாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனு ஏற்றுக்கொண்டதன் பின்னர் அரசியல்கட்சி அல்லது வேட்பாளரின் பெயரில் 2 வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். தேர்தலுக்கான அனைத்து வரவு செலவுகளும் இந்தக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் - எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

# அபிவிருத்தி நிதியத் திணைக்களம் நிறுவுவதற்கு விரைவில் நடவடிக்கை

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29

அபிவிருத்தி நிதியத் திணைக்களமொன்றை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை வணிக முகாமைத்துவ நிறுவனத்தின் 6ஆவது கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார வளர்ச்சியுடன் வேலை வாய்ப்புக்களும் உருவாகும். நாட்டின் வருமானம் கணிசமாக அதிகரிக்கும். 'என்டர்பிரைஸ் சிறிலங்கா' வேலைத் திட்டத்தின் கீழ் உச்ச அளவு நன்மைகளைப் பெறும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

'என்டர்பிரைஸ் சிறிலங்கா' வேலைத்திட்டத்தின் பயன்களைத் தனியார் துறையினர் பெற்றுக்கொள்ள வேண்டும். தனியார் துறையினருக்கு அழைப்பு விடுக்கின்றேன். இந்த வேலைத்திட்டத்துக்காக அரசு 10 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நிதியத் திணைக்களமொன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளோம். இது விடயம் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்று விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

உலக சந்தையில் எமது தயாரிப்புக்களுக்கும், சேவைகளுக்கும் உரிய பெறுமதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதற்கு இருக்கக்கூடிய சவால்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம்.

வெளிநாடுகளில் இருந்து பல முதலீடுகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களும் இதற்கு அவசியமாகிறது.

நாட்டின் அபிவிருத்திக்குத் தனியார் துறையின் பங்களிப்பு முக்கியமாகும். தனியார்துறை எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். தற்போது இலங்கைக்கு 22 மில்லியன் ரூபா பெறுமதியான சந்தையே உள்ளது. இது போதாது. இதைக் கொண்டு எம்மால் அபிவிருத்தி இலக்கை அடைய முடியாது. நாம் இன்னும் வளர்ச்சியடைய வேண்டுமாயின் பெரிய சந்தைக்குள் நுழைய வேண்டும் - என்றார். (5.31)



# கொழும்பு துறைமுக நகர நிலப்பரப்பை உருவாக்கும் பணி இறுதிக் கட்டத்தில்

கொழும்பு, ஜூன் 29

கொழும்பு துறைமுக நகருக்கான நிலப்பகுதியைக் கடலில் இருந்து உருவாக்கும் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகத் துறைமுக நகரக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது முழு வீச்சில் நிலத்தை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் அடுத்த ஆண்டு நிறைவடையும் என்று சீன நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5)

## உழுந்துக்கான இறக்குமதித் தீர்வை ரூ.50ஆல் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 29

இறக்குமதி செய்யப்படும் உழுந்துக்கான தீர்வை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. தற்போது விதிக்கப்படும் தீர்வை 100 ரூபாவிலிருந்து 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் விளைவிக்கப் படும் உழுந்துக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவே இறக்குமதியாகும் உழுந்தின் மீதான தீர்வை அதிகரிக்கப்பட்டதாக நிதி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (5)

# கோத்தபாய ராஜபக்சவை வேட்பாளராக ஏற்கத்தயார்

## சு.கவின் 16பேர் அணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

மகிந்த ராஜபக்ச யாரை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்குகின்றாரோ அவரை ஆதரிக்கத் தயாராக உள்ளோம். கோத்தபாய ராஜபக்சவாக இருந்தாலும் அவரை ஏற்றுக்கொள்வோம். நாம் அனைவரும் மகிந்த ராஜபக்சவின் அணியாக மாறிய பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அணியை ஏற்கத் தயாராக இல்லை என்பதே எமது நிலைப்பாடு.



இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16பேர் அணியின் உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்திச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கவேண்டும். கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி முதலில் வெளியேறவேண்டும். இருப்பினும் சுதந்திரக் கட்சியில் சிலர் பதவிமோகத்தில் ஒட்டிக்கொண்டுள்ளனர்.

எதிரணி வரிசையில் 70பேர் இருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து எம்மால் எதிர்க்கட்சி ஆசனத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து தலைமை அமைச்சரை மாற்றவும் தயாராகவே உள்ளோம். கடந்த முறை போன்று அல்லாது மிகவும் திட்டமிட்ட வகையில் அரசிலிருந்து இந்த ஆட்சியை வெறுக்கும் நபர்களையும் எதிர்க்கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு நாம் தலைமை அமைச்சர் ஆசனத்தைக் கைப்பற்றவோ அல்லது பொதுத் தேர்தல் மூலமாக ஆட்சியை மாற்றவோ எம்மால் முடியுமான முயற்சிகளை எடுத்து வருகின்றோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த அரச தலைவர் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன என்ற நிலைப்பாட்டில் நான் ஒருபோதும் இருக்கவில்லை. எமது அணியில் ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் இன்று அனைவரும் மகிந்த ராஜபக்சவின் அணியாக மாறிய பின்னர் அரச தலைவர் மைத்திரிபாலவின் அணியை ஏற்கத் தயாராக இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக நாம் இணைந்து செயற்படத் தயாராக உள்ளோம்.

இதில் எவரும் எந்தத் தலைமையுடனும் இணைந்துகொள்ள முடியும். அரச தலைவர் தேர்தலில் அல்லது ஏனைய சகல தேர்தல்களிலும் மகிந்த ராஜபக்சவின் வேட்பாளரை ஆதரிக்கவே நாம் தயாராக உள்ளோம்.

கோத்தபாய ராஜபக்சவைக் களமிறக்கினால் அவரை அரச தலைவர் வேட்பாளராக ஏற்றுகொள்ளத் தயாராக உள்ளோம். பசில் ராஜபக்சவாக இருந்தாலும் அவரையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம். எமக்கு மீண்டும் எமது கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்ற தேவை உள்ளது. தற்போது நாடு பயணிக்கும் பாதை தவறாக உள்ள நிலையில் சரியான பாதைக்குக் கொண்டுசெல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளோம் - என்றார். (5.31)

# பரீட்சை இலகுபடுத்தலை ஆராயக் குழு நியமனம்

## பரீட்சைத் திணைக்களம்

கொழும்பு, ஜூன் 29

பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பரீட்சைகளை இலகுபடுத்துவது தொடர்பில் ஆராய்வதற்குச் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பரீட்சைகள் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் 5 பேர், சிறப்பு மருத்துவ நிபுணர்கள் 5 பேர் மற்றும் கல்வி அமைச்சின் மூத்த அதிகாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தரம் 1, 2 மற்றும் 3 ஐச் சேர்ந்த மாணவர்களின் பரீட்சைகளை இலகுபடுத்துவது தொடர்பில் இந்தக்குழு ஆய்வுமுன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மனநிலைக்கு ஏற்றவிதத்தில் பரீட்சை நடைமுறையை மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அதைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (5)




## வெளிநாட்டு ஏற்றுமதிக்காக எள் பயிரிடத் திட்டம்

கொழும்பு, ஜூன் 29

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கில் மாத்தளை மாவட்டத்தில் 500 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் எள் பயிரிட மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தம்புள்ளை, கலேவெல, லக்கல ஆகிய பகுதிகளில் இந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள நீர்வளமும், நிலவளமும் காணப்படுவதால் இந்தத் துறையில் ஈடுபட்ட உற்பத்தியாளர்கள் விவசாய நடவடிக்கையில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். (5)

## கேலிச்சித்திரம்




நன்றி:மவ்பிம



மஹ்மூட் – சேனநாயக்க

## குதிரைகளுடன் வந்திறங்கிய பாக். கூட்டுப் படை அதிகாரி

கொழும்பு, ஜீன் 29

பாகிஸ்தானின் கூட்டுப்படைத் தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவரான ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், நான்கு நாள்கள் பயணமாகக் கொழும்புக்கு நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தார். அவரைப் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் போது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது குறித்து, முக்கியமாகப் பயிற்சி மற்றும் இராணுவ ஒத்திகைகள் தொடர்பாக ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சபுகஸ்கந்தையில் உள்ள பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் கல்லூரியில், விரிவுரையையும் அவர் நிகழ்த்தவுள்ளார். வான்படைக்கு ஆறு குதிரைகளையும் ஜெனரல் ஹயட், அதிகாரபூர்வமாகக் கையளிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# தமிழ் மக்களின் பிரச்சினையைத் தனிப்பட்ட கவனமெடுத்துத் தீர்ப்பேன்

## முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 29

வடக்கு – கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். எமது ஆட்சிக்காலத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்காக நான் தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்தி நடவடிக்கையெடுப்பேன். இவ்வாறு முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான பசில் ராஜபக்ச தெரிவித்தார். மகிந்த ஆட்சி அமைந்ததும், சம்பந்தனுடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்த நிலையில், பசில் ராஜபக்சவும் அதே சாரப்படக் கருத்து வெளியிட்டுள்ளார்.



பசில் ராஜபக்ச

பசில் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

எனக்கும் எனது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவுக்குமிடையில் மோதல் நிலவிவருவதாகப் பரப்புரை செய்துவருகின்றனர். எனக்கும் எனது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவுக்குமிடையில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. நாங்கள் இருவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம்.

எப்படியிருப்பினும் அரச தலைவர் தேர்தல் வரும் போது யார் அரச தலைவர் வேட்பாளர் என்பதை மகிந்த ராஜபக்ச தீர்மானிப்பார். மகிந்த ராஜபக்சவையே மக்கள் விரும்புகின்றனர்.

மகிந்த ராஜபக்ச யாரைக் களமிறக்குகின்றாரோ அவர் வேட்பாளராக வருவார். அவரின் வெற்றிக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மாறாக எனக்கும் சகோதரர் கோத்தபாயவுக்குமிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

இதேவேளை வடக்கு மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அரசியல்வாதிகள் ஏமாற்றியுள்ளனர். அந்த மக்கள் பெரியளவில் ஏமாற்றப்பட்டுள்ளனர். அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எமது ஆட்சியில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எமது ஆட்சியில் நான் தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்தி நடவடிக்கையெடுப்பேன். நான் வாக்குறுதிகளை வழங்கினால் நிறைவேற்றுவேன்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். தேசியப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5,61)

# பன்னாட்டு அதிகாரப் போட்டியில் எங்களைப் பலிக்கடா ஆக்காதீர்

## தேர்தல் பரப்புரைக்குச் சீனா நிதி வழங்கிய செய்தி தொடர்பில் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 29

பன்னாட்டு அதிகாரப்போட்டியில் நாடுகளைப் பலிக்கடா ஆக்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கடந்த அரசதலைவர் தேர்தலின் போது சீன அரசால் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு 7.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டதாக அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.



நாமல்

அதற்குப் பதிலளிக்கும் வகையில் நாமல் ராஜபக்ச கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

"பத்திரிகையின் செய்தி ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. உலக நாடுகளின் கப்பல் போக்குவரத்து வழித்தடத்தில் முக்கியமான இடத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. சீனா இந்த விடயத்தில் உதவியதைச் சில நாடுகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பன்னாட்டு அதிகாரப் போட்டியில் எந்தவொரு நாட்டின் நலனும் பலிக்கடா ஆக்கப்பட முடியாது. அவ்வாறான விடயங்கள் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (5)

# சிவில் அமைப்புக்களின் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ஏற்கவே முடியாது

## அமைச்சர் கபீர் ஹாசிம் திட்டவட்டம்



கபீர்

கொழும்பு, ஜீன் 29

சிவில் அமைப்புக்களின் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ஒருபோதும் ஏற்க முடியாது. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சேமலாப நிதியத்தின் பணம், பிணைமுறி மோசடிக்கு முதலீடு செய்யப்பட்டமைக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. 100 நாள் திட்டத்தில் மார்ச் மாதம் வரைக்குமே நான் அமைச்சுப் பதவியை வகித்தேன். இவ்வாறு நெடுஞ்சாலை மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிவில் அமைப்புக்கள் எந்தவொரு அடிப்படையும் இல்லாமல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. இவ்வாறான குற்றச்சாட்டுக்களை நான் நிராகரிக்கின்றேன். நல்லாட்சி வருவதற்கு முந்திய ஆட்சிக் காலங்களில் சிவில் அமைப்புக்கள் மௌனமாகவே இருந்தன. அவர்களுக்குப் பேசுவதற்கான சுதந்திரம் இருக்கவில்லை. நாம் சிவில் அமைப்புக்களுக்குச் சுதந்திரம் வழங்கியுள்ளோம். குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் போது அடிப்படைத் தகைமை இருக்க வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சேமலாப நிதியத்தின் பணம், ஊழல்மிக்க மத்திய வங்கிப் பிணைமுறி மோசடிக்கு முதலீடு செய்யப்பட்டதாகவும் அதன் போது தான் அமைச்சராக இருந்ததாகவும் கூறப்பட்டது. அது முற்றிலும் தவறாகும். 100 நாள் திட்டத்தை மையமாகக் கொண்ட ஆட்சிக் காலப் பகுதியில் மார்ச் மாதம் வரைக்குமே நான் அந்த அமைச்சுப் பதவியை வகித்தேன். அதன் பின்னர் அந்த அமைச்சுப் பதவி சரத் அமுனுகமவுக்கு வழங்கப்பட்டது. இலங்கை மனித உரிமை கேந்திர நிலையம் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கும் எனக்கும் எந்தவொரு தொடர்புமில்லை - என்றார். (5,31)

# சம்பந்தனின் கதிரையில் மகிந்தவை அமர்த்துவதே எங்களின் இலக்கு

## விமல் வீரவன்ச கூறுகிறார்

கொழும்பு, ஜீன் 29

எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மகிந்த ராஜபக்சவை அமர்த்துவதே தற்போதைய எமது இலக்கு. அதற்கான வேலைத் திட்டங்களை நகர்த்தி வருகின்றோம். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தைக் கைப்பற்றும் நோக்கம் எங்களுக்கு உள்ளது. இந்த அரசின் ஆட்சி முடிவுக்கு வரும் வரையில் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவே செயற்படவேண்டும்.

இந்தக் காரணிகளை நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியுடனும் கலந்துரையாடியுள்ளோம். நாம் அனைவரும் ஒரு அணியில் இணைந்து செயற்படக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. அவர்களும் எமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு எமக்கு முழுமையான ஆதரவை வழங்கவும் தொடர்ந்தும் மகிந்த ராஜபக்சவின் தலைமையின் கீழ் செயற்படவும் தயாராக உள்ளனர்.

மேலும், தேசிய பாதுகாப்புக்குப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் சூழல் உள்ளது. வடக்கு முதல்வர் நாட்டைத் துண்டாடும் நோக்கில் செயற்பட்டு வருகிறார். சிவாஜிலிங்கம் போன்றவர்கள் பிரிவினைவாதக் கொள்கையில் செயற்பட்டு வருகின்றனர். பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்களைக் கேட்டுக்கொண்டு அவர்கள் வடக்கில் மீண்டும் தனி ஆட்சி அமைக்க முயற்சித்து வருகின்றனர்.

நிறைவேற்று அரசதலைவர் முறைமையை நீக்குவதன் மூலமாக விடுதலைப் புலிகளின் இலக்கு என்னவோ அது அரசின் மூலமாகவே நிறைவேற்றப்படும். 20 ஆம் திருத்தச் சட்டத்தைத் தோற்கடிப்பது குறித்து சகல தரப்புடனும் நாம் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்.

கடந்த அரச தலைவர் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்துள்ளார். நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளார். இது போதுமானது - என்றார். (5,31)

## 31 ஆம் நாள் நினைவுதினமும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 20 . 05 . 1950

மறைவு 28 . 05 . 2018

கடந்த 28.05.2018 திங்கட்கிழமை
இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சீனியன் தங்கவேல்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (30.06.2018) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தல் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**பிள்ளைகள்**

திரு.திருமதி த.ஜெயசீலன் - குடும்பத்தினர் (லண்டன்),
திரு.திருமதி த.குணசீலன் - குடும்பத்தினர் (கனடா),
திரு.திருமதி த.பத்மசீலன் - குடும்பத்தினர் (இலங்கை),
திரு.திருமதி த.ஜெயமாலினி அழகரத்தினம் - குடும்பத்தினர் (பரிஸ் / இலங்கை),
திரு.திருமதி த.ஞானசீலன் - குடும்பத்தினர் (லண்டன்).

நாவலடி,
உடுப்பிட்டி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



உதிப்பு 15 . 01 . 1958

உதிர்வு 30 . 05 . 2018

கடந்த 30.05.2018 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி தேவமனோகரி சிவராமச்சந்திரன்

(சாவகச்சேரி வடக்கு)

(ஓய்வுநிலை ஆங்கில பாட ஆசிரியை - சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் இன்று (29.06.2018) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுவதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எங்கள் குடும்பத்லைவியின் மறைவையொட்டி
எம்முடன் துயர்பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்

(7150)(43)

ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 06 . 1949

உதிர்வு 28 . 06 . 2018

### திருமதி றெஜீனா அரியமலர் (பேபி) அன்ரன் யோசவ்

பூநகரியைப் பிறப்பிடமாகவும், இல. 65/6, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றெஜீனா அரியமலர் (பேபி) அன்ரன் யோசவ் நேற்று (28.06.2018) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அன்ரன் யோசவ்வின் அன்பு மனைவியும், மடோனா அமுதாசினியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம் பிள்ளை (ஆசிரியர்), பாலசிங்கம் (பொலிஸ் உத்தியோகத்தர்) மற்றும் தவரெட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜேக்கப் டேவிற்றின் அன்பு மாமியாரும், மரின்ஜொவ்றினா, மிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின்இறுதிச்சடங்குகள்இன்று(29.06.2018)வெள்ளிக்கிழமைபிற்பகல்2.30 மணியளவில் இல.65/6, யாழ்.மருதடி வீதியில் அமைந்துள்ள இல்லத்திலிருந்து யாழ். றக்கா றோட்டில்அமைந்துள்ள புனித தெரேசம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: டேவிற் மடோனா (மகள்)**

(CS/17826)(11)

077 882 4196 (மகள்), 077 884 0775 (மருமகன்),
00146 7540 710 (தவரெட்ணம் - கனடா)

## மரண அறிவித்தல்



மலர்வு 24 . 01 . 1950

உதிர்வு 28 . 06 . 2018

### தம்பிப்பிள்ளை சின்னராசா

(ஓய்வு பெற்ற சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

யாழ்.மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி கணேஸ்வரம் அணிஞ்சிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னராசா நேற்று (28.06.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்ள்ான சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும் சியாமளா, சிவரூபன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ரஞ்சன், சோபனா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் அன்புச்சகோதரரும் அன்ன பூரணம், ஐயாத்துரை, துரைசிங்கம், வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தங்கவடிவேல். செல்வரத்தினம், செல்வராணி, சரஸ்வதி காலஞ்சென்ற சிவராஜா மற்றும் இராஜேஸ்வரி, மகேஸ்வரி காலஞ்சென்ற இந்திராணி மற்றும் இந்திராதேவி காலஞ்சென்ற தேவராஜா மற்றும் தவமலர்தேவி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் சிந்துஜன், சாருஜா, சஞ்சை, டக்சன், சரணியா, பைரவி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு,அவரின் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செ ல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 488 7477,
077 943 8906

தகவல்:
குடும்பத்தினர்

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிவேண்டி புலம்பெயர் நாடுகளிலும் உறவுகள் போராட முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 29

**காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்போராட்டம் 500 நாள்களை எட்டவுள்ளநிலையில், இவர்களுக்கு ஆதரவாக லண்டன், கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளில் எதிர்வரும் 30 ஆம் திகதி போராட்டங்கள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

போராட்டங்களை ஏற்பாடு செய்தவர்களால் விடுக்கப் பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

புலம்பெயர்ந்த அனைத்துத் தமிழ் உறவுகளையும் ஏனைய நண்பர்களையும் காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களின் போராட்டத்துக்குத் தோள்கொடுக்கும் பேரணிக்கு அழைத்துநிற்கிறோம். இலங்கையின் வடக்குகிழக்கு பகுதிகளிலிருந்து போராடி வரும் குடும்பங்கள் வரும் ஆடி மாதம், 2018 முற்பகுதியில் 500 நாள்களைப் பூர்த்தி செய்யவுள்ளனர். இத் தோழமைப் பேரணியானது தமிழ்க் கனேடிய செயல்வாதிகளை உள்ளடக்கிய சுயாதீனக் குழு ஒன்றினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதுடன் இதன் நோக்கங்களாக, காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் அவலநிலை தொடர்பான விழிப்புணர்வைத் தமிழ்ச்சமூகத்தினரிடமும், பரந்த கனேடியச் சமூகத்தினரிடமும் ஏற்படுத்தல். கிளிநொச்சி மாவட்டத்திலும் மற்றும் வடக்கு கிழக்கெங்கிலும் வரும் ஆடி மாதம் 2ஆம் திகதி 500 ஆவது நாளைப் பூர்த்தி செய்யவிருக்கும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுடன் தோள்கொடுத்துநிற்றல், மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசின் மீதான அழுத்தத்தை அதிகரித்தல், குறிப்பாக சரணடைந்தவர்களதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரினதும் பெயர்ப்பட்டியலையும், கடந்த காலத்தில் இருந்ததும் தற்போதுமுள்ள எல்லா இரகசிய முகாம்களினதுபட்டியலையும் வெளியிட அழுத்தம் வழங்குதல். நம்பமுடியாத வலுவும் துணிச்சலும்மிக்க இத்தமிழ்க் குடும்பங்கள் விடைகள் கிடைக்க வேண்டியவர்கள் இவர்கள் ஏற்கனவே பல துன்பங்களை அனுபவித்து விட்டார்கள்.

போர் நிறைவுற்று 9 வருடங்களின் பின்பு, காணாமற் போனோர் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் இலங்கைஅரசால்மேற்கொள்ளப்படாத சூழ்நிலையில் விரக்தியடைந்த காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் பெரும்பாலும் பெண்களைக் கொண்ட குழு ஒன்றுடன் கிளிநொச்சி முதன்மைச் சாலை ஓரத்தில் இருந்துகொண்டு தொடர்ச்சியானசாலையோரப் போராட்டமொன்றைமுன்னேடுக்கத்தொடங்கினர். இப்போராட்டம் இதேபோன்றபோராட்டங்களை முன்னெடுப்பதற்குரியஅதிர்வலைகளைவடக்குக் கிழக்கில் ஏற்படுத்தியதுடன் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலைமற்றும்முல்லைத்தீவிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஆரம்பமாகின.

இப்போது இக்குடும்பங்களின் போராட்டங்கள் இரவு பகலாக பெரும்பருவமழைக் காலங்களிலும், எரிக்கும் வெய்யிலிலும், நுளம்புக்கடிமற்றும்தூசி அனைத்தையும்எதிர்கொண்டு சாலையோரத்தில் 500 நாள்களைஎட்டவுள்ளபோதும் இன்னும் இவர்கள் விடைகளின்றித் தவிக்கின்றனர். அவர்கள் இலங்கை அரசால் உதாசீனம் செய்யப்பட்டுள்ளனர். அரச தலைவர் சிறிசேன ஆரம்பத்தில்இந்தக்குடும்பங்களுக்குக்கொடுத்தவாக்கையும் நிறைவேற்றத் தவறியுள்ளார் -என்றுள்ளது. (21)



## உள்ளூராட்சி மன்றங்களின் கூட்டணி உறுப்பினர்கள் சிலருக்கு வேட்டு

### நோக்கத்துக்கு மாறாகச் செயற்பட்டதால் பதவிநீக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் கொள்கைக்கு மாறாகச் செயற்பட்ட உள்ளூராட்சிமன்றங்களின்உறுப்பினர்களைபதவி நீக்கம் செய்ய கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்து அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றுமுடிவுசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழர்விடுதலைக்கூட்டணியின்சிறப்புமத்திய செயற்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச்செயலகத்தில் நேற்று முன்தினம்புதன்கிழமைகாலை10 மணிக்கு உப தலைவர் கா. குலசேகரம் தலைமையில் நடைபெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதுஎன்று அந்தக்கட்சிஅனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

கட்சியின் மூத்த உபதலைவர் மறைந்த அமரர் கு. சிவகுலசிங்கத்தின் வெற்றிடத்திற்கு மட்டக்களப்புமாவட்டத்தைச்சேர்ந்த, கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா. கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) மத்திய செயற்குழு உறுப்பினர்களால், மூத்த உபதலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் சில அமைப்புகளுடன் இணைந்து தமிழரசுக் கட்சிக்குமாற்றுஅணியாக, மக்களுக்குஅர்ப்பணிப்புடன்சேவையாற்றவேண்டும்என்ற ஒரு பொதுநோக்கத்துடன் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிட்டு கணிசமான இடங்களைக் கைப்பற்றியது யாவரும் அறிந்ததே. ஆனால் என்னநோக்கத்துகாகநாம்தேர்தலில்போட்டியிட்டோமோஅதற்குமாறாகஒருசில உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளதால் அவ்வாறனவர்களைச் சபை உறுப்பினர்பதவிகளில்இருந்துநீக்குவதற்கு, மத்திய செயற்குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு செயலாளர் நாயகத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அதற்கு அமைவாக ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்ட உறுப்பினர்களைப்பதவிநீக்கம்செய்வதற்குதேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என செயலாளர்நாயகம் எடுத்துக் கூறினார்.

அடுத்ததாகதமிழர்விடுதலைக்கூட்டணியின் வடமராட்சிப்பிரதேசத்துக்கான அமைப்பாளராக பொ. குகதாசன் நியமனம் செய்யப்பட்டார். ஒவ்வொருமாவட்டத்திலும்உள்ளஎமது கட்சியின் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்என்றகோரிக்கையும்முன்வைக்கப்பட்டது.

ஓகஸ்ட் மாதம் நடக்கவிருக்கும் வருடாந்த தேசிய மாநாட்டை மட்டக்களப்பில் நடத்துவதாகவும்தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் ஒரு பலமான அமைப்பாக எமது கட்சியை உருவாக்குவதற்கு, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்எனசெயலாளர்நாயகம் வீ. ஆனந்தசங்கரி தனது உரையில் குறிப்பிட்டார்-என்றுள்ளது. (21)





## பிரதி முதன்மைச் செயலாளர் தலைமையில் வடமாகாண கணக்காய்வுக் குழுக் கூட்டம்

வடக்கு மாகாணக் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் அரை ஆண்டுக்கான கூட்டம் முதற்தடவையாக பிரதிமுதன்மைச்செயலர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கணக்காய்வுத் திணைக்களத்தால் ஆய்வு செய்யப்படும் மாகாண அமைச்சுக்களின் கணக்கு விவரங்கள் தொடர்பில் மீளாய்வுக் கூட்டங்கள் இதுவரைகாலமும் அமைச்சு மட்டத்தில்நடைபெற்றுவந்தது. இந்தக் கூட்டத்தில் வருடாந்தக் கணக்கு விவரங்கள் மற்றும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு வந்தது. கணக்கு விடயங்களில் வடக்கு மாகாணம் சிறப்பான நிலையில் உள்ளது. அதனால் கடந்த வருடம் நாடாளுமன்றக் கணக்காய்வுக் குழுவின் அரச விருதுகளைப் பெற்றது. ஆகவே மாகாணத்தின் கணக்குத்தொடர்பான விடயங்களை மேலும் விரிவு படுத்தும் நோக்கில் முதற் தடவையாக இதுவரை காலமும் அமைச்சு மட்டத்தில்நடைபெற்ற இந்த கூட்டம் பிரதிமுதன்மைச் செயலர்மட்டத்தில் செயலர் ஒன்றுகூடல்மண்டபத்தில் நடைபெற்றதுஎன்று தெரிவிக்கப்பட்டது. இதில் வருடாந்தக் கணக்குவிடயங்கள்தொடர்பில் ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் முதன்மைக் கணக்காளர்கள் அமைச்சின் செயலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (7)

# மடுத் திருத்தலத்தில் சுற்றுலா நீதிமன்றம்

### இன்றுமுதல் இயங்கும்

மன்னார், ஜூன் 29

மன்னார், மடுத் திருத்தலத்தின் வருடாந்த ஆடிமாதத் திருவிழாவை ஒட்டி அந்தப் பகுதியில்இன்றுமுதல்சுற்றுலாநீதிமன்றத்தின் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடுத்திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா தொடர்பிலான இறுதிக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றபோதே இவ்வாறுதெரிவிக்கப்பட்டது.

மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அலுவலகத்தில்இடம்பெற்ற இந்தக்கலந்துரையாடலுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தலைமை தாங்கினார். கிறிஸ்தவ மத விவகாரத் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடுசெய்தனர்.

கலந்துரையாடலில் பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர், வீதி, உணவு, தங்குமிடம், மின்சாரம், சாரணர் சேவை வசதிகள்தொடர்பில்மீளாய்வுசெய்யப்பட்டன. இதனிடையே திருவிழாக் காலங்களில் திருத்தலச் சூழலில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டுசுற்றுலாநீதிமன்றத்தைச்செயல்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலா நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும்இரண்டாம்திகதிவரையில்இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தலத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி சிறப்பு ரயில் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

இதனிடையே பக்தர்களின் குடிதண்ணீர் வசதிகளுக்காக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து வருகின்றது. கலந்துரையாடலின் போது திருவிழாவுக்கான செலவீனங்களுக்காக அரசின் பத்து இலட்சம் ரூபா காசோலையை கிறிஸ்தவ மத அலுவல்கள்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், பின்டோ, மன்னார்ஆயரிடம்கையளித்தார். இந்தக் கலந்துரையாடலில் குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்டர் சோசை, மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்பணி எஸ். எமிலியானுஸ்பிள்ளை, கிறிஸ்தவமதஅலுவல்கள்திணைகளத்தின் உதவிப்பணிப்பாளர் பின்டோ, மன்னார் மாவட்டச் செயலகத்தின் முதன்மைக் கணக்காளர் எஸ். செல்வரட்ணம் மற்றும் மடு பிரதேச செயலாளர், திணைக்களங்களின் அதிகாரிகள், போக்குவரத்துச்சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட துறை சார்ந்தோர் கலந்துகொண்டனர். (21, 213)

# தென்மராட்சிப்பிரதேசஅபிவிருத்திக்கு ரூபா.90 மில்லியன்கோரப்பட்டுள்ளது

*சரவணபவன் எம்.பி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 29
இந்த ஆண்டு அபிவிருத்திப் பணிகளுக்காக நாடாளுமன்றத்தில் பேசி 90 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்ளவுள்ளேன். என்னுடைய உதவி தென்மராட்சிக்குக் கிடைக்கும். அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திப்போம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கச்சாய் பொதுநோக்குமண்டபத்திறப்புவிழாநேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கச்சாய் தெற்கு மாதர் சங்கத் தலைவி திருமதி ச.சிதம்பரநாதன் தலைமையில்இடம்பெற்றது. இந்தநிகழ்வில்விருந்தினராகக்கலந்துகொண்டுமண்டபத்தைத்திறந்துவைத்துஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது;

இந்தவருடமும்எமதுபிரதேசத்துக்குதேவையானநிதியை நாடாளுமன்றில் கேட்டுள்ளேன். தென்மராட்சியை அபிவிருத்திசெய்வதுஇந்தவருடத்துக்கானஎனதுதிட்டம். அதற்கு 90 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொள்ளவுள்ளேன். கடந்தமுறைவலிகாமம்மேற்குசங்கானையில்பலமில்லியன்ரூபாவழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

அதேபோல் தென்மராட்சிக்கும் கிடைக்க வேண்டும். ஏனைய பிரதேசங்களை விட தென்மராட்சிப் பிரதேசம் பொருளாதார ரீதியில் பங்களிப்புத் தருகின்ற ஒரு பிரதேசமாகும். இங்குநான்குஅமைப்புக்களுக்குநிதிஉதவி வழங்கப்பட்டது. முதலாவதாக கச்சாய்பொதுநோக்குமண்டபத்தைத் திறந்து வைத்துள்ளேன்.

சரசாலைக்கிராமமும்பெண்கள்தலைமைத்துவம்உடைய கிராமம் ஆகும். நீங்கள் குறுகிய காலத்தில் உங்கள் மண்டபத்தை கட்டி முடித்துவிட்டீர்கள். பெண்கள் எல்லாவிதத்திலும் இன்று முன்னுக்கு வந்துள்ளனர். துணிச்சல் மிக்கவர்கள் நீங்கள்.

இன்று பெண்களுக்கு 25 வீதம் அரசியலில் சமவுரிமை கிடைத்துவிட்டது. பெண்களுக்கு நீதி வேண்டும் என்று கூறுகின்றோம். என்னுடைய உதவி தென்மராட்சிக்குக் கிடைக்கும் 4 லட்சம் ரூபா வீதிக்கு ஒதுக்கியுள்ளேன். அபிவிருத்திபற்றிச்சிந்திப்போம். கல்வியிலிலும்அபிவிருத்தியிலும் ஆர்வத்தைக் காட்டுங்கள் என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலகஉதவித்திட்டமிடல்பணிப்பாளர்செ.சுபச்செல்வன், மதிப்புறு விருந்தினர்களாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர்செ.பிரதாப், ஜே/324கிராமஅலுவலர் க.ஜனகன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.ஆனந்தகுமார், சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெயசிங்கரா ஆகியோர் கலந்து கொண்டனர். (21,159)

# அமர்வில் கலந்து கொள்ளாது ஒப்பமிட்டமாநகரஉறுப்பினர்

*யாழ். மாநகரசபையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாண மாநகர சபையின்கடந்நவாரஅமர்வில் கலந்துகொள்ளாத அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இரகசியமான முறையில் திருட்டுத் தனமாக தினவரவுப் பதிவேட்டில் ஒப்பமிட்டுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இந்த மாதத்துக்கான அமர்வு கடந்த 22ஆம் திகதியும் அதன் தொடர்ச்சி25ஆம்திகதியும் இடம்பெற்றது. இதன் போதுகூட்டம்ஆரம்பமாவதற்கு முன்னர் வருகை தந்த ஓர் உறுப்பினர் ஒரு சில நிமிடங்கள் மட்டும் சபையில் இருந்துவிட்டு கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரேசபையைவிட்டு வெளியேறியுள்ளார். அதாவது சபை ஆரம்பிப்பதற்கான கோர மணி ஒலிப்பதற்கு முன்னரே சபையை விட்டு வெளியேறியதோடு சபை நிறைவுறும்வேளை வரையில் அங்கு சமூகமளிக்கவே இல்லை.

இந்த நிலையில் குறித்த உறுப்பினர் கூடத்தில் கலந்து கொண்டதற்கான தினவரவுப் புத்தகத்தில்ஒப்பமிட்டுள்ளார். சபையின் தொடர்கூட்டம்வெள்ளிக்கிழமைஇடம்பெற்றபோதும் குறித்த உறுப்பினர் சபைக்கு சமூகமளிக்கவில்லை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் நபர் ஒருவரே இவ்வாறு சபைக்கு சமூகமளிக்காது ஒப்பமிட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

உள்ளூராட்சி சபையின் சட்டத்துக்கேற்பஓர்மாதாந்தக் கலந்துரையாடலில் சமூகமளிக்க முடியாத உறுப்பினர் ஒருவர் முறைப்படி முதல்வர் அல்லது தவிசாளருக்கு விடுமுறையை விண்ணப்பிக்க முடியும். அல்லது முன் அனுமதி இன்றிச் சமூகமளிக்காது விடுத்து மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க முடியும். இதேநேரம் சபையின்மாதாந்தச்செயற்பாடு ஒன்றில் பங்குகொள்ளாத உறுப்பினர் ஒருவரின் மாதாந்தக்கொடுப்பனவை நிறுத்தும்அதிகாரமும்உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (21)

# மீண்டும் ஒரு போர் நடக்கும் என்ற அச்சத்தில் கொழும்பு

*மாகாண அமைச்சர் அனந்தி கூறினார்*



**சாவகச்சேரி, ஜூன் 29**

**எமது பிரதேசத்தில் மீண்டும் ஒரு போர் இடம்பெறாதென அரசு உத்தரவாதம் வழங்க மறுத்துவருவதால் புலம் பெயர் நாடுகளில் உள்ள எம்மவர்கள் இங்கு முதலீடு களைச் செய்ய முன்வருவதில்லை. அவ்வாறான உத்தரவாதம் வழங்கும்பட்சத்தில் புலம்பெயர் நாடுகளில் உள்ள எம்மவர்கள் மாகாணத்தில் பல்வேறு முதலீட்டுத் திட்டங்களை உருவாக்கி இங்கு வேலைவாய்ப்பின்றிக் காணப்படும் பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கமுடியும்**

இவ்வாறு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி, தனன்களப்பு அறுகுவெளிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளஉப்பளத்துக்கானஆரம்பநிகழ்வில்கலந்து கொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது பிரதேசங்களில் மேற்கொள்ளக் கூடியதொழில்நிறுவனங்களைஆரம்பிக்க அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பட்சத்தில் எமது பிரதேசத்தில் காணப்படும்வேலையில்லாப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுபலகுடும்பங்களின்பொருளாதாரம்மற்றும்வாழ்வாதாரப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அரசு உத்தரவாதம்வழங்காதநிலையிலும் 2013 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் 200 மில்லியன் ரூபா செலவில் பெரியசெயற்றிட்டத்தை மேற்கொண்டதுடன் இப்பகுதியில்வாழும்போரால் பாதிக்கப்பட்ட மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்டகுடும்பங்களைச்சேர்ந்தபலருக்குநேரடியாகவும் மறைமுகமாகவும் வருவாயைத் திரட்டக்கூடிய வகையில் தொழில்வாய்ப்புகளை வழங்க முன்வந்த நிறுவனத்தினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நாட்டில்போர்முடிவடைந்தநிலையில் மீண்டும் ஒரு போர் நிகழும் என்ற நிலை அரசின் மத்தியில் தற்போதும் உள்ளது என்றே கருதவேண்டும். அவ்வாறான நிலைப்பாட்டில் கொழும்புஅரசுஉள்ளமையைஉணரமுடிகிறது. ஏனெனில்தொழில்வளங்களை இங்கு ஆரம்பிப்பதற்கான அதிகாரங்களை அரசு தம்வசம் வைத்திருப்பதால் தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்க அவர்களிடம் அனுமதி பெறவேண்டியுள்ளது. அனுமதிக்க விண்ணப்பித்தால் பல்வேறு காரணங்களைக்காட்டிமறுத்துவிடுகிறது. இவ்வாறான நிலையில் பெருமளவு முதலீடுகளைமேற்கொண்டுதொழில்களை ஆரம்பித்துச் செயற்படும் வேளையில்மீண்டும்போர்ஆரம்பித்தால் தொழில் முயற்சிகளுக்குச் செலவிடும் நிதி திட்டமிட்டு அழிக்கப்படும் என்ற அச்சம் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களிடம் காணப்படுவதால் இங்கு தொழில் நிறுவனங்களை நிறுவப் பின்னடிக்கின்றனர். மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வு தொடர்பானஅமைச்சுக்கள்மாகாணசபைக்கு வழங்கப்படுமாயின் தற்போது படையினரால் மேற்கொள்ளப்படும் மறுவாழ்வு வேலைத்திட்டங்களை மாகாண அரசு மேற்கொண்டு மக்களுக்குச்சிறப்பானசேவைகளைவழங்க முடியும். மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்கள்பிரதிநிதிகள்படையினருடன்நண்பர்களாகச்செயற்படவேண்டியுள்ளது. இந்த நிலை மாற மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வு அமைச்சு மாகாண சபையின் கீழ் செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அரசு வருடாந்தம் ஆறுலட்சம் தொன் உப்பைஇறக்குமதிசெய்துபெரும்அந்நியச் செலாவணியை செலவழித்து வருகிறது. ஆனையிறவு உப்பளம் நடுவண் அரசால் நிர்வகிக்கப்படுவதனால் அதில் கிடைக்கும் வருமானம் மாகாணஅரசுக்குக்கிடைப்பதில்லை. தற்போது ஆரம்பிக்கப்படும் தனியார் உப்பளத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் வரவு செலவுத் திட்டங்கள் மூலம் பெரும்பாலான பகுதிகளை சாவகச்சேரிபிரதேசசபையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (21,9)

# ரூ. 200 மில்லியன் முதலீட்டில் யாழ்ப்பாணத்திலும் உப்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
30 வருடப்போரின்பின்னர் 200 மில்லியன் ரூபா முதலீட்டில்யாழ்ப்பாணத்தில்உப்புஉற்பத்திநிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் உப்பு உற்பத்தி நிறுவனம் திறந்துவைக்கப்பட்டது. வடக்கு மாகாணமகளிர்விவகாரம்மற்றும்கைத்தொழில் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் நிறுவனத்தைத் திறந்து வைத்தார்.

வடக்குமாகாணசபைமற்றும்தென்மராட்சிப் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட 100 ஏக்கர் அரச காணியில் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது.

லண்டனில்புலம்பெயர்ந்துவசித்துவரும்குப்பிளானைச் சேர்ந்த கந்தையா பிரேம்தாஸ் இதற்குமுதன்மைமுதலீட்டாளராக 200 மில்லியன் ரூபா நிதியை முதலீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த உப்பு உற்பத்தி நிறுவனத்தில் யாழ்ப்பாணமாவட்டத்தைச்சேர்ந்த 300 இளையோருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 110 வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



நிகழ்வில், வடக்குமாகாணமுதலமைச்சரின் செயலளார் கேதீஸ்வரன், வடக்கு மாகாண சபைஉறுப்பினர்களான, கே.சயந்தன், சுகிர்தன், தென்மராட்சிப் பிரதேச செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ஸ்ரீரங்கன், கைத்தொழில் திணைக்கள மாகாணப்பணிப்பாளர் ஸ்ரீமோகனன், ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனர் சகாதேவன், தென்மராட்சிப் பிரதேச சபைத் தவிசாளர் கந்தையா வாமதேவன், தென்மராட்சிப்பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (21,106)

# வடமாகாண அரச சாரதிகளுக்கான பொதுக்கூட்டம்

கிளிநொச்சி, ஜூன் 29
வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம்எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

கூட்டத்தின்போதுசிறப்புக்கருத்தரங்கும்இடம் பெற இருப்பதால் அனைத்துச் சாரதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து செல்லும்சாரதிகளுக்கு வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனவும் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் தலைவர் ம.கஜந்தன் அறிவித்துள்ளார். (21)





# விழிப்பூட்டல் எழுச்சிப் பேரணி

மட்டக்களப்பு,ஜீன் 29
சூழல்நேயத்துடன்விவசாய அபிவிருத்தி இலக்குகளை அடையக் கைகோர்ப்போம் எனும் தொனிப்பொருளில்விழிப்பூட்டல் பேரணிநேற்று மட்டக்களப்பு களுதாவளையில் இடம்பெற்றது.
விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு விரிவாக்கப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழிப்பூட்டல் பேரணி களுதாவளை பிரதான வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் முன்னால் ஆரம்பிக்கப்பட்டு, பிரதான வீதிவழியாகச் சென்று களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய வீதி வரை சென்றது.
இதன்போது இரசாயனப்பாவனையைக்குறைத்தல்தொடர்பானதுண்டறிக்கைவிநியோகிக்கப்பட்டதுடன், சூழல் நேயத்துடன் விவசாய அபிவிருத்தி இலக்குகளை அடையக் கைகோர்ப்போம் எனும் விளம்பரப் பலகையும் திறந்து வைக்கப்பட்டது.
இந்தப்பேரணியில்விவசாயத்திணைக்களத்தினர், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினர், பாடசாலை மாணவர்கள், சுகாதாரத்துறையினர், விவசாயிகள் பொதுமக்கள், பொலிசார், மற்றும் அரச, அரசசார்பற்றஅமைப்புக்களின்பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# போதை பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜீன்29
சென்னையில் இருந்து போதைப்பொருள் கடத்தி வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடம் இருந்து சுமார் 7 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.
வானூர்தி நிலையப் பொலிஸ்போதைப் பொருள்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களில் 320 கிராம் ஹெரோயின், 52 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 230 கிராம் ஹஷ்ஸ் போதைப் பொருள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி5)

# விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜீன்29
கொழும்பில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்றவிபத்துக்களில்மூவர்உயிரிழந்துள்ளனர். மிரிஜ்ஜவல, மொரட்டுவ, மஹவிலச்சி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களிலேயே மூவர் உயிரிழந்துள்ளனர்.
அம்பந்தோட்டை அம்பலந்தொட்ட பிரதான வீதியின் மிரிஜ்ஜவல பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.
அம்பந்தோட்டை,கொக்கலபகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இதேவேளை,மொரட்டுவ,பண்டாரநாயக்க மாவத்தையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.முச்சக்கரவண்டிஒன்று பாதசாரிஒருவர்மீதுமோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன்மஹவிலச்சி,ஓயமடுப்பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகியதாலேயே விபத்து இடம்பெற்றது. ரன்துவ பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (றரி5)

# குடிதண்ணீர் இல்லாமையால் அல்லாடும் தட்டுவன்கொட்டி

கிளிநொச்சி, ஜூன் 30
**தட்டுவன்கொட்டிக்கிராமத்துக்கானகுடிதண்ணீர்கடந்தஒருவாரமாக வழங்கப் ப டவில்லை என்று கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

கிளிநொச்சி, கண்டாவளைபிரதேசத்துக்குட்பட்ட தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் உவர் தன்மை கொண்ட நீரே உள்ளது. பிரதேச சபையினரால் குடி தண்ணீர் வழங்கல்மேற்கொள்ளப்பட்டுவந்தது.எனினும்குடிதண்ணீர்வழங்கல் சீராக நடைபெறுவதில்லை என்றுகூறப்படுகின்றது. தற்போது வேறு திணைக்களத்தினர் குடி தண்ணீர் வழங்கலை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதுவும்கடந்தஒரு வாரமாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
தற்போது மிகவும் வறட்சியான கால நிலை காணப்படுகின்றது. பிரதேசத்தில் கடும் தண்ணீர் பற்றாக்குறைகாணப்படுகின்றது. குடி தண்ணீரும் இல்லாது பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
சிறுநீரக நோய்த்தாக்கத்தைக் கட்டுப்படும் அரச தலைவரின் திட்டத்துக்கு இணங்க கிராமிய நீர்வழங்கல் திணைக்களத்தினர் குடி தண்ணீர் வழங்கல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதேசசபையினர் தெரிவிததனர்.
இந்தக் கிராமத்துக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்ல முடியாது உள்ளது என்றும், வீதித் திருத்த வேலை காரணமாக இடைவழியில் வைத்தே குடி தண்ணீரை வழங்கவேண்டியுள்ளதுஎன்றும், குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய நடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் கிராமய நீர்வழங்கல் திட்டத்தை மேற்கொள்ளும் அதிகாரியிடம் இது தொடர்பில் கேட்டபோது, மின்சாரவசதிஇல்லாதால்அருகில் இருந்த வீடு ஒன்றில் இருந்தே மின்சாரம் பெறப்பட்டு குடி தண்ணீர் வழங்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மின்சாரப் பாவனை காரணமாக கருவி ஒன்று பழுதடைந்துள்ளது. விரைவில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். மின் இணைப்பு மிக விரைவில் பெறப்பட்டுகுடிதண்ணீர்வழங்கல்நடைபெறும் என்றார். கடந்த ஒரு வாரமாக குடி தண்ணீர் வழங்கலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று அந்த அதிகாரியிடம் கேட்ட போது பிரதேச சபையினர் வழங்கினர் என்று தெரிவித்தார்.
இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர் என்று தெரிவித்த பிரதேச சபையினர், மக்கள் கோரியமைக்கு அமைய குடி தண்ணீர் வழங்கப்பட்டதுஎன்றுதெரிவித்தனர். (ற-6)

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், ஜீன்
திரப்பன உட்டிமடுவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்இரவுநடந்தது. உயிரிழந்தவர் மதுரங்குலிபல்லமபிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடையவர் என விசாரணைகளில்தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில்மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# இழப்பீடு வழங்குவதற்கு ஜயரத்னவுக்கு உத்தரவு

கொழும்பு,ஜீன்29
நிவத்தக சேத்திய மகா வித்தியாலயத்தின் அதிபரை இடமாற்றிய சம்பவம் தொடர்பில் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜயரத்னவுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பாதிக்கப்பட்ட அதிபருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறு உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. (ற-ரி5)

# பிரசன்னவின் வழக்கு செப்.13க்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜீன்29
மேல் மாகாண முன்னாள் முதலமைச்சரும்கூட்டுஎதிர்க்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க மற்றும் அவரது மனைவி உட்பட மூன்று பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றநீதிபதிசம்பா ஜானகிராஜரத்னமுன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இந்த உத்தரவுபிறப்பிக்கப்பட்டது.
முறைப்பாட்டாளர் சார்பில் வழக்கை நெறிப்படுத்தும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகே கடமை நிமித்தமாக அவசரமான வெளிநாட்டு பயணம் ஒன்றைமேற்கொண்டுள்ளதால், வழக்கு விசாரணைகளை ஒத்திவைக்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.
இதனையடுத்து வழக்கை செப்டம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி அன்றைய தினம் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சாட்சியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.
மீதொட்டுமுல்ல பிரதேசத்தில் உள்ள சதுப்புநிலத்தில்குடியிருக்கும்சட்டவிரோத குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்தி கொடுக்கஜெராட்மெண்டிஸ்என்றவர்த்தகரிடம் 64 மில்லியன் ரூபா பணத்தை கேட்டுபலவந்தப்படுத்தி, அச்சுறுத்தியதாக பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி உட்படமூன்றுபேருக்குஎதிராகவழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ற-ரி5)

# போதைப்பொருள் விற்ற பதினொருவர் சிக்கினர்

திருகோணமலை,ஜீன்29
திருகோணமலைமாவட்டத்தில்பொசன்தினத்தன்று திருட்டுத்தனமாகபோதைபொருள்களைவிற்பனை செய்த 11 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். மதுபானசாலைகள் மூடப்பட்டிருந்தநிலையில் சட்ட விரோதமான முறையில் பியர் மற்றும் மதுபானங்களை அதிக விலைக்குவிற்பனைசெய்து கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
கைதுசெய்யப்பட்டவர்கள்திருகோணமலைநகரம், நிலாவெளி, மூதூர்மற்றும்கிண்ணியாபகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனதெரியவந்துள்ளது.
கைது செய்யப்பட்ட 11பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் 4ஆம் திகதி மூதூர்நீதிமன்றத்திலும்5ஆம்திகதிதிருகோணமலை நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (றரி5)


# ஈரானிடம் இருந்து கச்சா வாங்குவதை நிறுத்தோம்

## அமெரிக்காவுக்கு துருக்கி பதில்

இஸ்தான்புல், ஜீன் 29
"ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தப் போவதில்லை" என்று துருக்கி அமெரிக்காவுக்கு பதிலளித்துள்ளது.
ஈரானுடனான வர்த்தக உறவுகளைத் துண்டிக்குமாறு உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது அமெரிக்கா. ஈரானைத் தனிமைப்படுத்தவும் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதிக்கவும்




ஏற்ற வகையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அமெரிக்காவின் அழைப்பை நேரடியாக நிராகரித்தது துருக்கி.
"ஈரானிடம் கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையில் முடிவு எடுத்தால் நாங்கள் அதை பின்பற்றத் தயராக இருக்கிறோம். ஆனால் ஈரானிடம் எண்ணெய் வாங்காதீர்கள் என்று அமெரிக்கா கூறினால் ஈரானிடம் எண்ணெய் வாங்குவதை நாங்கள் நிறுத்தப் போவதில்லை. எங்களது சகோதர நாட்டுக்கு எதிராக நடக்கும் இந்த நடவடிக்கையைக் கண்டு நாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை" என்று துருக்கியின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# ட்ரம்ப்-புடின் பேச்சு உறுதி

வொஷிங்டன், ஜீன் 29
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அதிபர் புடின் இடையில் பேச்சு நடைபெறுவதற்கு இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளும் நேற்றுச் சம்மதம் தெரிவித்தனர். அமெரிக்காவிலோ அல்லது ரஷ்யாவிலோ அல்லாமல் மூன்றாம் நாடொன்றில் இந்தப் பேச்சு நடைபெறும். இதன்படி ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் பேச்சு நடைபெற வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.
அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அண்மைக்காலமாக சுமூகமான உறவு நிலவவில்லை. ஏகப்பட்ட விவகாரங்களில் இந்த இரண்டு நாடுகளும் தமக்குள் முரண்பட்டுநிற்கின்றன. சிரிய விவகாரம், ரஷ்யாவின் முன்னாள் உளவாளி ஸ்கிர்போல் கொலைமுயற்சி, இணையத் தாக்குதல்கள், ஆயுத விநியோகம், கொரியத் தீபகற்ப விவகாரம் என்று இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். இவ்வாறானதொரு நிலையில் அமெரிக்காவுடன் நெருக்கமாக கடும் முயற்சிகளை எடுத்துவந்தார் ரஷ்ய அதிபர் புடின். இந்த நிலையில் அமெரிக்கா ரஷ்யாவின் அழைப்புக்கு இணங்கியுள்ளது. இரு தலைவர்களும் விரைவில் சந்திப்பார்கள் என்ற தகவலை இரண்டு நாடுகளினதும் பிரதிநிதிகள் நேற்றுத் தெரிவித்தனர். (ம)




அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்திருந்த பயணத் தடை உத்தரவுக்கு அமெரிக்க உச்ச நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் அதைக் கண்டித்து நியூயோர்க் நகரில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. (ம)

# ஜோசப் ஜக்சன் உயிரிழந்தார்

வொஷிங்டன், ஜீன் 29
பொப் இசையின் மன்னன் என்று அழைக்கப்படும் மைக்கல் ஜக்சனின் தந்தை ஜோசப் ஜக்சன் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
அமெரிக்காவின் லொஸ் வெகாஸ் நகரில் வசித்து வந்தார் ஜோசப் ஜக்சன். 'ஜக்சன் 5 பிரதேர்ஸ்' என்ற இசைக் குழுவை உருவாக்கி மைக்கல் ஜக்சனை இசை உலகுக்கு அழைத்து வந்தவர் ஜோசப் ஜக்சனே. கடந்த சில ஆண்டுகளாகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (ம)




# கச்சா சந்தையில் இருந்து இலகுவில் வெளியேறோம்

## அமெரிக்காவுக்கு ஈரான் பதிலடி

தெக்ரோன், ஜீன் 29
"அமெரிக்கா கோரிவருவது போன்று கச்சா சந்தையில் இருந்து இலகுவில் எம்மை வெளியேற்ற முடியாது" என்று தெரிவித்தது ஈரான்.
"ஒவ்வொருநாளும் ஈரான் சுமார் 2.5 மில்லியன் பெரல் கச்சா எண்ணெயை உலக நாடுகளுக்கு வழங்கி வருகிறது. கச்சா எண்ணெய் விநியோகத்தில் ஈரான் பெரிய அளவில் பங்களிப்புச்செய்கிறது. ஈரானை கச்சா சந்தையில் இருந்து தனிமைப்படுத்துவது அமெரிக்கா நினைப்பது போன்று இலகுவான செயல் இல்லை" என்று ஈரானின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

# உள்ளம் கவர்ந்த நாய்!

மட்ரிட், ஜீன் 29
ஸ்பெய்னில் பொலிஸாரால் பயிற்சி வழங்கப்பட்டு வளர்க்கப்படும் நாயொன்று பன்னாட்டுச் சமூகத்தின் பாராட்டைப் பெற்றது.
ஸ்பெய்ன் நாட்டின் மட்ரிட் நகரில் பொலிஸ் துறையைச் சேர்ந்த பயிற்சியளிக்கப்பட்ட போன்ச்சோ நாயின் நிகழ்ச்சி ஒன்று பொதுமக்களுக்காக நடத்திக் காட்டப்பட்டது. இதில் ஒரு பொலிஸ் அதிகாரி பேசிக் கொண்டிருந்த போதே திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுவதுபோல் நடித்தார். உடனே நாய் ஓடி வந்து, அதிகாரியின் நெஞ்சில் கால்களால் வேகமாக அழுத்தி, அவரது மூக்கில் மூச்சு வருகிறதா என்று பரிசோதித்து பார்த்தது. மூச்சு வரவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு மீண்டும் அவரது நெஞ்சில் கால்களால் அழுத்தியது. மீண்டும் மீண்டும் மூச்சைப் பரிசோதித்தது. சிறிது நேரம் இப்படியே முதல் உதவி சிகிச்சை அளிப்பது போல் போன்ச்சோ நாய் செய்தது.
உடனே அதிகாரி எழுந்து, நாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டார். போன்ச்சோவின் உயிர் காக்கும் சேவையைக் கண்டவர்கள், நெகிழ்ந்துவிட்டனர். நாயின் செயற்பாடு காணொலியாகவும் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலுமிருந்து பாராட்டுகள் குவிகின்றன. (ம)



# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் முடிவை பிற்போடுங்கள்

## திரேசாவுக்கு ரொனி 'அட்வைஸ்'

லண்டன், ஜீன் 29
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிந்து செல்லும் நடவடிக்கைகளில் மும்முரம் காட்டாது தீர்மானத்தைப் பிற்போட வேண்டும் என்று பிரிட்டனின் தற்போதைய தலைமை அமைச்சர் திரேசா மேவுக்கு பிரிட்டனின் முன்னாள் தலைமை அமைச்சர் ரொனி பிளேர் அறிவுறுத்தினார்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் முடிவுக்கு பிரிட்டன் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில் இவ்வாறானதொரு கருத்து ரொனியிடம் இருந்து வந்துள்ளது.
"எமது அரசு நாட்டின் நலன்களைப்பற்றி யோசனை செய்வதை விட்டுவிட்டு, ஆளும் கன்சர்வேடிவ் கட்சியினரின் நன்மைக்காகச் செயற்பட்டு வருகிறது. தலைவராக இருக்கவேண்டிய தலைமை அமைச்சர் பிணைக் கைதியைப்போல உள்ளார். இதற்கிடையில், பிரிட்டனின்



வருங்காலத்திற்காக போராடுவதில் முக்கிய பங்கு கொண்டுள்ள தொழிலாளர் கட்சியின் தலைவர் அதைச் செய்ய மறந்துவிட்டார். ஆளும்கட்சி மற்றும் எதிர்கட்சியால் முடியாது என்பதால் நாடாளுமன்றம் தன்னைத்தானே உறுதிப்படுத்த வேண்டும். இப்போது மக்கள்தான் இறுதி முடிவை எடுக்க வேண்டும், ஏனெனில் எப்படிப்பட்ட நாடு வேண்டும் என்பதை அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது பிரிட்டனுக்கு பெரிய அடியாக இருக்கும். நாம் யோசிக்க அவகாசம் உள்ளது. எனவே மார்ச் 2019 என்ற காலக்கெடுவை அதிகரிக்க வேண்டும். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நாம் எடுக்கவிருக்கும் முக்கிய முடிவு இதுதான்.
உலகின் மிகப்பெரிய வணிகச் சந்தை மற்றும் மிகப்பெரிய யூனியன் என்னும் அந்தஸ்தை பிரிட்டன் இழந்துவிட்டது. அமெரிக்கா தனது முக்கிய நட்பை இழந்துவிட்டது. ஐரோப்பிய யூனியனுக்கு வெளியில் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடு நாம்தான் என்று கூறிக்கொள்ளலாம். ஆனால் அது உண்மையல்ல. ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேற முடிவெடுத்த பின்னர், அமெரிக்காவுடன் பிரிட்டன் நெருக்கமாக இருக்கிறதா? உறவு பலமாதாக இருக்கிறதா?" என்று ரொனி மேலும் தெரிவித்தார். (ம)

## உம்பர்களும் பணிந்தேத்த அருள் ஒளி விளங்கும்

# கும்பழாவளை

கே.எஸ். சிவஞானராஜா

இலங்கையின் வடபாலமைந்த அற்புதத் திருத்தலங்களுள் அளவையம் பதியிலே அமைந்துள்ள கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் அருளின் தனித்துவப் பேறுடையது. மூர்த்தி,தலம்,தீர்த்தம் மற்றும் அதிசயம் நிறைந்த அழகியல் வனப்புடைய ஆலயமாக திகழ்கிறது. ஆகம விதிப்படி பூஜை வழிபாடுகள் கிரமமாக இடம்பெற்றுவருகின்ற பெருங்கோவிலாக ஆன்மிக எழில் தருகிறது. ஆம்,இணுவையூர்ப்புலவர் கும்பழாவளைத் தேவதேவனை வாயாரப் புகழ்ந்து பாடிய பாடல் அற்புதங்கள் பலதை மொழிகிறது. அவன் கொண்ட திருவருளின் மிடுக்கை பக்தி உணர்வாய் செந்தளிக்கிறது.



***அருளொளி விளங்கும் முக்கண்***
***ஐங்கர முதலே ஐயா***
***இருளெனும் செருக்கில் மூழ்கி***
***ஈறிலா அவஸ்தைப் பட்டேன்,***
***பொருளெனும் உனது செய்ய***
***புண்ணியா சரணம் புக்கேன்***
***திருவருள் தருவாய்***
***கும்பழாவளைத் தேவதேவே..!***

இங்கு; 'நான்' என்ற ஆணவச் செருக்கை அறவே அழித்தொழிக்கும் வழிபாட்டின் மகத்துவத்தை கும்பழாவளையில் அருள் ஒளியாய் காண முடிகிறது. ஆணவம் என்ற நோயின் பிணி தனை அகத்தினில் குடிகொள்ளவிடாது முகத்தினில் அருளெனும் ஒளி பொருந்திட நீடு வாழ வைக்கும் பக்தியை சந்திரசேகரன் தருகிறான். இல்லகத்தில் விளக்காக, நல்லக மாட்சியோடு நாளெல்லாம் அருள் பாலித்து அடியவர்களை அருளன்பால் ஆட்சி புரிகிறான்.

**இயற்கைவளம்**

மருத நிலங்கள் மலிந்தோங்கும், மாமரங்கள் கனிச்சாறு பிழியும், கருதுகின்ற சோலைகள் காய்களைச் சொரியும், கைபட்டு ஓங்கிய பயிர் கதிர்களை எம்மேல் மோதிக் களிக்கும், விருது கொண்ட மக்கள் வரமொடு கரம் சேர்ப்பர், வீடுகள் தோறும் பண்ணிசைகள் ஒலிக்கும், மிருதுவான பசு மந்தைகள் மேவிடும் அளவையில், மணிநாதமொடு வாழ்வு என்றும் இனிக்கும். என்றென்றும் அவன் தாள் பணிந்து பணி செய்து கிடப்பதால் கும்பழா வளையான் ஆட்சியே அளவைக்கு தனிப் பெருந் தூய்மை தருகிறது. மாண்புறு மகிமை தனை அளிக்கிறது.

**வரலாறு**

குதிரை முகமுடைய சோழ அரசிளங்குமரியானவள், தனது குதிரை முகம் நீங்கும் பொருட்டு கீரிமலை என்னும் திவ்ய தீர்த்தமதில் நீராடி தனது குதிரை முகம் முற்றாக நீங்காத நிலைகண்டு மனங் கலங்கினாள். கந்தப் பெருமானை வேண்டிப் பணிந்தாள். விநாயகவழிபாட்டு உபாசனையினால்தான் முகம் சீராகும் என்ற அசரீரி முருகப் பெருமானின் அருள் வாக்காக வழிகாட்டுதல் தந்தது. யாது செய்யவேண்டும் என வினாவி நிற்கவே, "மாவிட்ட புரத்துக்கு தென்திசையாக ஏழு பிள்ளையார் ஆலயங்களை அமைத்து விநாயகப் பெருமானை ஆங்கு ஸ்தாபித்து அபிஷேகம் செய்து ஆராதிப்பாயாக. குதிரை முகம் அறவே நீங்கி மனித முகமுடைய அழகியாக நீ தோற்றம் கொள்வாய்" என்று அசரீரி மீண்டும் நல்வழி காட்டுதல் செய்தது. அதன்படியே மாருதப் புரவீக வல்லியும் பணி செய்தாள். இந்தியாவில் இருந்து ஏழு பிள்ளையார் விக்கிர கங்களைக் கடல் மார்க்கமாகக் கொண்டு வருவதற்கு தந்தையாரிடம் விண்ணப்பிக்க வும் நேரகாலம் இடமளித்தது.

**நாளை**
**30.06.2018**
**சனிக்கிழமை**
**ஆனி 16**

திதி: துதியை பி.ப. 02.36
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப.06.15
சுபநேரம்: 02.56–04.26 வரை
ராகுகாலம்: 08.56–10.26 வரை

'கொல்லங்கலட்டி,வரத்தலம்,அளவோலை,கும்பழாவளை,பெருமாக்கடவை,ஆலங்குழாய்,கல்வளை' என ஏழு திருப்பதிகளைச் சமகாலத்தில் உருவாக்க இந்தியாவில் இருந்து கட்டடக் கலைஞர்களைக் கடல் மார்க்கமாகச் சோழ மன்னன் தருவித்தான். கட்டடக் கலையில் தேர்ச்சியுடைய கலைஞர்கள் ஆயிரம் பேர் வரை காங்கேசந்துறையை வந்தடைந்தனர். வளர்பிறைச் சதுர்த்தியில் ஏழு விநாயகர் ஆலயங்களை அமைப்பதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. கருங்கல்லும் பொலிகல்லும் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டது. ஆலயக் கருவறைகள் ஒவ்வொன்றும் திருவுரு வம் கொண்டன.

கொல்லங்கலட்டிப் பிள்ளையாரை ஸ்தாபிக்கும் போது தோஷங்கள் அறவே நீங்கியது. வரத்தலம் பிள்ளையாரை ஸ்தாபிக்கும் போது, மாருதப்புரவீகவல்லியின் குண்மம், கூனல் நோய் நீங்கியது. அளவோலையிலே பிள்ளையாரை ஸ்தாபிக்கும் போது மானிட ஜென்ம மகத்துவ வாலாயம் இளவரசியின் உடலில் புரையோடியது. மத்தியில் அளவைக் கும்பழாவளையில் பிள்ளையாரை ஸ்தாபிக்கும்போது மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகச் சாயல் அறவே நீங்கியது. மெல்ல மெல்ல பையப் பைய குதிரை முகம் அகல வரம் கொடுத்த இடம் மாவிட்டபுரம்.

குதிரைமுகம் முற்றாக நீங்கி மானிட வடிவம் எடுத்த இடம் மாவிழிதிட்டி.இவ்விடம் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய முன்றலில் அமைந்துள்ளது. இதன் காரணம் கொண்டே தீர்த்தக் குளம் ஒன்றும் வெட்டப்பட்டது. அதுவே 'குமாரத்தி குளம்' என அழைக்கப்படலாயிற்று. அதே வேளை ஆயிரம் பசுக்களும், பயிர்வளம் பெருக்க நூற்றுக்கும் அதிகமான வேளாண்மை செய்வோரும், பிள்ளையார் பூஜையினால் மனங்குளிர நூற்றுக்க ணக்கான ஆலய சேவகர்கள் மற்றும் அந்தணப் பெருமக்கள் என ஆயலச் சுழலில் குடிய மர்த்தப்பட்டனர். அம் மக்களுள், "மாலை கட்டுவோர் ஒரு சாரார்,மடை கொட்டுவோர் ஒரு சாரார்,வேலை பண்ணுவோர் ஒரு சாரார்,வேதமோதுவோர் ஒரு சாரார், சாலை போடுவோர் ஒரு சாரார்,சாமகானம் இசைப்போர் ஒரு சாரார்,சோலை செய்வோர் ஒரு சாரார்,சோடனை செய்வோர் ஒரு சாரார்" என தொண்டு செய்வோர் பலர் உளர்.



இவ்வாறாக கும்பழாவளை உறையும் சந்திரசேகரப் பெருமானை பக்தியுறப் பணிந்து வணங்கிட குடியானவர்கள் ஆலய வளாகத்தை சுழவும் நிலபு லங்களோடு குடியமர்த்தப்பட கலைகள் கம்பீரமாக வளர்ந்தன. இங்கிருந்தே இசைவேளாளர்கள் ஏழுகோயில்களையும் அலங்கரித்தனர். இதன் பிரகாரம் கீரிமலை மாவிட்ட புரத்தானின் சகவாழ்வு சைவ சாம்ராஜ்ஜியமாகிற்று.இன்றோ இந்த ஏழு ஆலயங்களும் சைவ சமய மூலதாரப் பொக்கிஷங்களாக மிளர்கின்றன.

***"ஒப்பரிய வானமுயர்***
***ஓங்கார கோபுரமும்***
***ஒலிமலியு மணிநாதமும்***
***ஓதுபுகழ் சோலைக்குயில்***
***கோலமயில் மேவுமதில்***
***உற்ற பொற் கோயில்"***

அடேயப்பா..! மிகப் பிரம்மாதமாக எழில் கொண்டுள்ளது.

***"பக்திதரும் சித்திதரும்***
***பாசவினை யகற்றும்***
***முத்தி தரும் மோன***
***சுகமளிக்கும் மெத்து புகழ்***
***கும்பழாவளைப்பதியில் கோயில்கொள்***
***குஞ்சரத்தை நம்பியே***
***கைதொழுதக் கால்"***

**தோத்திரம்**

அளவெட்டி வடக்கு மகானுபவர் இராமர் வேதாரணியர் என்பவரால் கும்பழாவளை தோத்திரம் தொகுக்கப்பட்டது. இது 100 பாடல்களை கொண்டமைந்துள்ளது. மாதாவில்லாத மகவது போல வருந்தி நின்று பாடிய திவ்யமான இசைப் பாக்களாக இவை அமைந்துள்ளன.

***"கண்ணான உன்னைப்***
***பிரிந்தின்றளவுங் கலங்கிமிகப்***
***புண்ணாகி நெஞ்சம் புழுங்குதையா வுன்***
***தன் பொற்பதத்தை***
***எண்ணாத வெள்பவச் சோகத்தை***
***மாற்றியினியருள்வாய்***
***பண்ணான சோலை செறி***
***கும்பழாவளைப் பாக்கியமே..!***

(35 ஆவது பாடல்)

**சிறப்பு**

பைங்குலையாவும்செங்குலையாக்கிய பேரதிசயம் கும்பழவளையில் அரங்கேறியது. கோபுர தரிசனத்திலும் இதனைக் காணலாம்.

"கும்பழாவளை திருப்பள்ளியெழுச்சி, கும்பழாவளை விநாயகர் தோத்திரம், கும்பழாவளைப்பபதிகம், கும்பழாவளை இரட்டைமணிமாலை, கும்பழாவளை விநாயகர் கலிவெண்பா, கும்பழாவளை விநாயகர் சாதகம், கும்பழாவளை விநாயகர் ஊஞ்சல், கும்பழா வளை விநாயகர் போற்றித்திருப்பதிகம், கும்பழாவளை ஸ்ரீசுப்பிரமணியர் திருவூஞ்சல், கும்பழாவளை நான்மணி மாலை" என யாவும் ஆலய மஹோற்சவ காலங்களில் அருள் பொலிவு பெறுகின்றன. அடியார்கள் அவற்றை இசையோடு பாடி திருப்பணி செய்கின்றனர்.

**கேணிக்கரை மொழியும் உரை**

யாழ் மாவட்டத்தில் ஓராயிரம் கேணிகள் இருந்ததாக மூதாதையர்களின் கர்ண பரம்பரைக் கதைகள் குறிப்பிடுகின்றன. அவை வயல்களிலும், ஆலயங்களிலும், முதன்மைச் சாலைகளிலும் அமைக்கப்பட்டு ஓரே நேரத்தில் பத்து மாடுகள் தண்ணீர் குடிக்கக்கூடிய வசதியோடு சீராகக் கட்டுப்பட்டிருந்தன.

அந்தவகையிலே கும்பழாவளைக்கு வழி தருகின்ற முதன்மை வீதியின் ஓரமாய் அமைந்திருந்த அழகான கேணி தான் கேணிகளுக்கெல்லாம் ஆரம்ப நிலை தருவதாக அமைந்திருந்தது எனலாம். அதன் படியேதான் கேணிக் கரை என்ற அழகிய கிராமம் கும்பழாவளைக்கு அழகு சேர்த்தது எனவும் சுட்டலாம். ஆனாலும் அதன் இருப்பு என்பது நீண்ட காலங்களுக்கு முன்பாகவே புதைந்து போனமை கவலை தரும் விடயம். அதன் உயிர்பை மீண்டும் கண்டுகொள்ள வேண்டும் என்ற எண்ண விருப்பு இறையன்பின் பால் தோற்றம் கொள்கிறது.இறை அருளின் சித்தம் கைகூட கும்பழாவளையானை வேண்டிப் பணிவோம்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாடகங்கள் ஆரம்பம்

மகிந்த தலைமையில் ஆட்சியைப் பிடித்ததும் வடக்கு கிழக்கு மக்களின் இனப்பிரச்சினைக்குத்தீர்வைக் காணவேண்டும். இந்தப் பிரச்சினையை எப்படியாவது தீர்த்துவிட வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் மகிந்த உள்ளார் என்று தெரிவித்துள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய. தமிழர்களின் தீர்வுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் மகிந்த பேச்சு நடத்துவார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

இவ்வாறானதொருகருத்தைமகிந்தவோஅல்லதுஅவரின் சகாக்களோ வெளியிடுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. கேட்டுக்கேட்டு காது புளித்துப்போனவாக்குறுதிகளில் ஒன்றுதான் இது. 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் மௌனிக்கச் செய்யப்பட்டபோது இலங்கையின் அரச தலைவராக மகிந்தவே இருந்தார். போர்வெற்றியின்பின்னர்தமிழர்களின்பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் அவர் பல்வேறு வாக்குறுதிகளைதமிழர்கள் தாயகத்துக்கு அப்போது வழங்கியிருந்தார்.

தமிழர்தாயகத்துக்கு மட்டுமல்லாமல்அமெரிக்கா, ஐக்கிய நாடுகள்சபை, மேற்குலகநாடுகள், போருக்கு உதவி செய்த நாடுகள் என்று பலதரப்புக்கும் இவ்வாறானதொரு வாக்குறுதியை மகிந்தவழங்கியிருந்தார். இது பரகசியம். ஆனால் இனப்பிரச்சினைகள்என்கிறவகையில்தமிழர்களின்துயர் துடைக்க மகிந்த இம்மியளவும் முன்வரவில்லை. சிங்கள பேரினவாதத்தின் ஒட்டுமொத்த வடிவமாகவே கசப்பான அவரின் ஆட்சிக் காலங்கள் கடந்து சென்றன. இத்தகையதொரு பின்னணி, கடந்த காலப் பதிவுகள் தமிழர்களைச் சுற்றி நிறைந்திருக்கையில், மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அவர் தமிழர்களின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று எவ்வாறு நம்புவது. அத்தகையதொரு சிந்தனையை மகிந்த கொண்டிருப்பவரெனில் போர் முடிவடைந்த பின்னரான தனது ஆறு ஆண்டுகால ஆட்சியின் போது அவரால் இனப்பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும். ஏன் செய்யவில்லை?

இன்னும் சொல்லப்போனால், இனப் பிரச்சினைக்கு முட்டுக்கட்டை போடுவதே மகிந்ததரப்புத்தானே. புதிய அரசமைப்புஉருவாக்கம்இன்றுதடைப்பட்டுநிற்கிறதென்றால் அதற்கு முடிவடைந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மகிந்த மேற்கொண்ட இனத்துவேசப் பரப்புரைகள்தான் முக்கிய காரணம். புதிய அரசமைப்பு முதல் ஆனந்த சுதாகரின் விடுதலை வரை மகிந்த தரப்புத்தான் கூட்டு அரசுக்கு குறுக்கீடு செய்கிறது. எனில், தமிழர்களின் இனப்பிரச்சினையை மகிந்ததீர்த்துவைப்பார்என்பது பாலுக்குப்பூனை காவலுக்கு நின்ற கதைதானே.

மகிந்தவின் மீதிருந்த கடும் அதிருப்தி, கோபாவேசம் என்பன காரணமாகத்தான் மைத்திரிக்கு வாக்களித்து அவரை அரச தலைவராக்கினார்கள் தமிழ் மக்கள். தன்னை அரியணையில் ஏற்றிய தமிழ் மக்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன். அவர்களுக்குப் பதிலுதவி செய்வேன் என்று தெரிவித்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்றுவரை எந்தப் பதிலுதவியையும் தமிழர்களுக்குச் செய்யவில்லை. ரணில் மைத்திரி தலைமையிலான கூட்டு அரசு இனப்பிரச்சினையைத்தீர்க்கும்என்றுநிபந்தனையுடனான, நிபந்தனையற்ற ஆதரவுகளைதமிழ்தரப்புக்கள்வழங்கிய போதிலும் 'நல்லாட்சி' அரசு தமிழர்களை நட்டாற்றில் விட்டதே மிச்சம். தமிழர் தாயகத்துக்கு இன்று அபிவிருத்தியும் இல்லை, தீர்வும் இல்லை. இதனால் கூட்டு அரசின் மீது தமிழ் மக்கள் உச்சக்கட்டக் கொதிப்பில் உள்ளனர். எதிர்ப்பை வெளிப்படையாகவே வெளிப்படுத்திவருகின்றனர். இத்தகையதொரு அசாதாரண, அரசியல் உறுதியற்ற நிலையைப் பயன்படுத்தித் தமது அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகியுள்ளனர் மகிந்த தரப்பினர்.

மாகாண சபைகளுக்கான தேர்தல், அரச தலைவருக்கான தேர்தல்என்பனஅடுத்தடுத்துநடைபெறவுள்ளன. தேர்தல் வெற்றியில் சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் எந்தளவுக்கு முக்கியம் என்பதைக் கடந்த அரச தலைவருக்கான தேர்தலில் மகிந்த நன்றாக உணர்ந்திருப்பார். தக்க பாடம் படித்திருப்பார். ஆக, தேர்தல் வெற்றியைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட நாடகமும், பருவகாலப் பரப்புரையுமே ஹெகலியவின் உரை. அதைத்தவிர வேறொன்றுமில.



# நாங்கள் உண்மையில் ராஜபக்சாக்கள் குறித்து அச்சம் அடைகிறோம்

## முன்னைய மகிந்த ஆட்சியை பகிரங்கமாக விமர்சிக்கிறார் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்

"சிலோன் ருடே" பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியின் தமிழாக்கம்.

தமிழில்- ஆனந்த்

**கேள்வி:** நீங்கள் 2020ஆம் ஆண்டின் அரசதலைவர் வேட்பாளர் பற்றி சாடைமாடையாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தான் அந்த வேட்பாளரா?

**பதில்:** ஆம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் கட்சி சார்பான வேட்பாளர்.

**கே:** ஆனால் வேறுவிதமான கதைகளும் கட்சியின் உள்மட்டத்தில் நிலவுகின்றனவே?

**ப:** அப்படியாக வேறு எதுவித கதைகளும் இல்லை.



**கே:** ஏன் இல்லை? பின்வரிசை உறுப்பினர்கள், குமார் சங்கக்கார குறித்து, சஜித் பிரேமதாச குறித்து இன்னும் சிலர் பொது வேட்பாளரொருவர் குறித்தும் பேசிக்கொள்கிறார்கள். இவற்றில் எது உண்மை?.

**ப:** ரணில் விக்கிரமசிங்கதான் வேட்பாளர் என்பதே உண்மை. அரசியலில் பெரிய கட்சியாக விளங்கும் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிதான். கட்சியின் நடைமுறைகளை செயல்படுத்த குழு ஒன்று உள்ளது. அந்தக் குழுதான் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும். எங்கள் கட்சியின் அரசதலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான்.

**கே:** ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் முடிவு பெறவுள்ளது. அதன் பின்னர் கட்சியின் தலைவராக வேறு ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், அவ்விதம் தெரிவாகுபவர்தான் அரசதலைவர் தேர்தல் வேட்பாளரா?

**ப:** கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான். நாங்கள் சரியான நேரத்தில் இதனை அறிவிப்போம். 2020 இல் அரசதலைவர் தேர்தலில் போட்டியிடப்போவது ரணில் விக்கிரமசிங்கதான்.

**கே:** அப்படியானால் ஏனையவை வெறும் கட்டுக்கதைகளா?

**ப:** மற்றவர்கள் கூறும் கதைகளை எல்லாம் நீங்கள் நம்பவேண்டியதில்லை. கட்சியின் பொதுச்செயலாளர் என்ற வகையில் நான்கூறும் தகவல்தான் சட்டபூர்வமானது.

**கே:** பிணைமுறி விவகாரத்தில் பணம் பெற்றதாகக் கூறப்படும் 118பேரில் நீங்களும் ஒருவரா?

**ப:** இல்லை; ஒருபோதுமே இல்லை.

**கே:** நாடாளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அந்த 118பேரின் பெயர்களை வெளியிடுவது சரி என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**ப:** அவர்களின் பெயர்களை வெளியிட இயலுமானால், அது நல்ல விஷயம்தான். இதில் சம்பந்தப்பட்ட எல்லோருமே திருடர்கள் என்று அர்த்தமில்லை. இந்தப் பிணைமுறி சம்பந்தமான பணத்தைப் பெற்றுக் கொண்ட காரணத்திற்காக மட்டும் அவர்களைத் திருடர்கள் என முத்திரை குத்திவிடக்கூடாது. ஏதாவது ஒரு கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றால் மட்டுமே அதற்குத் திருட்டு எனப் பெயர் சூட்டலாம். நான் அந்த 118பேரில் ஒருவனாக இல்லை, அவர்களின் பெயர்கள் வெளியிடப்படவேண்டும்.

**கே:** பலரது வேண்டுகோளுக்குப் பின்னரும், ஏன் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை? யார் அதனைத் தடுக்கிறார்கள்?

**ப:** அந்தப் பெயர்கள் வெளியிடப்படுவதில் எவருக்கும் எந்தப் பிரச்சினையுமில்லை. இவை அரசதலைவரின் செயலாளர், சட்டமா அதிபர் மற்றும் சபாநாயகர் ஆகியோருடன் சம்பந்தப்பட்டவை. அவர்கள்தான் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

**கே:** அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் என்பது தற்பொழுது அரசியல்வாதிகளால் அடிக்கடி விவாதிக்கப்படுகின்ற விஷயமாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் முழு அதிகாரமுள்ள அரசதலைவர் முறைமையைத் தொடர்ந்து செயற்படுத்துவதை விரும்புகிறதா? அது குறித்து உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**ப:** எங்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதுவரையில் நாங்கள் இந்த விடயம் தொடர்பாக எதுவிதமான பேச்சுக்களையும் மேற்கொள்ளவில்லை.

**கே:** 2020ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தன்னைத் தயார்ப்படுத்திவரும் நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் பொதுமக்கள் முன்னணியும் ஐக் கிய தேசியக் கட்சிக்கு பெரும் சவாலாக அமையப்போகின்றனவே? அத்துடன் உங்கள் கட்சிக்குள்ளேயும் விரிசல்கள் நிலவுகின்றனவே? கிராமங்களில் உங்கள் கட்சிக்கு பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு இல்லை என்பது உண்மையா? நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் உங்கள் கட்சியின் தோல்விக்கு அதுதான் காரணமா?

**ப:** எங்கள் கட்சியின் உள்ளூராட்சித் தேர்தல் தோல்விக்கு பல காரணங்கள் உள்ளன. அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய கடும் வரட்சி, நான்கு போக நெற்பயிர்ச் செய்கை அழிந்துபோனமை, என்பனவற்றுடன் ஊடகங்கள் மீதான கட்டுப்பாட்டை நாங்கள் தளர்த்தியதால் ஊடகங்கள் எங்களை கடுமையாக விமர்சித்தன. ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இவ்விதம் இடம்பெற்றிருந்தால் எத்தனை ஊடகவியளாளர்கள் காணாமற்போயிருப்பார்கள் என்பதைக் கணக்கிட இயலாது. லசந்த, பொத்தல மற்றும் கீர்த்நொயர் ஆகிய ஊடகவியலாளர்களுக்கு நடந்ததே அவர்களுக்கும் நடந்திருக்கும். மறுபக்கத்தில் நாங்கள் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகள் குறித்து உரிய விதத்தில் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. நாங்கள் கிராம மட்டங்களில் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகளைப்பற்றி கிராம மக்

களுக்கு நாம் வெளிப்படுத்த வில்லை. பாடசாலைப் பிள்ளைக ளுக்கு 'சுரக் ஷா' காப்புறுதித் திட் டத்தை அறிமுகப்படுத்தினோம். கர்ப்பிணித்ததாய்மார்களுக்கு சத்துணவுப்பொதிகளை வழங்கி னோம். அரச ஊழியர்களின் வேதனத்தை ரூபாய் பத்து ஆயி ரத்தால் அதிகரித்தோம். எரிபொ ருள் வகைகளின் விலையைக் குறைத்தோம். ராஜபக்ச அரசி னால் பெறப்பட்ட 70வீதமான கடன் தற்போது எங்கள் அரசி னால் மீளச் செலுத்தப்படுகிறது. இவற்றை எல்லாம் செய்த பிறகும் கூட எங்களால் கிராமத்தினரின் வாக்குகளைப்பெற இயலாமற் போய்விட்டது.

**கே:** இது உங்கள் கட்சியின் நிறைவேற்றுத் தரப்பின் பலவீ னத்தை எடுத்துக்காட்டுகிறதா?

**ப:** அப்படியும் இருக்கலாம். ஆனால் நாங்கள் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் அவர்களிடம் சென்றடைந்து இருந்தால், நாங் கள் பெற்ற வாக்குகளின் வீதம் அதிகரித்திருக்கும். நாங்கள் 14ஆயிரம் கிராம சேவகர் பிரிவுக ளுக்கு ஒரு பிரிவிற்கு ரூபாய் 25இலட்சம் என்ற அடிப்படையில் கடந்த இரண்டு வருடங்களில் வழங்கியுள்ளோம். நாங்கள் நிறைய வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ளோம். தற்போது நாட்டிலுள்ள வேலை இல்லாதவர் களின் தொகை 4வீதமாக குறைவ டைந்துள்ளது. இந்த விபரங்கள் பொதுமக்களை சென்றடைய வில்லை. இதன் காரணமாகவே கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது எங்கள் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டது.

**கே:** அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடை யிலான முரண்பாடுகளும் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்த லின் தோல்விக்கு ஒரு காரணம் அல்லவா?

**ப:** நாங்கள் யாவருமே தேசிய அரசில்தான் இருந்தோம். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட் சியின் உயர் மட்டத்தினர் எங்க ளுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டனர். இதுவும் எங்க ளுக்கு பாதகமாக மாறியது. இதில் உண்மை என்னவென்றால் அர சில் அங்கம் வகிக்கும் இரண்டு க்ட்சிகளும் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் பொதுமக்கள் இரண்டு கட்சிகள் மீதும் வெறுப்ப டைந்து விட்டனர்.

**கே:** தேர்தல் பரப்புரைகளின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த பின்னர் நிறைவேற்ற வில்லை என்பதும் உங்கள் தேர்தல் தோல் விக்கு ஒரு காரணமா?

**ப:** நாங்கள் கொடுத்த வாக்குறுதி க்ளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியுள்ளோம். ஆனால் திருடர்களைப் பிடிக்கத் தவறி விட்டோம். திருடர்களை கண்டுபி டிப்பதற்காக நாங்கள் நியமித்த அதிகாரிகளே கையூட்டுப் பெற் றுக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர். அத்துடன் பல விசாரணைகள் ஒத் திப் போடப்பட்டுவிட்டன. ராஜபக்ச வின் இடைவிடாத இடையூறுக ளுக்கு மத்தியிலேயே நாங்கள் இவற்றை செய்யவேண்டியிருந் தது. ராஜபக்சமாரால் பதவியில் அமர்த்தப்பட்ட பல அதிகாரிகளுட னேயே நாங்கள் எங்கள் வேலைத்திட்டங்களை நடைமு றைப்படுத்தவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

மேற்குறிப்பிட்ட அரச அதிகாரிகள் தான் குற்றம் சாட்டப்பட்டவர்க ளுக்கெதிரான தடயங்களை அழித்துவிடுகின்றனர். ஆகவே சில சந்தர்ப்பங்களில் குற்றவாளி களை கைதுசெய்ய இயலாமல் போய்விடுகின்றது. ஆகவே ஆட் சியின்போது மேற்கொள்ளப்பட்ட களவு, கொலை போன்ற குற்றங் கள் மறைக்கப்பட்டுவிடுகின்றன. டுபாய் நாடு விசாரணைக்குத் தேவையான விபரங்களைத் தர மறுக்கிறது. கறுப்புப்பணம் மறைக் கப்பட்டுவிட்டது. இவை எல்லாமே எங்களுக்குப் பாதகமாக அமைந் துவிட்டன.

**கே:** இந்த அரசே உங்களுடை யது தானே? ஆயினும்கூட இன் னும் ராஜபக்சவைப் பற்றிய அச் சம் உங்களிடம் உள்ளதா?

**ப:** உண்மைதான்; நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோதி லும், ராஜபக்சமாரைக் கண்டு அஞ்சுகிறோம். காரணம் ராஜபக் சமார் பயங்கரமான நடவடிக்கை களை அச்சமின்றி மேற்கொள்ப வர்கள். அரசில் முன்பு இருந்த போதும், இப்போது எதிர்க்கட்சி



யில் இருக்கின்ற போதும் அவர் கள் பயங்கரமானவர்கள்தான். அதனால்தான் நாங்கள் அவர்க ளைக் கண்டு அஞ்சுகிறோம். அவர்களுக்கு எதிராக சாட்சிகள் கிடையாது.

**கே:** எப்படி சாட்சியங்களை அழிக்க இயலும்? ஏன் அவற்றை உங்களால் தடுக்க இயலாது?

**ப:** இவையாவும் சில அரச அதிகா ரிகளின் நேர்மையீனம் காரண மாகவே இடம்பெறுகின்றன. களவு மற்றும் குற்றம் புரிபவர் களின் வழக்குகள் காலவரைய றையின்றி ஒத்திவைக்கப்படுகின் றன. இவைகளைமீண்டும்ஆராய வேண்டும். அதனால் நாங்களும் அச்சப்பட வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

**கே:** 100நாள் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து முன்னெடுக்க இயலா மல் போய்விட்டது. இது அரச தலைவருக்குத் தெரியாதா?

**ப:** அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இணைந்து செயல் படும் நோக்கில்தான் இந்த 100 நாள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதைப்பற்றித் தெரியுமா என்று அரசதலைவரையே கேட்க வேண்டும்.

**கே:** தேசிய அரசின் நிலைமை என்ன?

**ப:** நன்றாகவே இருக்கிறது.

**கே:** தேசிய அரசு தொடருமா இல் லையா?

**ப:** அது குறித்து இப்பொழுது எது வும் சொல்வதற்கு இல்லை. எதிர் காலத்தில் என்ன நடக்கப் போகி றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். எங்களால் முடிந்தவ ரைக்கும் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

**கே:** பிரதிச் சபாநாகயர் தெரிவு நாடாளுமன்றத்தில் உங்கள் கட் சிக்கு ஒரு பலப்பரீட்சையாக அமைந்ததா?

**ப:** சகல நாடாளுமன்ற உறுப்பி னர்களும், தாமரை மொட்டின் உறுப்பினர்களும்கூட ஒன்று சேர்ந்தே ஐக்கிய தேசியக் கட்சி யின் வேட்பாளருக்கு ஆதரவு அளித்தனர். இப்போது தாமரை மொட்டு கட்சி இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாகப் பிரிந்துவிட்டது. சிறிலங்கா சுதந்தி ரக் கட்சியும் பிரிந்துவிட்டது. ஐக் கிய தேசியக் கட்சி தோல்வியுற்ற போதிலும், அதன் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டுள்ளது. எங்கள் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், கட்சியின் தலைவர் கள் சகல உறுப்பினர்களையும் ஒன்றாக வைத்துக்கொண்டனர். இதுதான் அரசியல் சாணக்கியம்.

**கே:** பின்வரிசையிலுள்ள 20 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகிப்போக உள்ளனரா?

**ப:** இல்லை; நான் அவர்களுடன் கதைத்துள்ளேன். அவர்கள் கட்சி யுடன் இணைந்து செயற்படுவார் கள். அவர்களுடைய கோரிக்கை கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன.

**கே:** கட்சியின் மறுசீரமைப்பு என் பது உரியமுறையில் நடைபெற வில்லை என்றும், தலைமை அமைச்சரின் ஆதரவாளர்களே மீண்டும் பதவிகளுக்கு வந்துள்ள தாகக் கூறப்படுகிறதே?

**ப:** அநேகமான உறுப்பினர்க ளின் விருப்பத்திற்கேற்பவே கட்சி மறுசீரமைக்கப்பட்டது. ஒரு ஜன நாயகக் கட்சியில் உள்ள சகலரை யும் திருப்திப்படுத்தும் விதத்தில் ஒரு காரியத்தை செய்ய இயலாது. நாங்கள் எதிர்பார்த்தது இதனை அல்ல என்பதையும் கூறத்தான் வேண்டும். ஆனாலும்கூட அநே கமான உறுப்பினர்களின் விருப் பம்தானே இங்கு கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

**கே:** கட்சியின் உறுப்பினர்கள் வேறு வேறுவிதமான அபிப்பிரா யங்களை வெளியிடுவது கட்சி யின் ஒழுங்குமுறைகளை மீறுவ தாக அமையுமே. இது குறித்து கட்சியின் பொதுச்செயலாளரான உங்களின் கருத்து என்ன?

**ப:** அரசில் அங்கம் வகிக்கும் ஒரு ஜனநாயகக் கட்சியென்ற அடிப்ப டையில் நாங்கள் இதனையிட்டு பெருமை அடைகிறோம். இப்படி யானதொரு ஜனநாயகக் கட்சி இதுவரையில் இலங்கையில் இருந்ததில்லை. இனிமேலும், எதிர் காலத்திலும்கூட, இப்படியான ஒரு கட்சி அமையப்போவதில்லை. சகல உறுப்பினர்களும் ஒழுக்கத் தைக் கடைப்பிடிக்குமாறு வற்பு றுத்தப்பட்டுள்ளது. அப்படிச் செய் யத்தவறும் பட்சத்தில் உறுப்பினர் களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவும் வலி யுறுத்தப்பட்டுள்ளது. எந்தப் பிரச் சினை என்றாலும் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் அல்லது நாடாளுமன்றக் குழு வின் கூட்டத்தில் உறுப்பினர்கள் வெளியிடலாம். நாங்கள் அவர்க ளின் கருத்துக்களைத் தெரிவிப்ப தற்கு போதியகால அவகாசம் வழங்குகிறோம். அது முடிவடை யும் காலம் வந்துவிட்டது. இனி அப்படி ஏதாவது நடந்தால் நாங் கள் சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்.

**கே:** கல்வித் துறையில் எதுவித மான முன்னேற்றங்களும் இல்லை எனக் கூறப்படுகிறதே. இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

**ப:** கல்வி அமைச்சு சகல சந்தர்ப் பங்களிலும் குறை கூறப்படும் திணைக்களமாகவே காணப்படு கிறது. நிறையவே மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலையில் மாணவர்களை அனுமதிக்கும் போது கட்டணங் கள் எதுவும் அறவிடப்படமாட் டாது. அப்படி பணம் அறவிடப்பட் டால் தராதரம் பாராது அப்படிப் பணம் வாங்குபவர்கள் தண்டிக் கப்படுவார்கள். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை யில் மாணவர்கள் சித்தியடையா விட்டாலும்கூட, அவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப் புக்கு வகுப்பேற்றப்படுவார்கள். நாங்கள் அவர்களுக்கு வழிகாட் டல் திட்டமொன்றினை அறிமுகப் படுத்தியுள்ளோம். 4000பேருக்கு அதிபர் நியமனங்கள் வழங்கி யுள்ளோம். இவற்றில் அரசியல் தலையீடுகள் இருக்கவில்லை. நாங்கள் விஞ்ஞானகூடங்களை 3000பாடசாலைகளில் உருவாக் கியுள்ளோம். 68வீதமான பாடசா லைகளிலேயே மின்சார வசதிகள் இருந்தன. நாங்கள் அவற்றைத் 98வீதமாக அதிகரித்துள்ளோம். பாடசாலைகளின் வாசிகசாலைக ளுக்கு புத்தகங்கள் வாங்குவதற் காக 600மில்லியன் ரூபாய் பணம் செலவு செய்துள்ளதோடு 26000மலசலகூடங்களையும் நிர்மாணித்துள்ளோம். ஆறாம் ஆண்டு வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கணனிகளை வழங்கவுள்ளோம். ஆசிரியர்க ளையும் பயிற்றுவித்துள்ளோம். இதன் பெறுபேறாக சென்றவருட கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் எங் களுக்கு வெற்றியை அளித்துள் ளன. சிலர் எங்களைக் குறைகூ றக்கூடும். குறைபாடுகளைப் படிப்படியாகவே தான் நிவர்த்தி செய்ய இயலும்.

**கே:** இன்னமும் 18மாதங்களில் உங்களால் வெற்றி இலக்கை அடைந்து, ஐக்கிய தேசியக் கட்சி யினூடாக ஒரு அரச தலைவரை உருவாக்க இயலுமா?

**ப:** கடந்த 3 1/2 வருடங்களில் நாங்கள் செய்த வேலைத்திட்டங் களைப் பார்க்கிலும், இனிவரவி ருக்கும் 18மாதங்களிலும் மேலதி கமான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு அதன் பலாபலன் களையும் காட்டுவோம். தாமரை மொட்டுக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்ற போதிலும் அந்த வெற் றியை முறையாக நிர்வகிக்க வில்லை. ஆனால் நாங்கள் தோல்வியுற்றாலும் எங்களின் நிர்வாகம் சீராகவே இயங்கியது.

**கே:** எல்லாவற்றையும் தனியார் மயமாக்குகிறது ஐக்கிய தேசியக் கட்சி என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளதே. இப்படி செய்யாமல் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாதா?

**ப:** ஐக்கிய தேசியக் கட்சிதான் நாட் டில் பெரிய அபிவிருத்தி நடவடிக் கைகளை முன்னெடுத்தது. நாங் கள் நாட்டின் வளங்களை விற்று நாட்டை அபிவிருத்தி செய்ய வில்லை. மகிந்த ராஜபக்ச வெளிநாடுகளில் கோடிக்கணக் கில் கடன் வாங்கி துறைமுகத்தை யும், விமான நிலையத்தையும் அமைத்தார். அவற்றை இயங் காத நிலையிலே வைத்துக் கொண்டு அரசு கடன் பணத்தை மீளச் செலுத்த இயலாது. அரசுக் குப் பணம்தேவை. நாங்கள் இவற்றைக் குத்தகைக்கு விட்டு பணம்பெற்று நாட்டின் கடன்சு மையைக் குறைத்தோம். நாங் கள் படிப்படியாக நாட்டின் கடன் சுமையைக் குறைத்துக் கொண்டு வருகிறோம்.

கடனில் மூழ்கிய இலங்கை அல்ல எங்களுக்கு வேண்டியது. ஐக்கிய தேசியக் கட்சி யதான் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்கிறது. மக்களும் இதனை அறிவார்கள். எதிர்க் கட் சியினர் எங்களுக்கு எதிராக பொய்ப் பரப்புரைகளை மேற் கொள்கின்றனர் - என்பதுதான் உண்மை.

சினிமா



# சிவகார்த்திகேயன் ஏ.ஆர்.ரஹ்மான் முதல் முறையாக இணையும் படம்

சிவகார்த்திகேயனின் 13ஆவது படத்தை இயக்கவுள்ளார் 'இன்று நேற்று நாளை' படத்தின் இயக்குநரான ரவிக்குமார். விரைவில் இந்தப் படத்தின் படப்பிடிப்புப் பணிகள் தொடங்க உள்ளன. இந்தப் படத்துக்கு இசையமைக்க உள்ளார் ஏ.ஆர். ரஹ்மான். சிவகார்த்திகேயனின் படத்துக்கு ரஹ்மான் இசையமைப்பது இதுவே முதல் தடவை. தமிழ்தெலுங்கு இரு மொழிகளில் படம் உருவாக உள்ளது.

## f பொன்னான வரிகள்

இளைஞன் விதிகளை அறிந்திருப்பான், ஆனால் முதியவர் விதிவிலக்குகளை அறிந்திருப்பார்.

ஒரு நொடிப்பொழுதின் நுண்ணறிவு சில நேரங்களில் வாழ்க்கையின் அனுபவத்துக்கான மதிப்புடையது.

தெளிவாகப் பேசுங்கள், பேசுவதற்கு முன் ஒவ்வொரு வார்த்தையையும் செதுக்கிக்கொள்ளுங்கள்.

ஞானம் கடந்த காலத்தின் சுருக்கம், ஆனால் அழகு எதிர்காலத்துக்கான வாக்குறுதி.

சிலவற்றின் மீதான நம்பிக்கை மற்றும் உற்சாகம் வாழ்க்கையை மதிப்புடையதாக உருவாக்குகிறது.

பல கருத்துகள் அவை தோன்றிய இடத்திலிருந்து வேறு சிந்தனைக்கு இடமாற்றம் செய்யப்படும்போது சிறப்பாக வளர்கின்றன.

சத்தியம், தேடாதபோது அரிதாக வெளிச்சத்துக்கு வருகிறது.

பணத்தின் மீது உங்கள் நம்பிக்கையை வைக்காதீர்கள், ஆனால் நம்பிக்கையின் மீது உங்கள் பணத்தை வையுங்கள்.







## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | 4 | | |
| 2 | | | 1 | 3 | | 7 | | |
| | | | | 8 | | | 1 | |
| | 1 | | 9 | | | | 6 | 7 |
| 3 | | | | | | | | 5 |
| 8 | 6 | | | | 5 | | 4 | |
| | 7 | | | 6 | | | | |
| | | 1 | | 5 | 9 | | | 2 |
| | | 3 | | | | | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 9 | 1 | 4 | 7 | 3 | 2 | 5 |
| 7 | 4 | 1 | 3 | 2 | 5 | 9 | 6 | 8 |
| 3 | 5 | 2 | 9 | 6 | 8 | 7 | 1 | 4 |
| 5 | 2 | 8 | 6 | 3 | 4 | 1 | 7 | 9 |
| 1 | 9 | 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 3 |
| 4 | 3 | 7 | 5 | 9 | 1 | 6 | 8 | 2 |
| 9 | 1 | 3 | 2 | 5 | 6 | 8 | 4 | 7 |
| 8 | 6 | 5 | 4 | 7 | 3 | 2 | 9 | 1 |
| 2 | 7 | 4 | 8 | 1 | 9 | 5 | 3 | 6 |

நேற்றைய விடை

## twitter



சுடர்கொடி@sudarkodii
குழந்தைகள்.. இன்பங்கள் சேகரிக்கும் வங்கிகள்!

## 'சட்டை' செய்யவில்லை



கிழிந்த துணி
அணிந்த
அந்த ஏழை
தையற்காரனை
யாரும் ' சட்டை'
செய்யவில்லை.
தீபாவளிக்காக
ஓய்வில்லாது
உழைத்த அந்தத்
துணி தைப்பவன்
தன் 'தையல்'
மறந்தான்...




**மேடம்:** அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை அதிகரிக்கும். ஆதாயம் உயரும்.

**இடபம்:** பிறர் வாக்குறுதியை நம்பி முக்கிய செயலில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் திடீர் செலவைக் கண்டு திணறுவர்.

**மிதுனம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** பணியில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். இலாபம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை அதிரிக்கும். முயற்சிக்குரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். சமூக அந்தஸ்து உயரும்.

**கன்னி:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். குடும்ப தேவைகள் தாராள செலவில் நிறைவேறும்.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டு பெறுவர்.


**விருச்சிகம்:** உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறுகளை சரிசெய்வீர்கள். இலாபம் உயரும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

**தனுசு:** சுறுசுறுப்புடன் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பொறாமை குறையும்.

**கும்பம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் முயற்சியும் உழைப்பும் அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணம் வசூலிக்க இதமான அணுகுமுறை நல்லது.



## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 09 . 1960

இறப்பு 26 . 06 . 2018

### செல்லன் நமசிவாயம் (இந்திரன்)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரன் என்று அன்பாக அழைக்கப்படும் செல்லன் நமசிவாயம் 26.06.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லன் மற்றும் வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிராமு - கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், சாளன் (சுவிஸ்), அபியாழனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகலாதனின் (சுவிஸ்) அன்பு மாமனும், தேவஞானகி, துரைசிங்கம், சற்குணமாலா, மதிசிங்கம், கருணானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகராணி (டென்மார்க்), நாகராசா, ஜெயராணி, செல்வராணி (கனடா), லலிதாராணி (லண்டன்), கிருபாராணி (பிரான்ஸ்), ஜீவராணி (லண்டன்), முகுந்தன் (டோகா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரி இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2018) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி தெற்கு இந்து மயானத்துக்கு பிற்பகல் 4.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியர்
**செ.முரளீதரன்**
அவர்களின் அன்புத் தாயார்
**தவமணிதேவி செல்வநாயகம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஆசிரியர் கழகம்,**
**யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.**

(es.73696)(11,17)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



டாக்டர்
**வேலாயுதபிள்ளை தம்பித்துரை**

அன்னை மடியில் 21.04.1946
ஆண்டவன் அடியில் 16.07.2011
திதி:- 29.06.2018



என்றும்
எப்பொழுதும்
எம் நினைவில்
வாழும் அப்பா

பங்காள வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.


**MAJESTIC CINEPLEX**




மேலதிக விபரங்கள்
தொடர்பாக அழையுங்கள்
021 2227712

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL


## விற்பனைக்கு

**டாட்டா பிக்கப்** வாகனம்
விற்பனைக் உண்டு.
NPLA 0564 பவர் ஸ்ரேறிங் சிவப்பு கலர்
கதிரவன்
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 9315

## விற்பனைக்கு

ஒருசோடி வூபர் பொக்ஸ் விற்பனைக்கு உண்டு. உயரம் - 4 அடி, அகலம் - 11இன்ச்.
தொடர்பு - 077 466 7579


## வலி.கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ - து) அச்சுவேலி
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தின் 16.06.2018ஆம் திகதி நடைபெற்ற கிளைக்குழு தெரிவில் பின்வரும் கிளைகளுக்கான கிளைக்குழு தெரிவு நடைபெறவில்லை. இக் கிளைகளுக்கான கிளைப்பொதுச் சபைக்கூட்டம் 30.06.2018 இல் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது. இவர்களுக்கான அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்கப்பெறாது விடினும் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வாக்களிக்க தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொண்டு கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| இல. | கிளையின் பெயர் | கிளை இல. | தவிசாளர் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | புத்தூர் மேற்கு | 13 | திரு.நா.ஜெயவதனன் | புத்தூர் மேற்கு கிளைக் கட்டடம். |
| 02 | சூரியோதயம் | 15 | திரு.சி.பிரதீபன் | சிறுப்பிட்டி பூமகள் சனசமூக நிலையம் |
| 03 | புத்தூர் கிழக்கு | 22 | திரு.இ.ராஜீவ்ரதன் | புத்தூர் கிழக்கு குமரகுருபன் சனசமூக நிலையம் |

செயலாளர், வலி.கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி. திகதி : 29.06.20418

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 01 . 11 . 1922

இறைவனடியில் 26 . 06 . 2018

### S.A.இராஜநாயகம்
**(இளைப்பாறிய அதிபர்)**

மாதகலைப்பிறப்பிடமாகவும்,நீர்கொழும்பைவதிவிடமாகவும்கொண்டசெபஸ்தியாம்பிள்ளை அன்டனிப்பிள்ளை இராஜநாயகம் 26.06.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானதொம்மைப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை-மரிசலீனம்மா தம்பதிகளின்அன்புப்புதல்வரும்,காலஞ்சென்றவர்களானS.R.பீட்டர்-அன்னபூரணம்(அரியேற்) தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜொசப்பின் டியோனீசியா (பேபி) வின் அன்புக் கணவரும், ராஜன் (Holland), சீலன் (Brunei), டெனா (London), ஜயன் (Australia), சாந்தா (Norway), ரூபஸ் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பெனடிக்ற்ரம்மா (செல்லப் பாக்கியம்), மரியநாயகம் (ஆரோக்கியசாமி), இம்மனுவல் (பொன்ராசா), அருளப்பு, தோமஸ் (செல்வரத்தினம்), ஜேம்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பற்றிக், சிசிலியா (மணி), கிறிஸ்டின் மற்றும் பிறிம், கிளரன்ஸ் (ஜெயம்), தேவா, றெஜினா ஆகியோரின் அன்புமைத்துனரும்,நிக்லொட் (Holland),நிலானி(Brunei), ரூபன்(London),றக்சனா(Australia), சதீஸ் (Norway), சங்கீதா (London) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றொஷேல், டொனேல், வெனஷ்கா, ஷோன்டெல், நிக்ரயன், டயன், திரேசாலினி, ஜொனெலா, நோ ஆ, நத்தானியேல், ஆரூஷி, நித்தியன், நிவித்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 19/2, துஷார மாவத்தை, நீர்கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து நாளை (30.06.2018) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குடாப்பாடு செபமாலை மாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கடற்கரைத்தெரு சேமக்காலை யில்நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/17824)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

ராஜன் (மகன்) - 076 696 5180, ஜயன் (மகன்) - 071 364 4410

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 01 . 1933

மறைவு 23 . 06 . 2018

### திருமதி இந்திராணி தேவராஜா

யாழ். கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு புதுக்கோவிலடி, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி தேவராஜா கடந்த ( 23.06.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் சுப்பிரமணியம்(இரும்புக்கடை மணியம்) பாக்கியம் தம்பதிகளின் அருமைப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் செல்லம் தம்பதிகளின் அருமைமருமகளும், காலஞ்சென்ற தேவராஜாவின் (இளைப்பாறிய புகையிரதநிலைய, அதிபர்) அன்புமனைவியும், ரபிமோகன், சொரூபி, ரகு, ரணாமோகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனராணி இரத்தினசபாபதி, விமலராணி சுப்பிரமணியம், தபேந்திரன்(The Malayan Trading Company, Jaffna), தருமேந்திரன், வசந்தராணி இராமநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், யசோதரா, இராம கிருஷ்ணன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, இராமநாதன் மற்றும் தனலக்ஷ்மி, ஜமுனாசுமங்கலி ஆகியோரின் அன்புமைத்துனியும், கிருஷான், அபர்ணா, அஷான், துஷான், திரிஷான், றொஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியும், அரவிந், மயூரி, அனுஸ்ரீ ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
ரபிமோகன், சொரூபி, ரகுதேவராசா, ரணாமோகன்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## நாகராசா மகேந்திரராசா

(NDT, BED,MED,DSM, SLPS II




சிரித்த முகம் சிறந்த குணம் சீரிய நிர்வாகம்
செய்கின்ற பணியாவும் அவனுக்கென்றே
செயலாற்றிய பலனை எதிர்பாராமையினால்
உய்யும் வழி காட்டிடவே உயர்வு நிலை பெற்றீர்கள்

பொது வாழ்வில் உங்கள் பணி தொடர்
பதவியிலே உயர்வு நிலை மேலும் பெற
பிள்ளையாரின் பாதம் பணிந்து வாழ்த்துகிறோம்
பல்லாண்டு வாழிய வாழியவே

கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களினால் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் வழங்கப்பட்ட இலங்கை அதிபர் சேவை தரம் II இற்கான பதவி உயர்வினைப் பெற்ற எமது பாடசாலை அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்துக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

(ш.7153) (13)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆரம்பப்பிரிவு ஆசிரியை
**திருமதி ரேணுகா ஆனந்தகுமரன்**
அவர்களின் மாமியார்
**அம்பலவாணர் திலகவதி**
அவர்கள் 23.06.2018 அன்று காலமானார்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**



# விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறி
# Field Assistant (Agriculture)

**தேசிய தொழில் தகைமை சான்றிதழ் மட்டம் 4 (NVQ Level 4)**

மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு வருடகால பயிற்சிநெறி. இப்பயிற்சி நெறியின் பின்னர் பல்கலைக்கல்லூரி, விவசாயக்கல்லூரி மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றில் NVQ மட்டம் 5 - 6 ஐ தொடர முடியும். உலகதரம் வாய்ந்த சான்றிதழ். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புப் பெறும் வாய்ப்பு.

க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாயபாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். 16 - 26 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**பயிற்சிக்கட்டணம் இலவசம்** — **பதிவுக்கட்டணம் 1000 ரூபா**

பயிற்சிநெறியில் சேர விரும்புவோர் 10.07.2018 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

**மேலதிக விவரங்களுக்கு :** அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
தொ.பே.இல. 077 930 5722

(IN 7089) (04.17)

# மரண அறிவித்தல்

## திருமதி விமலாதேவி சுகுமார்

(ஓய்வு நிலை பிரதி அதிபர். யா/ பரமேஸ்வரா வித்தியாலயம் திருநெல்வேலி)



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி சுகுமார் நேற்று (28.06.2018) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்டபுத்திரியும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நவரட்ணம் சுகுமாரின் அன்புமனைவியும் அருணாதேவி, இராஜன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் விஜயகுமார், நித்திய கௌரி, நற்குணராஜா காலஞ்சென்றவர்களான நவமலர், மனோகரன் மற்றும் சுரேஷ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராசகுலேந்திரன், மரிஸ்ரெலா ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரியும் துஷ்யந்தி, உமாகாந்த், ஸ்ரீகாந்த், ரூபகாந்த் ஆகியோரின் அன்புச்சிறியதாயும் சனந்தன், ஞானசக்தி, துஷித்தா, நிலாந்தி ஆகியோரின் அன்புமாமியும் கேஷிகன், அஸ்வினி, கபிஷாந்த், கபினயா, கபிலாஷா, நிருத்திகா, சருணிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**55, சிவன் கோவில் வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# விவாஹ சோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை



பிரம்மஸ்ரீ / ஸ்ரீமதி / திரு / திருமதி ........................................

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஆனித்திங்கள் 16 ஆம் நாள் (30.06.2018) சனிக்கிழமை உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும், கன்னி லக்கினமும் கூடிய பகல் 11.19 முதல் 12.20 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

பாரத்துவாஜ கோத்திரம்
சிவஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள் தவலட்சுமி
தம்பதிகளின் பௌத்திரனும்
சிவஸ்ரீ சோ.சண்முகராஜன் குருக்கள் பத்மராணி
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனுமாகிய
**சிரஞ்சீவி**
**ரவிசங்கரசர்மா**
என்கின்ற வரனுக்கு



ஷடமர்ஷனகோத்திரம் பிரம்மஸ்ரீ சுபாரத்தினசர்மா
நாமகிரிஅம்மா தம்பதிகளின் பௌத்திரியும்,
காசிப கோத்திரம் சிவஸ்ரீ சுபாரத்தினக்குருக்கள்
அலமேலு அம்மா தம்பதிகளின் தௌகித்திரியும்
பிரம்மஸ்ரீ ச.பூர்ணானந்தசர்மா ரஞ்சனா தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரியுமான **சௌபாக்கியவதி**
**ஷோபினி**
என்கின்ற வதுவைக்கு

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு துர்க்கையம்மன் திருவருளும் குருவருளும் துணைகொண்டு பெரியோர்களின் நல்லாசியுடன் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சபையைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமண வைபவம் நடைபெறும் இடம் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு**
**அருள்மிகு துர்க்காதேவி ஆலய மண்டபத்தில்**
**இருவீட்டார் அழைப்பு**
**சமாவர்த்தனம் 30.06.2018 காலை 5.00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**வரவேற்பு உபசாரம் 30.06.2018 மாலை 4.00 மணியளவில் மணமகன் இல்லத்தில் வதுவரகிரஹப்பிரவேசம் நடைபெறும்.**

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

சிவஸ்ரீசோ.சண்முகராஜக்குருக்கள் பத்மராணி தம்பதிகள்
பிரம்மஸ்ரீ. தி.சுந்தரானந்தசர்மா தாட்ஷாயினி தம்பதிகள்
பிரம்மஸ்ரீ. ச.ஜங்கரசர்மா
45.இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 077 469 7689, 077 828 5860

சுபம்

பிரம்மஸ்ரீ.ச.பூர்ணானந்த சர்மா ரஞ்சனா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ ராம் குமாரசர்மா ஷோபனா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ பூ.விபூஜிதசர்மா
"ஆனந்தஜனா பவனம்" பிரதான வீதி, பெரியகல்லாறு, மட்டக்களப்பு.
தொ.பே.இல: 077 603 1057


**இருவீட்டார் அழைப்பு**

(CS/17833)(11)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல்
## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்.

வட்டாரம் : 08 — ஆதன இல : 41
வீதி : சஞ்சுவாம் வீதி — கிராமசேவையாளர் பிரிவு : J/153

எமது இடாப்பில் வட்டாரம் 08, சஞ்சுவாம் வீதி, ஆதன இல. 41இல் S.அருளப்பு உ.கோ. அருளப்பு பெண் அருள்ராசரத்தினம் எனும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு தற்போது தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிளான் இறை "இராமன்சீமா" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 4 1/2 கொண்ட இவ்வாதனம் இளவாலை பெரியவிளான் இராசலட்சுமி திருச்செல்வம் ஆகிய இவர்களால் அவ்வூர் திருச்செல்வம் விஜயகுமாரும் பெண் சிவாசினியும் ஆகிய இவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.த.அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6311ஆம் இலக்க 12.06.2017 ஆம் திகதிய உறுதிமூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.S. பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 1673ஆம் இலக்க 18.12.2017 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "இராமன்சீமா" நிலப்பரப்பு 4 1/2 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்துமூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது திருச்செல்வம் விஜயகுமாரும் பெண் சிவாசினியும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.




**திரு. அ.ஜெயபநேசன்**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

(CS 17838/15/18)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கண்டாவைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர்**
**அனோஜன்**
**நாகேஸ்வரா**

தோற்றம்
27.08.1996

மறைவு
09.07.2017

எங்கள் அன்புச் செல்வமே அனோஜன்!
அன்பின் உறைவிடமாய் பாசத்தின் ஊற்றாய்
எம்முடன் வாழ்வாய் என இருக்க எம்மை துயரில் ஆழ்த்திவிட்டு
நீண்டதூரம் சென்று ஓராண்டானதையா
எம் காலம் உள்ளவரை என்றும் உன் நினைவு அழியாது
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**என்றும் உன் நினைவுடன் வாழும்**
அப்பா, அம்மா, தங்கை அபிசா,
அன்பு உறவுகள்.

தகவல்:-
அப்பா நாகேஸ்வரா (ரவி)
மொன்றியல், கனடா.

(CS/17809)(11.17)

# இரசாயனம் / CHEMISTRY

இருமொழிகளிலும்
**Personal / Group**
**2020 / 2019 / 2018 (Revison)**
Home Visited
**Singam Master**
**077 773 0840**
முழு அளவிலான வினாக்கள் செய்யப்படும்.

# வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு
பின்வரும் பெண் வேலையாள்கள் தேவை.
**கணினி தட்டெழுத்தாளர்**
**கணினி வடிவமைப்பாளர்** (Designer)
**போட்டோ பிரதி எடுப்பவர்.**
(பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது.)
சுய ஆவணங்களுடன் 30.06.2018 - 01.07.2018 ஆம் திகதிகளில் நேரில் வரவும்
146, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 557 1569

# E&S Printers

மக் பிரிண்ட்
(MUG)
450/=






021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சேவை நலன் பாராட்டு



## திரு. கந்தசாமி சுசீந்திரன்

(பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி)



பெயர் : கந்தசாமி சுசீந்திரன்
பிறந்த திகதி : 03.08.1958
கல்வி : யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் (1972-1979 வரை)
யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரி (B.A)
வங்கியியல் தொழில்சார் கல்வி (A.I.B)
முகாமைத்துவ நெறி ( Sage Australiya நிறுவனத்தினால் பயிற்றப்பட்டவர்)

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் உபதலைவர்
தலைவர் - சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் (Centre for Chhild Development (CFCD)
உப தலைவர் - யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் பேரவை

### சேவைக்காலம்

மக்கள் வங்கியில் இணைந்த திகதி : 15.02.1980

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - உத்தியோகத்தர் |
| கிளிநொச்சி | - உத்தியோகத்தர் |
| மாங்குளம் | - உத்தியோகத்தர் |
| புத்தளம் | - முகாமையாளர் |
| சிலாபம் | - முகாமையாளர் |
| கொழும்பு | - முகாமையாளர் |
| யாழ்ப்பாணம் | - உதவிப் பிராந்திய முகாமையாளர் (01.06.2010 முதல் 28.02.2013 வரை) |
| யாழ்ப்பாணம் | - பிராந்திய முகாமையாளர் (01.03.2013 முதல் 29.06.2018 வரை) |



**யாழ்ப்பாண மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளராகப் பணியாற்றி இன்று (29.06.2018) இளைப்பாறும் மதிப்புயர் திரு. கந்தசாமி சுசீந்திரன் அவர்களின் சேவைநலம் பாராட்டி வாழ்த்துகின்றேம்.**

ஈழத்தமிழ் நிலங்கள் எங்கும் செழிப்புறவும்
வாழும் உறவுயிர்கள் வளமாய் உயர்ந்திடவும்
ஆளும் நிதிச்சிறப்பால் அனைவருமே இன்புறவும்
நாளும் நமக்கெனவே நல்லவைசெய் நோக்குடையீர்
கற்றபடி மற்றவர்க்கு கருத்தோடுதவி செய்தீர்
நற்றவமே செய்தோம் நமக்கருகில் நீர்நடந்து
வெற்றிபல காண்பதற்காய் விருப்போடு சேவைசெய்தீர்
பெற்றசுகம் யாவுமுங்கள் பெருமனத்துக் கீடாமோ
நொந்தமக்கள் வாழ்விலவர் நோய்நீக்கும் மருந்தானீர்
சந்தோசம் கொள்உறவுச் சகோதரனாய் வலம்வந்தீர்
இந்தமண்ணின் எழில்விளங்க எண்ணத்தால் தூய்மைசெய்தீர்
சந்திரனாய் சூரியனாய் சுசீந்திரனே நீர் ஒளிர்ந்தீர்
உன்னதத்தின் ஏணிநல்லோர் உழைப்பின் பின் ஓய்வென்பர்
நன்மனத்தீர் மக்கள் வங்கி நலம்காக்கும் முகாமையிலே
பொன் எழுத்தால் உம் நாமம் பொறித்திருக்கப் பார்க்கின்றோம்
இன்முகத்தோ டயல்களிக்க ஈகைநலம் பார்போற்றும்
உன்னதரே நீர்சிறந்தீர் ஓய்வினிலும் மேன்மையுற
வாழத்துகிறோம் நாம் வாழ்த்த வையகமே தலைசாய்க்கும்
பொங்கும் நலம் செல்வம் பொலிக சிறப்பொளிர்க



**அன்புடன் : ஈ. சரவணபவன்**
**நாடாளுமன்ற உறுப்பினர் (யாழ், கிளிநொச்சி),**
**தலைவர் 'உதயன்' குழுமம்.**



### உள்ளத்தால் உளர்ந்தோன்

மக்கள் சேவையே மகேசன் சேவையென மக்கள் வங்கியின் ஊடாக மக்களுக்கு பல்வேறுவிதமான உதவிகளைப் புரிந்து இன்று 29.06. 2018 இல் சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற எமது பெருமதிப்பிற் குரிய யாழ். பிராந்திய முகாமையாளர் உயர்திரு. கந்தசாமி சுசீந்திரன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடை கின்றேன்.

இவர் 15.02.1980 இல் மக்கள் வங்கியின் சேவையில் உத்தியோகத்த ராக இணைந்து தனது திறமையினாலும் முயற்சியினாலும் காலத்துக் குக்காலம் முகாமையாளராக, உதவிப் பிராந்திய முகாமையாளராகப், பதவி உயர்வுகள் பெற்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பணி புரிந்து 01.03.2013 இல் இருந்து அதி கூடிய பதவியான பிராந்திய முகாமையாளராக தான் பிறந்த மண்ணாகிய யாழ்ப்பாணத்திற்கு சிறப் பான சேவையாற்றி வங்கியாளர்களினதும் வர்த்தகர்களினதும் வங்கி வாடிக்கையாளரினதும் மனங்களின் நீங்காத இடம் பிடித்துக் கொண் வர்.

இவரது ஓய்வு காலம் மகிழ்ச்சியாகவும் உடல், உள நலத்துடனும் அமைய வேண்டுமெனவும் இன்னும் பல சமூக சமயப்பணிகளில் ஈடுபட்டு நலமே வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து 'வாழ்க வளமுடன்' என வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு.நாகேந்திரம் சிறீஸ்கந்தா**
**பிரதான முகாமையாளர்**
**பிராந்திய தலைமை அலுவலகம்**
**மக்கள் வங்கி – யாழ்ப்பாணம்.**



### சிறந்த சிந்தனையாளன்

மக்கள் வங்கிச்சேவையில் மகத்தான பணியாற்றி 29.06.2018 இல் சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது மக்கள் வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் உயர்திரு. கந்தசாமி சுசீந்திரன் அவர்களுக்கு பாராட் டுச் செய்தியென்றினை வழங்குவதில் பெருமைப்படுகின்றேன்.

கடந்த 38 வருடங்களுக்கு மேலான வங்கிச் சேவையில் சாதாரண உத்தியோகத்தராக இணைந்து கொண்ட இவர் குறுகிய காலத்தி லேயே புத்தளம், சிலாபம், கொழும்பு ஆகிய பிற மாவட்டங்களில் முகாமையாளராக கடமையாற்றி மீண்டும் யாழ்ப்பாணப் பிராந்தியத் திற்கு 01.06.2010 இலிருந்து உதவிப்பிராந்திய முகாமையாளர் பதவியை ஏற்று சிறப்பான பணிபுரிந்து, தனது விடாமுயற்சியாலும், ஆற்றலாலும் உயர் பதிவியான பிராந்திய முகாமையாளர் பதவியை 01.03.2013 இல் இருந்து இன்றுவரை சிறப்பான சேவை செய்து பணியிலிருந்து ஓய்வுபெறகின்றார்.

இவர் எவ்வேளையிலும் போரினால் நலிவடைந்த எமது சமூகத்திற்கு எந்த வழிகளில் உதவலாம் இவர்களது பொருளாதார மேம்பாட்டினை எவ்வாறு கட்டியெழுப்பலாம் இதற்கு எமது மக்கள் வங்கி மூலம் எவ் வாறு உதவலாம் எனச் சதா சிந்தித்து தனது சிந்தனையில் பட்ட விடயங்களுக்கு செயலுருக்கொடுத்து வந்த ஒரு உத்தமர்

இவரது ஓய்வகாலம் சிறப்பாகவும் சமூகத்தின் தேவைகளுக்கு உர மூட்டுவனவாகவும் அமையவேண்டுமென இறைவனை பிரார்த்தித்து எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**திரு.சின்னராசா நித்தியானந்தன்**
**உதவிப் பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமை அலுவலகம்**
**மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.**



### உயர்ந்த பண்பாளன்

எங்கள் மக்கள் வங்கியின் உயர்ந்த •பண்பாளர்களே உயர்ந்த பதவிகளில் அமைகின்றனர் என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டாக எமது பிராந்திய முகாமையாளர் உயர் திரு.கந்தசாமி சுசீந்திரன் அவர் களைக் குறிப்பிடலாம்.

பதவிக்கான பண்பு, பணியாளர்களுடன் அணுகும் முறை ஏனை யோரை மதிக்கும் பண்பு என அவரின் இயல்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். 38 வருடங்களுக்கு மேலான வங்கிச் சேவை யில் பல்வேறு பதவிகளை வகித்து எமது பிரதேசத்தின் பிராந்திய முகாமையாளராக பணிபுரிந்து இன்று ஓய்வுபெறுகின்றார். உயர்ந்த பண்பாளன், ஒப்பற்ற குணாளன், எமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் வெளியிலிருந்து வழிகாட்டல்களை வழங்குவார் என எதிர் பார்ப்பதுடன் ஓய்வு காலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக் கின்றேன். எமது மக்கள்வங்கி கன்னாதிட்டிக் கிளை சார்பாக எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

**திருமதி ரஜீவி கோவிந்தராஜா**
**முகாமையாளர் - மக்கள் வங்கி ,**
**யாழ். கன்னாதிட்டிக் கிளை.**

Best Wishes

## தெரிந்து கொள்வோம்

- உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு சுவிஸ்சர்லாந்து.
- 110 மீற்றர் தடை ஓட்டிப் போட்டியில் 10 தடைகள் வைக்கப்பட்டி ருக்கும்.
- குதிரைகளுக்கு 18 சோடி விலா எலும்புகள் உள்ளன.
- மனிதனுக்கு இருப்பதோ 12 சோடிகள் விலாஎலும்புகள் மட்டுமே.
- தனது நாட்டு வரை படத்தையே தேசியக் கொடியில் சின்னமாகக் கொண்ட நாடு- சைப்பிரஸ்.
- வாலையும் உடலையும் தனித்தனியாக செயற்படவைக்கும் இரண்டு மூளைகள் கொண்ட விலங்கு - குரங்கு.
- பல்லில் இல்லாத ஒரே சத்து. இரும்புச்சத்து.
- முட்டையில் இல்லாத ஒரே விற்றமின்-C.
- அரிசி ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் நாடு- தாய்லாந்து.
- உலக நாடுகளில் 78 நாடுகள் மரண தண்டனை முறையை ஒழித்து விட்டன.
- மரண தண்டனையை நிறைவேற்றுபவரை அலுகோசு என அழைப்பர்.

# போதும் என்ற மனம் வேண்டும்

ஓர் ஊரில் தனஞ்சயன் என்றபெயருடைய ஏழைக்குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கென்று சொந்த நிலம் இல்லை. பிறருடைய நிலங்களில் பாடுபட்டு அவர்கள் கொடுக்கும் கூலியைக்கொண்டே அவன் வாழ்நாளைக் கடத்த வேண்டியிருந்தது. குடும்பம் நடத்தப் போதாமையால் அவன் மனைவி மக்களும் அவனுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருந்தது. இதனால் அவன் மனம் மிகவும் வருத்தமடைந்தது. ஒரு சமயம் தூர தேசத்தைச் சேர்ந்த ஒரு வழிப்போக்கனை அவன் சந்தித்தான். அவன் தன் நாட்டு வளப்பங்களை குடியானவனுக்கு விளக்கமாக எடுத்துரைத்தான். மேலும் அந்த நாட்டில் சனத்தொகை மிகவும் குறைவு என்றும், அங்கு குடியேற விரும்புபவர்களுக்குத் தேவையான நிலம் மிகக் குறைந்த விலைக்கு அரசு கொடுத்துதவுவதாகவும் கூறினான்.

குடியானவன் அந்த நாட்டில் குடியேறி சொந்த நிலம் வைத்துக் கொண்டு உழுதுண்ண எண்ணி தன்னிடமிருந்த சிறு பொருள்களை விற்று வெள்ளிக்காசுகளுடன் வழிப்போக்கனுடன் அவன் நாடு செல்லப் புறப்பட்டான். தன் மனைவி மக்களிடத்தில் புதிய நாட்டுக்குச் சென்று தேவையான வசதிகளைச் சேர்த்துக் கொண்டு மீண்டும் வந்து அவர்களை அழைத்துச் செல்வதாகக் கூறி வழிப்போக்கனுடன் சென்றான்.




வழிப்போக்கன் குடியானவனைத் தனது நாட்டுக்கு அழைத்துச் சென்றான் குடியானவன் அந்த நாட்டின் நிலவளம், நீர் வளத்தைக் கண்டு மிக மகிழ்ந்தான். இந்த செழிப்பான நிலங்களில் கொஞ்சம் இருந்தாலே முன்னேறி விடலாம் என எண்ணினான்.

பின்பு நாட்டின் தலைவரை இருவரும் சந்தித்தனர். குடியானவன் தனது தேவைகளைத் தலைவரிடம் கூறினான். தலைவரும் குடியானவன் எப்படி அவனுக்கான நிலத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதைக் கூறி வைத்தார். அதன்படி சூரியன் தோன்றும்பொழுது அவன் ஒரு பரந்த வெளியிலிருந்து நடக்கத் தொடங்கி சூரியன் மறைவதற்குள் எவ்வளவு தூரம் வரை நடந்து முடிக்கிறானோ அவ்வளவு நிலமும் அவனுக்கே குறைந்த விலையில் வழங்கப்படும் என்றார்.

மறுநாள் காலையில் சூரியன் தோன்றும் பொழுது நாட்டுத் தலைவர் உட்பட பல பிரமுகர்கள் முன்னிலையில் ஒரு பரந்த வெளியில் குடியானவன் நடக்கத் தொடங்கினான். அவன் நடக்கத் தொடங்கும் போது கையில் மண்வெட்டி ஒன்றையும் இடை நேரத்தில் உண்பதற்கு கட்டுச்சோறு மூட்டையையும் எடுத்துக் கொண்டான். சற்று தூரம் அவன் நடந்து சென்ற பின் மண்வெட்டியால் மண்ணில் ஒரு கொத்துக் கொத்தினான். அவ்வாறு தான் செல்லும் வழியெல்லாம் ஆங்காங்கு அடையாளம் செய்துகொண்டே போனான்.

நேரம் ஆக ஆக ஏராளமான நிலத்தை தான் நடந்து முடிக்க வேண்டும் என்ற பேராசை அவனிடம் தோன்ற ஆரம்பித்தது. கையில் கட்டுச்சோறு இருந்தும், பசி எடுத்தும் அதனை உட்கார்ந்து சாப்பிட மனம் வரவில்லை. உட்கார்ந்து உண்ணும் நேரத்துக்கு கொஞ்சத் தூரம் நடந்து விடலாமே என்று நினைத்து தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான். மாலைப் பொழுது ஆயிற்று அவ்வூர்த் தலைவரும் மற்றோரும் தனஞ்சயன் வரவை வெகு தொலைவில் கண்டதும் விரைந்து ஓடிவா. கதிரவன் கடலில் மறைய முன் ஓடிவா. நீ வருவதற்குள் கதிரவன் மறைந்து விட்டால் உன்னிடமிருந்து குற்றமாக அதிகளவு பணம் அறவிடப்படும். ஓடிவா ஓடிவா என்று கூவினர். தனஞ்சயனும் தன் வலிமையெல்லாம் சேர்த்து விரைந்தோடி வந்தான். மாலைக்கதிரவன் மறையும் நேரம் நெருங்கியது. இன்னும் சில நிமிடங்களே இருந்தன. தனஞ்சயனால் பசிக்களைப்பில் ஓரடிகூடப் பெயர்த்து வைக்க முடியவில்லை. ஆயினும் பேராசை உந்த உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு சூரியன் மறைவதற்குச் சில வினாடிகள் முன்னரேயே தான் புறப்பட்ட இடத்தை அடைந்தான். எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் பகல் முழுவதும் உண்ணாது கடும் வெயிலில் விரைந்து நடந்து களைத்திருந்த தனஞ்சயன் இறுதியில் ஓடி வந்த துன்பத்தைத் தாங்காதவனாய் கீழே அமர்ந்தான். அப்படியே நிலத்தில் சாய்ந்தான் வாயினால் நுரை கக்கினான் மூச்சு திணறினான். அவ்வளவு தான் அவன் உயிர் பிரிந்தது. குடியானவனின் ஆசை அளவுக்கு அதிகமானதால், அவன் எதையும் அனுபவிக்க முடியாது போனது.

**"பேராசை பெரும் நஷ்டம்."**




## கொக்கு பறக்குது

கொக்கு பறக்குது கொக்கு பறக்குது
மிக்க பசியோடு நீரிலிறங்குது
பக்கத்திலே வந்த குஞ்சு மீன் கூட்டத்தைப்
பாராதது போல தூங்கி நிற்குது

பார்த்த பெரு மீன்கள் பயமேதுமில்லாமல்
பக்கத்திலே நீந்தும் வேளையிலே
கூர்மிக்க சொண்டினால் கொத்த விழுங்கியே
நீர்க்கரை மரத்தில் ஓய்வாய் இருக்குது

ஆரவார மின்றிக் காரியத்தில் கண்ணாய்
என்று முயர்வை அடைந்திடுவோம்
பாரினிலே சிறப்பாக வாழ்ந்திடுவோம்
பண்பாய்ப் பலர்க்கு முதவி செய்வோம்

## இரு படங்களுக்கும் இடையே 07 வேறுபாடுகள் உள்ளன. கண்டுபிடியுங்கள்



## செவ்விந்தியர்



இவர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே வாழ்கிறார்கள். இவர்களில் பல பிரிவினர் உள்ளனர். ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் ஆளுநர் மற்றும் நிர்வாக சபையை அமைத்து ஒரு வகை சுயாட்சியை நடத்துகின்றனர்.

ஒவ்வொரு பிரிவினரும் எழுத்து வடிவற்ற மொழியைப் பேசுகின்றனர். பிரிவினர்களிற்கிடையில் தொடர்பு மொழியாக ஆங்கிலம் உள்ளது.

தனித்தனி வீடுகளும் மண்ணிலான மாடி வீடுகளும் உள்ளன. ஒரு மாடியிலிருந்து மற்ற மாடிக்கு வெளியிலுள்ள மர ஏணிகள் மூலமே செல்ல வேண்டும். வீடுகளைச் சுற்றி பல நிற சோளப் பொத்திகள் தூக்கப்பட்டிருப்பது ஒரு அழகான காட்சி.

ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் மண்ணிலான ஒரு அடுப்பு இருக்கும். அதில்தான் அவர்களின் பிரதான உணவான சோளத்தில் தயாரிக்கப்பட்ட உணவுகளை வேக வைக்கின்றனர்.

தற்போது பலர் கிறிஸ்தவ மதத்தை அனுட்டிக்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய பாரம்பரிய மதவழிபாட்டையும் கைவிடவில்லை.

ஏனைய அமெரிக்கர்கள் போன்றே இவர்களும் உடைகள் அணிகின்றார்கள். எனினும் அவர்களின் விசேட தின உடைகளில் சில மாற்றங்கள் செய்வார்கள்.

செவ்விந்தியர்கள், சீனர், தாய்லாந்துக்காரர் போன்றோரின் முகத்தோற்றம் உடையவர்கள்.

நீக்ரோ இனத்தவரைப் புறக்கணிக்கும் அமெரிக்க மக்கள், செவ்விந்தியரை மட்டும் அரவணைப்பதையும் அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதையும் அவதானிக்கலாம்.

## எம்.பிக்கள்...

பின்னரே பிரதேச செயலர், சிறுவர் அதிகாரிகள், மற்றும் கல்வி பணிப்பாளர் கல்வி அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, " உங்களது கோரிக்கைகளை ஏற்கின்றோம். உங்களது தொகுதிக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததை அடுத்து நான் உடனடியாக இங்கு வந்திருக்கிறேன். உங்களது கோரிக்கைகளில் முக்கியமாக உங்களது பிரதேசத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸ் காவலரண் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பிரதேசம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் தொகுதிக்குள் வருவதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோருக்குக் கடிதங்கள் வழங்கியுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்" - என்று மாவை சேனாதிராசா தெரிவித்தார். (4,114)

## சிறுமி...

கள் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து இடம்பெற்றது. சிறுமி கல்வி கற்ற பாடசாலை மாணவர்கள், அந்த ஊர் மக்கள், சமூக அமைப்புகளைச் சார்ந்தவர்கள் என்று பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"தமிழனின் நிலை தலைசிதறிப் போகிறது. ஒட்டுமொத்த தமிழினமே நாளையதினம் பொங்கி எழு, கல்வி அமைச்சரே தூக்கத்தில் உள்ளீர்களா? எங்களது அவலம் உங்களுக்குத் தெரியவில்லையா, கோரப்படுகொலைகளுக்கு நீதி வேண்டும், கொலைகாரரைத் தூக்கில் போடு, நீதி தேவதையே ஏன் மௌனமாய் இருக்கிறாய்? இந்தநிலை மாறவேண்டும் இல்லையேல் தமிழன் இல்லை" உட்பட பலவாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு பாடசாலை மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

போரரட்டம் ஆரம்பமாகி 2மணித்தியாலங்களாக இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டிய எவரும் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தரவில்லை. அது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சிறுமியைக் கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் ஐந்து பேர் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சிறுமி தனியொருவரால் கொலைசெய்யப்படவில்லை, கூட்டாகச் சேர்ந்தே கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

தமது பிரதேசத்தில் இது போன்ற செயல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் போதைப்பொருள் பாவனை தமது பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது. அதனை உடனடியாகக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"எமது பிரதேசத்தை ஒதுக்கப்பட்ட பிரதேசமாகவே அனைவரும் சித்திரிக்கின்றனர். தற்போது இவ்வாறான பிரச்சினை நடைபெற்றுள்ளது என்று தெரிந்திருந்தும் எந்த ஒரு தீர்வுகளும் பெற்றுத்தராத நிலையில் தாமுண்டு தம் வேலைகள் உண்டு என்று இருக்கின்றனர். எமது பிரதேசத்துக்குள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற முக்கிய காரணம், மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளில் இருந்து இடைவிலகுகின்றமையே. விலகிய பிற்பாடு கஞ்சா, கசிப்பு, சாராயம் என்பவற்றைப் பாவித்து போதையேறி இந்தச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் அனைவரும் முன்வந்து செயற்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர். (4,114)

## சிறும்ிக்கு...

மாகாண அனைத்துப் பொது அமைப்புகளும், மக்களும் தமது போராட்டத்துக்கு ஆதரவு தரவேண்டும் என்றும் ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

சங்கத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காட்டுப்புலம் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை 6 வயதுப் பள்ளிச் சிறுமி றெஜினா மிகக் கொடூரமாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பாடசாலைச் சீருடைகளைக் களைந்து கழுத்துநெரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார். போதைப் பொருள்களுக்கு அடிமையான சமூக விரோதக் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தக்கொலை எமது ஊரில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற மூன்றாவது சம்பவமாகும். கைது செய்யப்பட்ட 6 பேரில் ஒருவரைத் தவிர மற்றைய 5 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். எமது ஊரில் மட்டுமின்றி போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களால் ஒட்டுமொத்த சமூகத்தினதும் பிள்ளைகளினதும் பாதுகாப்புக் கேள்விக்குறியாகியுள்ளது. ஆகவே பின்வரும் கேள்விகளை முன்வைத்து நாம் வடக்கு மாகாண அனைத்து . அமைப்புக்களும், மக்களும் எமது போராட்டத்துக்கு ஆதரவு தரவேண்டும் என்று வேண்டிநிற்கிறோம்.

1. கொலையாளிகளையும் உடந்தையாக இருந்தோர் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும்.
2. எங்கள் பெண்பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அனைத்தும் இல்லாது ஒழித்தல் வேண்டும்.
3. அதிகாரிகள் அனைவரும் இவ்வாறான சம்பவங்களில் விரைந்து நடவடிக்கைகள் எடுப்பதற்கு இதனுடைய உண்மையை அறிந்து சமூகக் காரணிகளை இல்லாது ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
4. எமது கிராமம் மட்டுமின்றி யாழ்ப்பாணத்தில் சகல இடங்களிலும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தி இவ்வாறான பாலியல் , சித்திரவதைகள், கொடுமைகள் நிறுத்த வழிவகை செய்யப்படல் வேண்டும்.

என்று மிகவும் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(4,114)

## மரண அறிவித்தல்



### பெனடிற் ரேமன்

நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிற் ரேமன் கடந்த (27.06.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெனடிற் (நடேஷ்) - அக்னெஸ் தம்பதிகளின் மகனும் சுவர்ணமாலாவின் அன்புக் கணவரும் ராஜீவ் (இந்தியா), சஜீவ், பிரதீப் (பிரான்ஸ்) நிகாலா, ஜெயதீவ் ஆகியோரின் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (29.06.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் தேவர்கட்டு இருதய ஆண்டவர் கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 11 . 1934



மறைவு
28 . 06 . 2018

### சின்னத்தம்பி துரைசிங்கம்

(சுழிபுரம் மேற்கு) (இளைப்பாறிய எழுது வினைஞர், இலங்கை புகையிரத திணைக்களம்)

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைசிங்கம் நேற்று (28.05.2018) வியாழக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்லம் தம்பதியரின் அன்புமருமகனும் நாகம்மாவின் அன்புக்கணவரும் தனபாலசிங்கத்தின் அன்புச்சகோதரரும் இரவீந்திரன் (இலத்திரனியல் உபகரணத்திருத்துனர்), மைதிலி (கட்டார்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தலேந்திரன் (கட்டார்), பானுமதி (பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் அன்புமாமனும் தாட்ஷாயினி (கட்டார்), இராகவன் (கட்டார்), கார்த்திகாயினி, கிருத்திகாயினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற்று திருவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் :
04 . 12 . 1944




விண்ணில் :
26 . 06 . 2018

அமரர். இராசா முருகேசு

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!





யாழ் நகர் விக்டோறியா வீதியில் அமைந்துள்ள யாழ். கலாலயா பயிற்சியகத்தில் இவ்வாண்டிற்கான 1ஆம் பிரிவில் கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், Facial பயிற்சிகளை நிறைவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மாணவிகள் அவர் தம் ஆசிரியைகளுடன் இருப்பதனையும், மேற்படி பயிற்சிகளில் மொத்தமாக உயர் புள்ளியைப் பெற்று சிறந்த மாணவியாக தெரிவான திருமதி கமல் சுபலட்சுமி அவர்களுக்கு பயிற்சி நிலைய இயக்குநர் விருதினை வழங்குவதனையும் காணலாம்.

## மாகாண...

தனர். போராட்டம் நடைபெற தீர்மானம் மேற்கொண்டபோதே போராட்டக்காரர்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு இந்தச் சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது. போராட்டம் நடைபெற்ற நேற்றைய தினமும்(நேற்றுமுன்தினம்) அறிவிக்கப்பட்டிருந்தும் நேற்றுக்கூட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வரவில்லை. பாடசாலை மாணவி ஒருவர் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டிருந்தபோதும் கல்வி அமைச்சராக இருப்பவர், அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டியவர் சம்பவம் நடைபெற்றதிலிருந்து இந்த பிரச்சினையில் தலையிடாமல் இருக்கிறார் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் விசனம்தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்துக்கு அயலூர் வாசியும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சருமான அனந்தி சசிதரன் ஒரு பெண் பிள்ளை கொல்லப்பட்டிருந்த சம்பவம் தெரிந்திருந்தும் அதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நேரில் சென்று ஆராயவுமில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டி, இவர்களுக்கெல்லாம் எதற்கு அமைச்சுபதவி என்றும் கேள்வியெழுப்பினர்.

சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இதற்குச் செவிசாய்க்க வேண்டும் என்றும் கோசம் எழுப்பினர். (4.114)

உ
சிவமயம்



இனுவில் திருப்பதி
அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
மஹாலட்சுமி தாயார் குடமுழுக்குத் திருமுகம்
01.07.2018 ஞாயிற்றுக்கிழமை

கோவிந்தன் அடியார்களே!

பெருமாளின் இணைபிரியா சக்தி அன்னை மஹாலட்சுமி. அதனால்தான் அகிலமெல்லாம் நிறைந்திருக்கும் பெருமாளை அலர்மேல் மங்கையுறை மார்பா என்று ஆழ்வார்கள் மஹாலட்சு தாயாரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இப்பெருமை மிகு பெரிய பெருமாளின் அருட்பிரசாத வடிவமாகிய மஹாலட்சுமி தாயார் பாற்கடலிலிருந்து உதித்ததுபோல் இந்து சமுத்திரம் கடந்து இணுவைத் திருப்பதியில் எழுந்தருளியுள்ளார். அத்தாயாருக்கு குடமுழுக்கென்னும் சம்புரோக்ஷணம் ஆனித்திங்கள் 17 ஆம் நாள் (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.35 மணியளவில் திருவோண நட்சத்திரமும் சிம்ம லக்கினமும் கூடிய சுபவேளையில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

கர்மாரம்பம்

- 29.06.2018 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு கோதோஹன முகூர்த்தத்தில் கணபதி வழிபாட்டுடன் ஆரம்பம். மாலை 4.00 யாகாரம்பம்.
- 30.06.2018 சனிக்கிழமை காலை 8.00 முதல் மாலை 5.00 மணிவரை அடியார்கள் மஹாலட்சுமி தாயாருக்கு பால் அபிஷேகம்.
- 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமானுக்கு 108 கலச மஹாபிஷேகம். தொடர்ந்து கும்பாபிஷேக தின மணவாளக் கோல தரிசனம்.

காலை 9.35 மணிக்கு மஹா கும்பாபிஷேகம், மஹாலட்சுமி தாயாரின் விசேட தரிசனம். தொடர்ந்து மஹாபிஷேகம். காலை 11.00 மணிக்த லட்சுமி நாராயணர் திருக்கல்யாணம். பகல் 12.30 மணிக்கு மஹாலட்சுமி தாயார் கருவறைப் பிரவேசம். லட்சுமி நாராயணர் ஏகாந்தசேவை.

அடியவர்களுக்கான ததீயாராதனை (அன்னதானம்) வழங்கப்படும்.

தொ.பே.இல.
021 224 2300
(CS/17836)(11)
ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 295
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.06.28
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 77,920,285/-
வெற்றி இலக்கங்கள்
14 24 62 71
ஆங்கில எழுத்து J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT A என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1478
சீட்டிழுப்பு திகதி 28.06.2018
வெற்றி இலக்கங்கள்
13 16 32 61
ஆங்கில எழுத்து Z
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட
ரூ 23, 163, 172/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2018.07.02 திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 155
சீட்டிழுப்பு திகதி ▶28.06.2018 நீலம்
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 34 39 56
விதி எண் 08
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 30,663, 760/=
2019.06.30 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



வீரமாகாளியம்மன் கோவில் மகோற்சவத்தில்
26 ஆம் நாள் பூங்காவன திருவிழா

மாலை 6 மணிக்கு வசந்தமண்டபபூசையுடன் ஆரம்பமாக உள்ளது தொடர்ந்து மணிமண்டபத்தில் விசேட ஆராதனைகள் நடைபெற்று அதனைத்தொடர்ந்து விசேடமாக அமைக்கப்பட்ட மலர்பந்தலில் அம்பிகை வெளிவீதி உலா வரவுள்ளார். அனைத்துப் பக்தர்களும் அம்பிகையின் ஆசீர்வாதத்தை பெற்றருள்வீர்.

அதனைத் தொடர்ந்து
நாதஸ்வர இசைமணி
ஈழுநல்லூர் உதயசங்கர் குழுவினர் (சங்கர்)



நாதஸ்வரம்
U.உதயசங்கர்
M.தெய்வகணபதி
T.நவின்குமார்
B.பரணிகரன்



தவில்
ம. கார்த்திகேயன்
R.சசிஸ்குமார்
S.ரமேஷ் கண்ணா
B.கவிவர்மன்



முல்லைச் சகோதரி இசைக்குயில் திருமதி புவனா இரத்தினசிங்கம் அவர்களின் பக்தி கான இசையும் நாச்சிமார் கோயிலடி ஸ்ருதி வேந்தன் திரு. அ. ஜெயராமன் அவர்களின் வயலின் சோலோவும் இடம்பெறும்.

பாட்டு - திருமதி புவனா இரத்தினசிங்கம், செல்வன் S. யதுஷன், செல்வி S. மடோனா,
வயலின் - ஸ்ருதிவேந்தன் A. ஜெயராமன், மிருதங்கம் - கலாபூஷணம் P. பாலசுப்பிரமணியம், தபேலா - கலாவித்தகர் சதாவேல்மாறன், கீபோட் - இசைக்கலைமணி N. செல்வச்சந்திரன், முகர்சிங் - செல்வன் ஜெ . சாரங்கன்

தேவன் சவுண்ட் பண்டத்தரிப்பு, பிரான்பற்று.
நவா ஒளியமைப்பு பண்டத்தரிப்பு.
விசேட மேடை அலங்காரம் : அழகர் அச்சுவேலி.

மணிமண்டபபூங்காவன உபயகாரர் :
நியூராம் கன்செக்சன்.

# பயன்தரும் மருத்துவக் குறிப்புகள் சில...

நோய் வந்தாலே மருத்துவரிடம் ஓடுவதை விட்டுவிட்டு வீட்டில் உள்ள பொருள்களைக் கொண்டே எளிதாக சரிசெய்யலாம்.

- உணவுக்கு பின் தண்ணீரில் சிறிது கருப்பட்டியை கரைத்து குடிக்கவும். இதனால் வயிற்றில் அமிலம் சுரப்பது குறையும்.
- துளசி இலைகள் போடப்பட்ட நீரை தினமும் குடித்து வந்தால் தொண்டைப் புண் ஏற்படாது.
- 1/4 தேக்கரண்டி கரு மிளகுத் தூள், 3 தேக்கரண்டி எலுமிச்சை சாறு, ஒரு கோப்பை நீரில் ஒரு தேக்கரண்டி தேன், இந்த கலவையை 34 மாதங்களுக்கு தொடர்ந்து உட்கொண்டால் உடல் எடை குறையும்.
- காலை உணவிற்கு முன் தினமும் ஒரு தக்காளி சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.
- தினமும் காலையில் முழுதாக வளர்ந்த 10-12 கருவேப்பிலைகளை சாப்பிட்டு வரவும், 3-4 மாதங்களில் உடல் பருமனில் மிகுந்த மாற்றத்தை காணலாம்.
- அரிசி, உருளை கிழங்கு போன்ற மாவுச் சத்துப் பொருள்களை குறைக்கவும், பதிலாக கோதுமை எடுத்துக் கொள்ளலாம்.
- கடுமையான இருமல் இருந்தால் 3 கோப்பை தண்ணீருடன் வெற்றிலையையும், மிளகையும் போட்டு கொதிக்க வைத்து குடித்து வரவும்.
- பல் வலி குறைய துளசி இலை 2, கொஞ்சம் உப்பு மற்றும் மிளகுத்தூள் ஆகியவற்றை வலி இருக்கும் இடத்தில் வைத்து அழுத்தி வரவும். வலி குறையும்.
- சருமத்தில் உள்ள சிறு தழும்புகளைப் போக்க குளிக்கும் நீரில் துளசி இலைகளை போட்டு குளிக்கவும். விரைவில் தழும்புகள் மறையும்.
- குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் மற்றும் இருமலுக்கு நீருடன் தேனைக்கலந்து கொடுத்தால் விரைவில் இருமல் நிற்கும். காய்ச்சல் குறையும்.
- கரட் மற்றும் தக்காளிச் சாறு இதனுடன் கொஞ்சம் தேன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் உடல் வலிமை பெரும்.
- வயிற்றுப் போக்கை உடனடியாக நிறுத்த கொய்யா இலைகளை மென்று தின்றால் போதுமானது.

## உடல் ஆரோக்கியத்துக்கு மருந்தாகும் நல்லெண்ணெய்



எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெயால் எம்முடைய புத்திக்குத் தெளிவு உண்டாகும். கண்களுக்கு நல்ல குளிர்சியுண்டாகும். மனதிற்கு நல்ல மகிழ்ச்சியுண்டாகும். நல்ல தேகபுஷ்டி உண்டாகும். நல்ல பலம் உண்டாகும். உடலில் நல்ல ஒளியுண்டாகும். வாலிபத் தன்மை என்றும் நிலைத்திருக்கும். கண்கள் சம்பந்தப்பட்ட நோய், செவி நோய், கபால அழல்நோய் காச நோய் மட்டுமன்றி உடல் புண்களும் குணமாகும்.

ஆண்களைப் பொறுத்தவரையில் சனியும் புதனும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். பெண்களைப் பொறுத்தவரையில் செவ்வாயும் வெள்ளியும் கட்டாயம் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

அதிகாலையில் எண்ணெய் தேய்த்து சூரிய உதயத்திற்கு முன்னால் குளிக்க வேண்டும். எண்ணெய் தேய்த்துக் கொண்டதும் உடனே குளிக்க கூடாது. குறைந்தது அரைமணி நேரமாவது பொறுத்துதான் குளிக்க வேண்டும்.

நல்லெண்ணெய் அவ்விதமே உபயோகிக்கக் கூடாது. காய்ச்சி ஆற வைத்துதான் குளிக்க வேண்டும். அதிலும் வெந்நீரில்தான் குளிக்க வேண்டும். சோப் உபயோகிக்கக்கூடாது. சீயக்காய்த்தூள் அல்லது அரைப்பு தேய்த்துதான் குளிக்க வேண்டும். எண்ணெய் தேய்க்கும்போது, எண்ணெயை இருதயத்தை நோக்கித் தேக்க வேண்டும். இவ்விதம் தேய்த்து வந்தால் தோல் நல்ல பளபளப்புடன் காணப்படும். உடற்சூடு கண்டிப்பாகத் தணியும்.



## இது புதுசு

பெண்களுக்கான கழுத்து மாலை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



## திராட்சையின் அற்புதமான மருத்துவக் குணங்கள்

திராட்சைச்சாறை தினமும் பருகிவர மலச்சிக்கல் விலகும். முகம் அழகு பெறும். மூலவியாதி, மூலச்சூடு குறையும். கண் பார்வை தெளிவடையும். குடல் புண் விலகும். குருதி சுத்தமடையும். வயிற்றுவலி, வயிற்று உளைச்சல் சரியாகும். உடல் பருமனாக உள்ளவர்கள் தினமும் திராட்சைச் சாறு பருகுவது நல்லது. திராட்சைச் சாறு பல வியாதிகளைக் குணப்படுத்தும். பழச் சாறுகளில் திராட்சைச்சாறு மிகவும் அவசியமானது.

★ இரண்டு குவளை திராட்சைப் பழரசம் குடிப்பது, ஐந்து கோப்பை பச்சைக் காய்கறிகளை உண்பதற்குச் சமம். குருதி ஓட்டத்தைத் துரிதமாக்கும்; குருதி ஆங்காங்கே உறைவதைத் தடுக்கும்.

★ ஒரு குவளை திராட்சை ஜூஸில் 80 சதவிகிதம் தண்ணீரும், 60 சதவிகிதம் கலோரிகளும் இருக்கும். நார்ச்சத்து அதிகமுள்ள இதனை "டயட்"டில் இருப்பவர்கள் தயங்காமல் குடிக்கலாம்.

★ "ரெஸ்வெரட்ரால் (Resveratrol)" எனப்படும் ஒரு வகை இயற்கை அமிலம் திராட்சை சாறில் அபரிமிதமாக உள்ளது. இந்த அமிலம் புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சியை முடக்குவதுடன், தேவை இல்லாத கட்டிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

★ பெண்களுக்குச் சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனின் வேதிவினை மாற்றத்தை திராட்சைச் சாறு (Grape juice) கட்டுப்படுத்துவதால், மார்பகப் புற்று நோய்க்கான அபாயம் குறைக்கப்படுகிறது.ஆகையால், எல்லோரும் திராட்சைப் பழரசம் அருந்தினால், முக்கியமாக சுத்தமான திராட்சைப் பழங்களின் மூலம் தயாரிக்கப்படும் பழரசத்தை அருந்தினால் ஆரோக்கியமா இருக்கலாம்.

★ எல்லா வகையான திராட்சையிலும் பொதுவாக விற்றமின் ஏ உயிர்சத்து அதிக அளவில் காணப்படும். பொதுவாக சரியாக பசி எடுக்காமல் வயிறு மந்த நிலையில் காணப்படுபவர்கள் கறுப்பு திராட்சை எனப்படும் பன்னீர் திராட்சையில் அரை குவளை சாறு எடுத்து அதனுடன் சர்க்கரை சிறிது சேர்த்து அருந்தி வந்தால் மந்த நிலை நீங்கி நன்றாக பசி எடுக்கும்.

★ பெண்களுக்கு ஏற்படும் கோளாறுகளுக்கு திராட்சை சாறு ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும். மாத விலக்கு தள்ளிப்போதல், குறைவாகவும், அதிகமாகயும் போதல் போன்ற குறைபாடுகளுக்கு கறுப்பு திராட்சை சாறு அரை குவளையில் சிறிது சீனி சேர்த்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் முறையான கால இடைவெளியில் மாதவிலக்கு வெளியாகும். திராட்சை சாற்றினை தொடர்ந்து 21 நாள்கள் சாப்பிட்டு வரவேண்டும்.

★ திராட்சையில் இருந்து தயாரிக்கப்படும் வைன் சிறந்த அழகு பொருளாக சருமத்திற்கு இளமை தரும் பொருளாக கருதப்படுகிறது. திராட்சை விதையில் உயர்தர பாலிஃபினால் உள்ளது. ஆன்டி ஆக்ஸிடென்ட்ஸ் காணப்படுகிறது. இது சருமத்தில் பாதிக்கப்பட்ட கலங்களை உயிர்ப்பிக்கிறது. இதில் விற்றமின் சி, இ, ஏ (பீட்டா கரோட்டீன்) போன்றவை காணப்படுகின்றன. இது மூளையை சுறுசுறுப்பு ஆக்குவதோடு அனிச்சை செயலை உற்சாகப்படுத்துகிறது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 100 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 60 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 120 | 160 | 200 |
| பாகல் | 280 | 300 | 360 | 240 |
| க.கிழங்கு | 100 | 140 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 35 | 40 | 40 |
| தக்காளி | 280 | 280 | 260 | 260 |
| வாழைக்காய் | 40 | 80 | 80 | 50 |
| கீரை | 40 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 400 | 300 | 300 |
| புடோல் | 120 | 100 | 120 | 120 |
| கோவா | 120 | 180 | 180 | 160 |
| வெண்டி | 100 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 320 | 250 | 320 | 260 |
| லீக்ஸ் | 240 | 260 | 360 | 360 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 125 | 130 | 130 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 | 150 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 360 | 240 |
| கரட் | 280 | 280 | 360 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 800 | 600 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 200 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**


சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வடக்கு- கிழக்கு கால்பந்துத் தொடர்**

வடக்கு-கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதோட்டம் எவ்.சி. அணியை எதிர்த்து வவுனியா வாரியர்ஸ் அணி மோதவுள்ளது.

**நக்கீரன் ச.ச.நி. கால்பந்தாட்டம்**

நக்கீரன் சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்துத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி அணியை எதிர்த்து வரணி நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து பொலிகை பாரதி 'பி' அணி மோதவுள்ளது. (ம-23)




# வல்வையை வென்றது ரில்கோ எப்.சி. கழகம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் இவான்ஸ், மாமாஸ் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வல்வை எவ்.சி. அணியை வீழ்த்தியது ரில்கோ கொங்கியூரெர்ஸ் அணி.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரெர்ஸ் அணியை எதிர்த்து வல்வை எவ்.சி. அணி மோதியது.

ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் வல்வை எவ்.சி. அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் யூட் சுபன். பதிலுக்கு ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் ரில்கோ அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மாமாஸ்.

47ஆவது, 60ஆவது நிமிடங்களில் ரில்கோவின் சார்பாக அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவுசெய்தார் இவான்ஸ். ஆட்டநேர முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ரில்கோ அணி வென்றது. இவான்ஸ் சிறந்த வீரராகத் தெரிவானார். (ம-23)

## 'மத்தியின் போர்' ஜூலை மத்தியில்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 202ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மத்தியின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்களின் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தொடரில் 16 அணிகள் பங்குபற்றுகின்றன. இறுதியாட்டம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியன்று நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

## உதயசூரியன் அணி போராடிச் சாதித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 29

கணேசானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது உதயசூரியன் அணி.

கணேசானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலாஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் அணி வென்றது. (ம-23)

## கராத்தே தொடரில் நவீல்ட் சாதித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் நடத்திய கராத்தே தொடரில் கைதடி நவீல்ட் பாடசாலை அணி கணிசமான அளவு பதக்கங்களைக் கைப்பற்றியது.

நெல்லியடி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் எஸ்.லக்சனா தங்கப் பதக்கத்தையும், 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான காட்டாப்போட்டியில் கே.ஜதுசா வெள்ளிப் பதக்கத்தையும், பெண்களுக்கான குழுநிலை காட்டாப் போட்டியில் எஸ்.லக்சனா, கே.ஜதுசா, வை.அஜந்தனி ஆகியோர் தங்கப் பதக்கங்களையும், ஆண்களுக்கான குழுநிலை காட்டாப்போட்டியில் எஸ்.மதிவதன், ஆர்.மாதுளன், ஜீ.நிரூபன் ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் கைப்பற்றினர். (ம-23)

## வென்றது பாரதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

கணேசானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி கிழக்கு லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாரதி அணி வெற்றி பெற்றது.

கணேசானந்தாவின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாரதி அணியை எதிர்த்து அருணோதய அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் பாரதி அணி வென்றது. (ம-23)



# கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறுகின்ற நாளின்போது சூதாட்டக்காரர்களின் வருமானத்தைக் கவனியுங்கள்

*அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கை கிரிக்கெட் அணி விளையாடுகின்ற நாள்களில் அதிலும் குறிப்பாக அணி தோல்வியடையும் ஆட்டங்களின்போது இந்தநாட்டில் உள்ள ரேஸ்புகி மற்றும் ஆட்ட நிர்ணயம் செய்பவர்களின் வருமானத்தை சோதனை செய்ய வேண்டும் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீரவிடம் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வேண்டுகோள்விடுத்துள்ளார். உடுகம்பொல இரஜமஹா விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் கிரிக்கெட் விளையாடும் காலங்களில் ஆட்டநிர்ணயம் என்பது இருக்கவில்லை. ஆனால் இன்று சூதாட்ட வியாபாரிகள் கிரிக்கெட் நிர்வாகத்துக்குள் வந்து கிரிக்கெட்டை சீரழித்துள்ளனர். மேலும் வெற்றிதோல்விக்கு மட்டுமல்லாது, யார் பந்து வீசுவது, யார் விக்கெட் எடுப்பது, எத்தனை ஓட்டங்களை குவிப்பது போன்ற எல்லா செயற்பாடுகளுக்கும் இன்று சூதாட்டம் செய்கின்றனர்.

இந்த் மாதிரி இழிவான செயல்களினால் கிரிக்கெட் விளையாட்டு கீழ்நிலைக்கு சென்றுவிட்டது. இதை நிறுத்த முடியாத நிலையில் நாம் உள்ளோம். இதற்கு காரணம் சூதாட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்களே கிரிக்கெட் நிர்வாகத்தில் உள்ளனர். இதன் பிரதிபலிப்பே நாம் கிரிக்கெட்டில் தொடர் தோல்விகளை சந்தித்து வருகின்றோம். கிரிக்கெட்டில் எந்நேரத்திலும் தோல்வி ஏற்படலாம். இது சாதாரண விடயம். ஆனால் இன்று இலங்கை கிரிக்கெட் அணி தொடர் தோல்வியை சந்தித்து வருகின்றது. குறிப்பாக நாம் சிம்பாப்பே மற்றும் ஆப்கானிஸ்தான் அணியுடனான ஆட்டங்களில் தோல்வியை சந்தித்திருக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் தோல்வியடைந்தோம். நாம் பங்களாதேஷ் அணியுடனான தோல்வியடைந்த விதம் சரியானதல்ல.

ஏன் இந்த ஆட்டங்களில் தோல்வியடைந்தோம். இந்த ஆட்டங்கள் இடம்பெற்ற காலங்களில் சூதாட்டக்காரர்களின் வருமானத்தை கவனிக்க வேண்டும். இன்று கிரிக்கெட் நிர்வாகத்தில் உள்ளவர்கள் உயர் மட்டத்தில் இருப்பதற்கு காரணம் அவர்கள் சூதாட்டம் மற்றும் புக்கி காரர்களுடன் தொடர்புவைத்திருப்பதாலேயே. இதனால் ஆட்டத்தில் ஏற்படுகின்ற தோல்வியும் ஆட்டநிர்ணயமும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உள்ளதாக தென்படுகின்றது. இதன் காரணமாக நான் நிதியமைச்சர் மங்கள சமரவீரவிடம் முன்வைக்கும் கோரிக்கையானது ஆட்டநிர்ணயம் செய்பவர்களின் வருமானத்தை சோதனைசெய்ய வேண்டும் என்று. இது தொடர்பாக நாம் எழுத்துமூலமான கோரிக்கையை நிதியமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்" என்று ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)

# ஜேர்மனி வெளியே

## நடப்புச் சம்பியன் நடையைக் கட்டிய சோகக் கதை

ரஷ்யாவில் நடைபெற்றுவரும் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது நடப்புச் சம்பியன் ஜேர்மனி. இந்தத் தொடரில் கிண்ணம் வெல்லும் அணிகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஜேர்மனி அணி முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டமை ஜேர்மனியில் மட்டுமல்லாது ஒட்டுமொத்தக் கால்பந்தாட்ட உலகிலும் பேரிடியை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனி லீக் ஆட்டத்தில் மெக்சிக்கோவுக்கு எதிராக 0:1 என்ற கோல் கணக்கில் தோல்வியையும், சுவீடனுக்கு எதிராக 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியையும் பதிவுசெய்திருந்தது. இதனால் தென்கொரியாவுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் அந்த அணி வெற்றிபெற்றால் மட்டுமே 16 அணிகள் விளையாடும் சுற்றுக்கு அதாவது காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதிபெற முடியும் என்கிற நிலை இருந்தது. ஒப்பீட்டளவில் ஜேர்மனி தென்கொரியாவை விட இமாலயப் பலமுள்ள அணி. இதனால் அந்த அணி தென்கொரியாவை 'சிரமமின்றி' அடக்கியாளும் என்கிற கருத்துக் கணிப்பே பொதுவாக நிலவியது.



ஆரம்பம் முதலேயே ஜேர்மனிக்கு நிகராக ஈடுகொடுத்து விளையாடியது தென்கொரியா. 'உயிரைக் கொடுத்து விளையாடினார்கள்' என்று பேசுவார்களே அத்தகைய ஆட்டம் தென்கொரியாவினுடையது. ஜேர்மனிக்கு ஏதோவொரு பேரிடி இறங்கப்போகிறது என்பது ஆட்டம் பதின்ம நிமிடங்களை அடைவதற்குள்ளேயே ஓரளவு புலப்பட்டு விட்டது. வாய்ப்புக் கிடைக்காதது ஒருபக்கம் இருந்தாலும் மறுபக்கம் கிடைத்த வாய்ப்பைக்கூட ஜேர்மனிய வீரர்கள் சொதப்பித் தள்ளினார்கள். முல்லர் கூட விதிவிலக்கில்லை. 'அணிக்குப் பாராமாக இருந்தார்' என்று சொல்லக்கூடிய விதத்தில் அமைந்தது 'ஜாம்பவான்' முல்லரின் ஆட்டம். கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.



இரண்டாம் பாதியில் இரண்டு அருமையான வாய்ப்புக்கள் ஒஸிலுக்குக் கிடைத்தன. இரண்டையும் வீணாக்கினார் அவர். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல் எதுவும் பதிவாகவில்லை. 92ஆவது நிமிடத்தில் தென்கொரியாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் கிம் ஜோங் கிரவுண். இந்தக் கோல் பதிவான பின்னர் கோல் காப்பாளர் என்கிற நிலையில் இருந்து மாறி மைதானத்தில் மத்திய பகுதி வரை முன்னேறிச் சென்று விளையாடினார் ஜேர்மனியின் கோல் காப்பாளர் மனுவல். ஆக, ஜேர்மனியின் கோல் பரப்பை தென்கொரியா ஆக்கிரமித்தால் இரண்டாவது கோலை ஜேர்மனி வாங்கிக்கட்டுவது உறுதி என்கிற நிலை. நடந்ததும் அதுவேதான். எதிர்ப்பு ஏதும் இல்லாமல் தென்கொரியாவின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் சண் மின். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது தென்கொரியா.

**மோசமான பதிவு**

நடப்புச் சம்பியன் என்கிற அந்தஸ்துடன் களமிறங்கும் அணிகள் முதல் சுற்றுடன் வெளியேறுவது இதற்கு முன்னர் நடவாத ஒன்றல்ல. பிரான்ஸ் 2002ஆம் ஆண்டிலும், இத்தாலி 2010ஆம் ஆண்டிலும், ஸ்பெய்ன் 2014ஆம் ஆண்டிலும் அவ்வாறு வெளியேறியிருந்தன. இந்த வரிசையில் தற்போது ஜேர்மனியும் இணைந்துள்ளது. (ம)

# அயர்லாந்தை எதிர்த்து இந்தியா 'கழக மட்ட'(மான) விளையாட்டு

## வென்றதால் விமர்சனத்தைத் தவிர்த்தது

அயர்லாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ரி-20 ஆட்டத்தில் ஜாம்பவானான இந்திய அணி தனது தரநிலைக்கு முரணாக மட்டமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று அனைத்துத் துறைகளிலும் இந்திய அணி எக்கச்சக்கமாக சொதப்பித்தள்ளியது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைக் குவித்தது. ரோகித் 97 ஓட்டங்களையும், தவான் 74 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவருக்கும் ஏகப்பட்ட பிடியெடுப்பு வாய்ப்புக்களைத்தவறவிட்டதுஅயர்லாந்து. அணித்தலைவர் கோல்லி டக்அவுட். பந்துவீச்சில்சேஸ் 4 இலக்குகளையும், கெவின்ஓ் இலக்கையும்கைப்பற்றினர். அயல்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. சனொன் 60 ஓட்டங்களைப் பெற்றார். அவருக்கு மாத்திரம் நான்கு பிடியெடுப்புக்கள் இந்திய அணியால் தவறவிடப்பட்டன. களத்தடுப்பிலும் பவுண்டரிகளைக் கோட்டை விடுவதில் இந்தியா தாராளம் காட்டியது. எனினும் குல்தீப், சாகரின் சுழல் பந்துவீச்சால் அயலாந்து கட்டுண்டது.

குல்தீப் 4 இலக்குகளையும், சாகல் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

# சேவாக் கதையை முடித்ததுபோல் என் கதையையும் முடிக்காதீர்கள்

## டோனியுடன் மோதல் இல்லை அஸ்வின் பதற்றமாகப்-பதில்



டோனியுடன் மோதல் என்று தெரிவித்து சேவாக்கின் கதையை முடித்ததுபோல் எனது கதையையும் முடித்து விடாதீர்கள் என்று தெரிவித்தார் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் 'உங்களுக்கும் டோனிக்கும் மோதல் உள்ளதாகச் சொல்லப்படுகிறதே..?' என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அஸ்வின் இவ்வாறு தெரிவித்தார்.

'ஏற்கனவே டோனிக்கும், சேவாக்குக்கும் மோதல் இருப்பதாகக் கூறி சேவாக் கதையை முடித்துவிட்டது போல் என் கதையையம முடித்துவிடாதீர்கள். டோனியுடன் எனக்கு எந்தவிதமான பனிப்போரும், மோதலும் இல்லை. அனைத்து வீரர்களுடன் சகஜமாகப் பழகும் விதத்திலேயே டோனியுடன் பழகுகிறேன். எனக்கும் டோனிக்கும் எந்தவிதமான போட்டியும் இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான இந்திய அணியில் மீண்டும் வாய்ப்புக் கிடைத்தால் அதை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துப் பயன்படுத்திக் கொள்வேன். ஆனால் அது தேர்வாளர்களிடத்தில் உள்ளது' என்று அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900/=Kg
ஜேர்மனி-700/=Kg
நெதர்லாந்து-700/=Kg
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
0768228240
V2 TRAVELS

வட இந்திய காசியாத்திரை
ஆரம்பம் 04.08.2018 யாத்திரீகர் 15 நாள்கள் 16
**தரிசிக்கும் இடங்கள் :-** டெல்லி : நாராயணர் கோயில். இந்திராகாந்தி வீடு. நேரு வீடு. இந்திராகாந்தி சுடப்பட்ட இடம். ஹரித்துவார் (7 இடங்கள்) ரிஷிகேஷ் (7 இடங்கள்) கங்கா பூசை (ஆர்த்தி) குருச்சேத்திரம் பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடங்கள் பிரம்ம தீர்த்தம் நீராடல் கங்கைகளில் நீராடல். காசியில் 15 இடங்கள். கங்கா பூசை. கயா. புத்தகயா. அலகாபாத். (கங்கா. யமுனா. சரஸ்வதி) திருவேணிசங்கமம். சீத்தாமடி. ஆக்ரா (தாஜ் மஹால்). மதுரா கிருஸ்ண ஜென்மபூமி. பிரேமந்திர். பிரமாண்டமான கிருஸ்ணர் கோயில். செங்கோட்டை. இராமேஸ்வரம். உத்திரகோசமங்கை. திருப்புலானி. நவபாஷானம். பஞ்சமுக ஆஞ்சநேயர். அப்துல்கலாம் மணி மண்டபம். மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம். மற்றும் வேறு பல இடங்களும் காணலாம்.
**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**
**பெற்றுக்கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்**
4 விமான பயண டிக்கட். மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு. காப்பி. ரீ. குடிநீர் 2 பேருக்கு. வெஸ்ரன்கொமட். குளியலறை. இணைந்த அறைகள். பயணம் முழுவதும் A/C வாகன வசதி. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ். செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.
**"சென்றவர்களை கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"**
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
T.P - 077 768 0102, 077 736 2154
E.mail : sriranganathan2601@gmail.com
sriranganathan1944@gmail.com
(in/6922)
(13.17)
Facebook : Sridevisriranganathan.thuraiappa

பதவி வெற்றிடம்
**சந்தைப்படுத்தல் முகாமையாளர் (Marketing Manager)**
- சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது 05 வருட அனுபவம்.
- கணனி தொடர்பான தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் அறிவு.

**கணக்காளர் (Accountant)**
- Bcom/ HNDA அல்லது பொருத்தமான பட்டதாரிகள் கணணி அறிவு(Accounting Package) உடையவராக இருத்தல் வேண்டும்.

**காட்சியறை முகாமையாளர் (ShowRoom Manager)**
- கணனி தொடர்பான தொழில்நுட்பஅறிவு மற்றும் முகாமைத்துவ முன் அனுபவம்.

**தொழில்நுட்பவியலாளர் 1 (Technician 1)**
- கணனி தொழில்நுட்பஅறிவு உடையவராகவும் குறைந்தது 3 - 5 வருட முன் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தொழில்நுட்பவியலாளர் 2 (Technician 2)**
- பிறின்டர், போட்டோகொப்பி திருத்துவதில் ஆர்வமுடையவராகவும் இத்துறையில் தரமான முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**கிராபிக் டிசைனர் (Graphic Designer)**
- தங்களால் செய்யப்பட்ட மாதிரிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். சிறந்த அனுபவம்.

**பயிலுனர்கள் (Trainees)**
- கண்காணிப்பு கமரா (CCTV),கணனி, பிறிண்டர், போட்டோகொப்பி இயந்திரம் போன்றவற்றை திருத்துவதற்கு ஆர்வம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இருமாவட்டங்களிலும் பணிபுரியக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு : விண்ணப்பதாரர்கள் யாவரும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும், முன்அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். பொருத்தமான கவர்ச்சிகரமான வேதனம், தரகுபணம் மற்றும் EPF, ETF வழங்கப்படும்.**
**கணக்காளர், காட்சியறை முகாமையாளர் பதவிக்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.**

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் 2018.07.01 ற்கு முன்னராக தங்களது சுய விபரக்கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

NALIN Information Technologies(Pvt)Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 0777 66 79 75



கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற நைஜீரியா - ஆர்ஜென்ரீனா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின்போது ஆர்ஜென்ரீனா அணியின் ரசிகர்கள் சிலர், மெஸ்ஸியை கால்பந்தின் கடவுள் போன்று சித்திரிக்கும் வகையிலான ஒளிப்படம் பொறிக்கப்பட்ட பதாகையை ஏந்தியிருந்தனர். (ம)

# முன்னேறியது பிரேசில்

உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்று முன்தினம் இரவுநடைபெற்ற ஆட்டத்தில் சேர்பியாவை வீழ்த்தி காலிறுதிக்கு முதல் சுற்றுக்கு முன்னேறியது பலம் வாய்ந்த பிரேசில் அணி.



காலிறுதிக்கு முன்னைய சுற்றான 16 அணிகள் விளையாடும் சுற்றுக்குச் செல்ல வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்கிற நிலைதான் இரண்டு அணிகளுக்கும் இருந்தது. இதன்படி ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் மின்னல் வேகப் போராட்டத்தை வெளிப்படுத்தின.





வழக்கம்போன்று பிரேசில் அணியின் வீரர் நெய்மர் நான்கு எதிர் வீரர்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் பிரேசிலின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பவுலினோ. 1:0 என்ற கோல் கணக்கில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 68ஆவது நிமிடத்தில் தியாகோ சில்வா பிரேசிலின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். சேர்பியா கடும் முயற்சி செய்த போதிலும் மாற்றம் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றது பிரேசில்.

16 அணிகள் விளையாடும் சுற்றில் (காலிறுதிக்கு முன்னைய சுற்று) மெக்சிக்கோவை ஜூலை மாதம் இரண்டாம் திகதி எதிர்கொள்கிறது பிரேசில் அணி. (ம)

வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் இருபாலாரும் விரும்பத்தக்கது.
(IN/7152)(11)
077 348 2634, 077 526 9182

மாபெரும் பொருளியல் கருத்தரங்கு
பிரபல ஆசிரியர்
R.தர்ஷன் (B.B.A Spl in Fm)
இடம் :
பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
40 மணித்தியாலங்கள்
ஆரம்பம் : 06.07.2018
வெள்ளி காலை 8.30 A.M.
- PART = II 05 வினாக்களுக்கானமுழுமையான தயார்படுத்தல். (உயர்தர விளக்கத்துடன்)
- PART = I 03 மாதிரி வினாப்பத்திரங்களும் PART = II 03 மாதிரிவினாப்பத்திரங்களும் செய்விக்கப் படும்.
- எதிர்பார்ப்பு வினாக்களை கொண்ட வினா விடை கையேடுகள்.
- புள்ளி விவரங்கள். தேசிய கணக்கீட்டின் புதிய வெளிப்படுத்துகை.

2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மாவட்டநிலை 1, 2
2017 ஆம் ஆண்டு மீண்டும் மாவட்டநிலை 01, 02 உட்பட அநேகமான மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு தெரிவானவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Note : வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். வினாப்பத்திரம், கையேடுகள் வரையறுக்கப் பட்டளவு தொகை அச்சிடப்படவுள்ளதால் உங்கள் அனுமதிகளை 02.07.2018 இற்கு முன்னர் உறுதிப் படுத்தி பெற்றுக்கொள்ளவும்.
கட்டணம் : 1500 ரூபா.
(C7157/15/18)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.